# தொல்காப்பியம்

## பொருளதிகாரம்

## தொகுதி -2

தமிழண்ணல்

புதிய முறை எளிய உரை

# தொல்காப்பியம்

## பொருளதிகாரம்

தொகுதி - 2

**களவியல், கற்பியல், பொருளியல்**

**தமிழுண்ணல்**

**விற்பனை உரிமை**

**மீனாட்சி புத்தக நிலையம்**

மயூரா வளாகம், 48, தானப்ப முதலி தெரு, மதுரை - 625 001.

தொலைபேசி: அலுவலகம் : 2345971 வீடு : 2560517

ஈமெயில்: meenakshiputhakam@hotmail.com

முழுவதும் திருத்திய முதற் பதிப்பு : நவம்பர், 2010.
திருவள்ளுவர் ஆண்டு : 2041, கார்த்திகை
உரிமை : உரையாசிரியர்க்கு
விலை உரூவா : **55.00**

## நூல் விவரம்

| | | |
|---|---|---|
| நூலின் பெயர் | : | தொல்காப்பியம் பொருளதிகாரம் தொகுதி - 2 |
| உரையாசிரியர் பெயர் | : | தமிழண்ணல் |
| முதற்பதிப்பு | : | நவம்பர், 2010 |
| நூலின் தன்மை | : | இலக்கண விளக்கம் |
| நூல் அளவு | : | 14 x 22 செ.மீ. டெம்மி |
| தாள் | : | வெள்ளைத்தாள் |
| அச்சு எழுத்து அளவு | : | 12 புள்ளி |
| பக்கங்கள் | : | 124 |
| நூலின் விலை | : | உரூவா. **55.00** |
| அச்சிட்டோர் | : | மோனார் கிராபிக்ஸ், சென்னை. |
| ஒளி அச்சுக் கோர்வை | : | ஆதவன் பிரிண்டர்ஸ், மதுரை. |
| வெளியீடு | : | சிந்தாமணிச் செல்வம் |

---

SELLING RIGHTS

**MEENAKSHI PUTHAKA NILAYAM**

Mayura Complex 48, Dhanappa Mudali Street, Madurai - 625 001.
☎ Off : 2345971 Resi : 2560517
E-Mail: meenakshiputhakam@hotmail.com

# முன்னுரை

**தொ**ல்காப்பியப் பொருளதிகாரம் மிக விரிவானது. வேறு மொழிகளில் எழுத்திற்கும் சொல்லிற்கும் எழுதப்படுவனவே இலக்கணம் எனப்படும். தொல்காப்பியர் பொருளுக்கும் இலக்கணம் வகுத்திருப்பது புதுமையானது. வடமொழி உட்பட எம்மொழியுடனும் தொடர்பற்ற தனித்தன்மையுடையது தொல்காப்பியம் என்பதற்கு இது ஒரு அடிப்படையான சான்றாகும்.

மேலும் இதில் தமிழுக்கேயுரிய அகத்திணை, புறத்திணைகளுக்கு இலக்கணம் கூறப்பட்டுள்ளது, இதன் தனித்தன்மையை மேலும் சிறப்பித்துக் காட்டுகிறது. இதுவும் முதற் கடல்கோளால் நேர்ந்த பேரழிவுக்குப்பின் தமிழ்நூல், இலக்கிய மரபை மீட்டுருவாக்கிக் காக்க எண்ணிய தொல்காப்பியரின் முயற்சி எனக் கருதலாம்.

புறத்திணையியல் இடம்பெறுவனசில, பிற மொழி இலக்கியங்களுடன் ஒப்பிடற்பாலன; போர், கொடை, அளி, செங்கோல் என்றாற் போல்வன பொதுவானவை. ஆனால் ஐந்திணை நிலப் பாகுபாட்டில், தோன்றி வளர்ந்த அகத்திணை முற்றிலும் தமிழர்க்கும் தமிழ்நாட்டிற்கும் பொருந்திவரும் தனித்தன்மையாகும். அதனால் தொல்காப்பியர், புறத்திணையியல் ஒன்றைத் தவிர்த்து, பிற அனைத்து இயல்களிலும் அகத்திணைக்கே பேரிடம் தந்து, விளக்கம் எழுதியுள்ளார். பொருளதிகாரத்தின் ஒன்பது இயல்களில் முதலிலுள்ள இயல்களான அகத்திணையியல், புறத்திணையியல் இரண்டும் முதல் தொகுதியாக வெளியிடப் பெற்றன.

இவ் இரண்டாம் தொகுதியில், அகத்திணையின் அடிப்படைக் கருத்துக்களடங்கிய களவியல், கற்பியல், பொருளியல் எனும் மூன்றும் இடம் பெறுகின்றன. மூன்றாம் தொகுதியில் அழகு செயும் அணிவகை எனப் போற்றத்தகும் மெய்ப்பாட்டியலும் உவமையியலும் தனி நூலாக உள்ளன. நான்காம் தொகுதியில் செய்யுளியலும் மரபியலும் இடம் பெறுகின்றன. இக்காலத்திற்கேற்பச் செய்யுளியலை தமிழ் இலக்கிய இயல் என்றே குறிப்பிடலாம். 'செய்யுள்' - என்பதன் அன்றைய பொருள் செய்யப்படும் / படைக்கப்படும் இலக்கியம் என்பதேயாம். இலக்கியம் என்பதன் வேர் 'இலங்கு' என்பதாகும். இலங்கியம் மானுட வாழ்வை இலங்கவும் துலங்கவும் வைப்பது. மரபியல் பொதுவாகச் சொல் மரபுகளில் தொடங்கி, இலக்கியமும் மொழியும் மரபிற்குட்பட்டது என்பதை விளக்குகிறது.

பொருளதிகாரம் தனித்தனியே நான்கு நூல்களாக வெளியிடப்பட்டிருப்பதன் காரணம் மலைப்புத் தோன்றாதிருக்கவும் படிப்படியாகப் படிக்கவும் விரும்பிய இயல்களை எடுத்து ஆழ்ந்து கற்கவும் உதவும் என்பதனாலேயாம். மாணவர்களுக்கும் ஆர்வமுள்ள மக்களுக்கும் இந்நூல் வரிசை இதுகாறும் மிகவும் பயன்பட்டுளது. இனியும் என்றும் பயன்படும். தொல்காப்பியக்கல்விக்கு இந்நூல் வரிசை ஒரு நுழைவாயில் என்பதை மீண்டும் நினைவுபடுத்த விழைகின்றோம்.

சதாசிவ நகர், **தமிழண்ணல்**

மதுரை - 625 020.

# உள்ளுறை

| | | பக்கம் |
|---|---|---|
| 1. | களவியல் | 5 |
| 2 | கற்பியல் | 49 |
| 3. | பொருளியல் | 89 |

# 1. களவியல்

அகத்திணை இரண்டு கைக்கோள்களாகப் (ஒழுக்க நிலை) பிரிக்கப்பட்டுள்ளது. திருமணத்திற்கு முன் நடப்பன களவு எனப்படும். திருமணமான பிறகு நடப்பன கற்பு எனப்படும்.

களவு, மறை, காமக் கூட்டம் என்றெல்லாம் அழைக்கப்படும் இது முதலில் தலைவனும் தலைவியும் மட்டுமே கொண்ட மறைபொருள் (இரகசியம்) ஆகும். உயிர்த் தோழியும் பிறகுதான் அறிவாள்.

பிறரறியாதபடி நடக்கவே முயலும் பாலியல் உளவியல் இது. தமக்குள் தாமே நுகரும் உணர்வைப் பிறருக்குத் தெரியாமல் மறைக்க முயல்வதால், இது 'மறைந்து செய்யும் களவு' எனப்பட்டது. 'கண் களவு கொள்ளும் சிறு நோக்கம்' (1092) என்பார் திருவள்ளுவர். பார்வையிலேயே உள்ளது களவுக்குறிப்பு.

ஒருவரை ஒருவர் காதலிக்க ஊழே காரணம் – முதற்காட்சி நிலைகள், தலைமக்களின் மக்கட்பண்பு. இயற்கைப்புணர்ச்சிக்கான தூண்டுணர்வுகள். முதற் கூட்டம் தொடங்கித் தலைவன் கூற்று; குறியிடம் பற்றியன; பெற்றோர் அறிதல், வரைதல் (திருமணம் செய்து கொள்ளுதல்) – என இவையும் இவை தொடர்பானவையும் இக் களவியலில் பேசப்படுகின்றன.

தமிழ்ப் பண்பாட்டுப்படி களவெனப்படுவது கற்பை நோக்கியது. கற்பில் முடியாதது 'களவு' ஆகாது. குற்றமற்ற மலரன்ன செவ்வி உடையது; காமத்துக் காழ்(விதை) இல் கனி இக்களவு.

### இயல் கருத்து நிரல்

#### அறவழிப் பட்டதே களவொழுக்கம்

காமக் கூட்டமாகிய களவை ஆராயுமிடத்து, அது மறை ஓதும் அந்தணர்களது நூல்களில் சொல்லப்படும் எட்டுவகை மணத்துள் இசைத்துறை வல்ல நல்ல யாழை ஏந்திய, என்றும் பிரியாத சோடிகள் எனப்படும் கந்தருவரது மணம் போன்றதாகும்.

கந்தருவ மணத்தை ஒத்தது களவு.

**காட்சி**

ஒன்றுபடுத்தவல்ல, உயர்ந்த ஊழின் ஆணையால், தம்முள் உரு, திரு, பண்பு போன்றவற்றால் ஒப்புமையுடைய தலைவனும் தலைவியும் எதிர்பாராது சந்தித்துக் கொள்வர். இருவருக்கும் 'ஒப்புமை'யே முக்கியம்; சிலவற்றில் (அகவை, செல்வம்) தலைவன் தலைவியினும் உயர்ந்தவனாயினும் அஃது ஏற்கத் தக்கதேயாகும்.

**ஐயம்**

தலைவன் தலைவியர் பேரழகுடையராய், அவர்கள் சந்திக்குமிடமும் கனவுலகம் போன்ற சிறப்புடையதாக இருந்தால், அவன் 'இவள் தெய்வமகளோ' என ஐயுறுவான். சிறிது திகைத்து நிற்கும் இது ஒரு மனவுணர்வு நிலை.

**ஆராய்ந்து தெரிதலும் தெளிதலும்**

தலைவி சூடிய பூவில் வண்டு மொய்க்கும். இழைத்துச் செய்த அணிகலன்களை அணிந்திருப்பாள். வள்ளி என்பது தலைவியின் மார்பு மற்றும் உடலில் எழுதப்படும் தொய்யில் ஓவியம். மாலை முதலியவற்றிலுள்ள பூ வாடியிருக்கும். கண்கள் மருட்சியால் சுழலும்; இமைக்கும். முகத்தில் அச்சம் தோன்றும்.

முற்சுட்டிய அத்தகைய பிற குறிப்புக்கள், அங்கே அவளிடம் காணப்படுதலால், தோன்றிய ஐயங்கள் நீங்கும். தெய்வமகளாயின் இவை காணப்படா.

**ஐந்திணை அன்புக் காதலின் தொடக்கம்**

காதலரின் கண்களிரண்டும், அவர்களது உள்ளன்பை அறிவித்து உடம்படுத்துவதற்கு, ஒன்றுபட்டுப் பேசாமல் பேசிக் கொள்ளும் குறிப்புப் பேச்சு ஆகும்.

தலைவன் மனத்தால் குறித்த குறிப்பை, தலைவியது கண்களும் கருத்தும் ஏற்றுக்கொள்ளுமாயின், அந்நிலை தொடங்கிக் காதல் ஒழுக்க நிகழ்வுகள் தொடரும்.

**காதலர் - மாந்தர் படைப்பு**

இவ்வாறு காதலிக்கும் தலைமகன் பெருமையுடையவனும் அறிவுத்திறன் மிக்கவனுமாவான். ஐந்திணைப் பாடல்களில் வரும் ஆண்மகன் இத்தகையவன் என்பது கருத்து.

காதலி அஞ்சுவதற்கு அஞ்சவேண்டும். நாணம் பேண வேண்டும். இளமையால் மடப்பம் உடையவளாய், அடக்கத்தோடிருத்தல் வேண்டும். இவற்றை முதன்மையாகக் கொண்ட நற்பண்புகள் என்றென்றும் பெண்மகளுக்கு இன்றியமையாதன. அகப் பாடல் தலைவி இவ்வாறு தான் படைக்கப் பெறுவாள்.

**இயற்கைப் புணர்ச்சிக்குத் தூண்டும் மெய்ப்பாடுகள்**

வேட்கை தொடங்கி சாக்காடு முடிய இவை யாவும் களவுக் காலத்தில் உள்ளப் புணர்ச்சிக்கண் நிகழும் மெய்ப்பாடுகளாகும். பிற்காலத்தார் அவத்தைகள் என்பர். காட்சி - தொடக்கம். வேட்கை - தீராத விருப்பம். ஒருவரை ஒருவர் நினைத்தபடி இருத்தல், மெலிதல், மெலிவை மறைத்து ஆக்கம் செப்பல், நாணம் எல்லை கடத்தல் (அதாவது காமம் வெளிப்படல்), எதைப்பார்த்தாலும் காதலர் போலவே தோன்றுதல், தம்மை மறத்தல், பித்துப்பிடித்தவர்போல் மயங்குதல் ஆகியன மனவுணர்வு மெய்ப்பாடுகள். இறுதியில் சாதல் போலும் மனநிலை ஏற்படல். எனவே காதல் தோன்றியதும் மெய்யுறு புணர்ச்சியில் ஈடுபட மாட்டார்கள் என்பது கருதத்தக்கது. காதலுணர்வு வளர்ந்து, இறுதிக் கட்டத்தில்தான் இயற்கைப் புணர்ச்சி நிகழும். இதைக் காமக்கூட்டம், தெய்வப் புணர்ச்சி என்றெல்லாம் கூறுவர். முதன்முதல் கூடுவது இது.

**தலைவன் தலைவியைத் தன்வயப்படுத்துதல்**

தலைவன் தலைவியை முன்னிலைப்படுத்தி, முதன் முதலிற் பேசுவான். தன்பேச்சை அவள் செவிசாய்த்துக் கேட்டு அதன்படி நடக்குமாறு செய்ய முயல்வான். அவளது மனக்குறிப்பைக் காட்டும் புன்னகையைக் குறிப்பாலறிவான். மேலும், பலபடப் பேசி அவள் தன்னை நம்பும்படி தன்னகப்படுத்துவான். இத்தகையன, இயற்கைப் புணர்ச்சிக்கண் நிகழும்.

**களவொழுக்கத்தில் தலைவன் கூற்று**

இயற்கைப் புணர்ச்சியில் நிகழ்வன முதலில் எட்டு வகையாகக் கூறப்படுகின்றன. இவை எட்டும் முதற் கூட்டத்தில் நிகழ்வன.

தொடர்ந்து பொதுவாக நிகழ்வன பதினான்கு கூற்றுக்கள் என விளக்கப்படுகின்றன. இவையாவும் தலைவன்பால் நிகழக்கூடியன.

தலைவன் தோழியிடம் பேசுவதற்கான மனநிலைகள் கூறப்படுகின்றன.

### இயற்கைப் புணர்ச்சிக்கான உணர்வுச் சூழல்கள்

பாங்காக - புணர்ச்சிக்கு நிமித்தமாக நிகழ்பவை பன்னிரண்டு மெய்ப்பாடுகள் அல்லது உணர்வுச் சூழல்கள் ஆகும்.

முதலில் கூறப்பட்ட காட்சி, ஐயம், ஆராய்ந்து தெளிதல் மூன்றும் கைக்கிளைக்கு உரியன. இறுதியில் கூறிய நோக்குவ எல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு நான்கும் பெருந்திணைக்குரியன.

முதற்பொருளுடன் (நிலமும் பொழுதும்) கூடி வருவது எனவும் யாழோராம் கந்தருவர் ஒழுக்கம் போல்வதெனவும் கூறப்பட்ட அன்பின் ஐந்திணையாம் களவொழுக்கம் குற்றமற்ற சிறப்பினையுடையதாய், இடையில் வரும் ஐந்து அடிக்கருத்துக்களைப் பெறும். வேட்கை, ஒருதலை உள்ளுதல், மெலிதல், ஆக்கஞ்செப்பல், நாணு வரை இறத்தல் என்பன அவை. இவை முறையே 1039, 1040, 1041 நூற்பாக்களிலும் 1046ஆம் நூற்பாவிலும் கூறப்பட்ட பன்னிரண்டும் ஆகும்.

களவொழுக்கத்தில் மேலும் தலைவன் கூற்றுக்கள் நிகழும் பத்து இடங்கள் கூறப்படுகின்றன.

### தலைவி மெய்ப்பாட்டால் தன் வேட்கையை உணர்த்துதல்

காமத்திணையாம் அன்பின் அகத்திணையில் நிலைபெற்று வரும் நாணமும் இளமைப் பண்பாகிய அடக்கத்தைக் காட்டும் மடப்பமும் பெண்மைக்கே உரியன. ஆகையால் தலைவியது காம வேட்கைகள் வெளிப்படத் தோன்றா. குறிப்பாலும் சூழலாலும் பிறரால் உணரப்படும். (வாய்விட்டுரைப்பது அவள் வழக்கமில்லை.)

காம வேட்கையை அவளது கண்களே சொல்லிவிடும். அங்ஙனம் குறிப்புணர்த்தாத கண்களே இல்லையாதலால், அவளுக்குப் பாதுகாப்பாக, முற்கூறிய நாணமும் மடப்பமும் உள்ளனவேயாம்.

தலைவன் தன் வேட்கையை வெளிப்படுத்தி வேண்டும்போது, அவனது சொல்லுக்கு மறுமொழிதல் தலைவிக்கு அரிது. ஆதலால் 'வேண்டாதாள் போலக் கூறும்' 'அல்ல, வேண்டாம்' எனும்படியான சொற்கள் மட்டுமே அவளிடம் தோன்றும்.

**களவொழுக்கத்தில் தலைவிக்குரிய மெய்ப்பாடுகளும் கூற்றுக்களும்**

மறைந்து நின்று தலைவனைக் காணுதல், தன்னை அவன் காணுமாறு நிற்றல், மிகுந்த காதலால், விடை கூறாது மழுங்குதல் என்று தொடங்கி வரும் ஆறும் முதல் புணர்ச்சிக்கு முன்பு நிகழ்வன என்பர் இளம்பூரணர்.

பின்னர் வரும் பன்னிரண்டும் தலைவி தனித்தும் தோழியிடத்தும் பேசுவன; புணர்ச்சிக்குப் பின் நிகழ்வன என்பர் இளம்பூரணர்.

வீட்டில் சிறையாகக் காவலில் வைக்கப்பட்ட போது மனமுடைந்து, முன் நிகழ்ந்தவற்றை நினைத்து அக் களவுக் கூட்டத்தைத் தோழிக்கு வெளிப்படுத்துதல் முதலாகப் பின்னே வருவனயாவும் தலைவியிடம் காணப்படுபவை ஆகும்.

**மேலும் தலைவி பேசுமிடங்கள்**

தலைவன் வரைவிடை வைத்துப் பொருள்தேடப் போனவன் விரைந்து வராததால் வருந்திய போதும் வரைதற்கு முற்பட்ட நாட்களில் தன்னைத் தேடி வந்தவன் எதிர்பாராது தன் சுற்றத்தவரை நேருக்குநேர் சந்திக்க நேர்ந்த போதும் விரைவில் மணம் முடிக்கத் தலைவனுக்குச் சொல் என்று தோழியிடம் கூறுகிற போதும் தலைவி தானாகவே சிந்தித்துக் கூறும் சூழல்களும் உள.

நம் முன்னோர் நமக்குச் சொல்லிக் காட்டிய நெறி : ஒரு பெண்ணுக்கு உயிரைவிட நாணம் சிறந்தது; நாணத்தை விடக் குற்றமற்ற அறிவார்ந்த கற்புச் சிறந்தது. இதனை உட்கொண்ட மனத்துடன் தன் தலைவனிருக்குமிடம் தேடிச் செல்ல நினைத்துப் பேசினும் குற்றமற்ற நன்மொழிகளாக, அதனொடு தொடர்புடையனவற்றைத் தலைவி சொன்னாலும் அவ்வகைப் பட்டன பிறவும் பாட்டுப் பொருளாக அகஇலக்கியத்தில் வரும்.

**களவுக் காலத்தில் தோழிகூற்று**

தலைவியின் களவொழுக்கத்தைத் தோழி உய்த்துணர்ந்து கண்டுகொள்ள முயலும் முறைகள் : 1. புதிய மணம் தலைவிபால் ஏற்படுதல் 2. தோற்றப் பொலிவு புதிதாதல் 3. நடைமுறைகளில் புதிய மாற்றம் 4. உண்டி பண்டையிற் சுருங்குதல் 5. தன் செயல்களை மறைக்க முயலுதல் 6. ஒரு திசைக்கே செல்லுதல் 7. ஓரிடத்திலேயே பலகாலும் சுற்றித்திரிதல்.

இவை புணர்ச்சியை நோக்கி உள்ளுள் விளையும் மறைவான வேட்கையால் ஏற்படும் உணர்ச்சிகள். இவை ஏழினும் உணர்வாள். மெய்யாகவும் பொய்யாகவும் பேசி ஆராய்வாள். இவை இரண்டு வகை.

அடுத்து வரும் எட்டும் களவைத் தடுத்துத் திருமணத்திற்குத் தூண்டுவதற்காகத் தோழியிடம் நிகழ்வன.

இனிவருவன தலைவன் தலைவியைக் கூடியபின் தோழிபால் நிகழ்வன. இவை தலைவனையும் தலைவியையும் இல்லற நெறிக்கண் நிறுத்துவன. சான்றாண்மையுடன் துணை நிற்கும் தலைமைப் பண்புடையன.

இவ்வாறு வரும் இவை பன்னிரண்டாகும்.

இனி வருவன தலைவனைத் திருமணத்திற்குத் தூண்டுவன. நாடும் ஊரும் வீடும் குடியும் பிறப்பும் சிறப்பும் ஆகியன பற்றி மிக விரிவாகத் தலைவனிடம் கூறி, திருமணத்திற்குத் தூண்டுவாள். இவை நான்காகும்.

தாய் ஐயப்படும்போது மறுத்துரைப்பாள்; பொய் என மாற்றிச் சொல்லி, உண்மையாய் நடந்த வழியில் ஈடுபடுத்தித் தந்திரம் செய்வாள். தாய் தடுத்தாலும் வெறியாட்டெடுத்தாலும் வேற்றவர் வரைய வரினும் தலைவனுக்கு மணம் செய்து கொடுக்க மறுப்பினும் முன்னிலை (முன் நின்று பேசுதல்), அறத்தொடுநிலை என்னும் இருவகையால், பொய்யும் மெய்யும் கலந்த குற்றமற்ற தன் சமர்த்துப் பேச்சால் தாயை வழிப்படுத்துவாள். பெற்றோர் வரைவுக்கு உடன்பட்டாரெனத் தலைவனை 'வரைவு கடாவ' (பெற்றோரிடம் சென்று பெண்கேட்டல்) வேண்டுவாள், அவ்வாறு நிகழ இருப்பதால் தலைவியை ஆற்றியிருக்க வற்புறுத்துவாள். இவை ஆறு. ஆக இவ்வாறு வந்த முப்பத்து இரண்டு வகையும் மிக்க சிறப்புடைய தோழிக்குரியன.

### செவிலி கூற்று

காதலர் களவொழுக்கம் அலராகிவிடவே செவிலி கூற்றுக்கள் நிகழும். தலைவி உடலில் காமஉணர்வு வெளிப்படும் போதும் தலைவி உடற்கூறு முன்னிலும் அளவு மிகும்போதும் செவிலி பேசுவாள். மேலும் தாய்மைப் பாசத்துடன் பலவும் கூறுவாள். அவள் இரண்டு குடிப்பக்கத்தின் பெருமையை எண்ணுமிடத்தும் பேசுவாள். இவ்வாறான பதின்மூன்று கூற்றுக்களுடன் இவை போல்வன பிறவும் எடுத்துரைப்பாள்.

## நற்றாய் கூற்று

செவிலியுடன் உணர்வு ஒன்றுபடுமிடங்களில் பெற்ற தாய்க்கும், மேலே செவிலிக்குக் கூறியன நிகழும்.

தலைவி, தலைவனை நன்கு அறிந்து நட்புக் கொள்ளக் கூடிய அறிவு வளர்ச்சியில்லாதவளென எண்ணி, தாயர் குற்றமற்ற சிறப்பினையுடைய பெரியவர்களிடம் தங்கள் ஐயங்களை வினவி அறிதற்கும் உரியர்.

## காதலர் இயல்பும் தோழியின் துணையும்

தன் உள்ளத்துள் தோன்றும் காம வேட்கையை, தலைவன் முன் கூறுவது தலைவிக்கு இயல்பில்லை. பிற நீர்மையுள்ள மக்களைப் போன்றவள் அல்லள் அவள். அதனால் அவளது உணர்வு புது மண்பானையுள் பெய்துவைத்த நீர், புறம் பொசிந்து காட்டுவதுபோல வெளிப்படும்.

இக் களவிற் புணரும். காமக் கூட்டம் தனிமையிலேயே மிகுந்த பொலிவு பெறும். எனவே தோழி, பாங்கன் யார் துணையும் இன்றி, காதலர்கள் தாமே தமக்குத் தூதுவர்களாய்ச் சென்று கண்டு கூடுதலுமுண்டு.

தலைவி தலைவனின் சொல்லைக் கடந்து நடப்பது தனக்கு அறமாகாது என நினைப்பவள். எனவே சந்திப்பதற்கான குறியிடம் கூறும் உரிமை அவளதேயாகும். ஏனெனில் தான் செல்லுதற்கு ஏற்ற வழியை அவளே அறிவாள்.

இவ்வாறு களம் சுட்டுதல் தோழியின் உதவியுடன் நடப்பதுண்டு.

காதலர் யார் துணையுமின்றித் தாமே சந்திப்பது, மூன்று நாட்கள் மட்டுமேயாகும். அம் மூன்று நாளிலும் கூடத் தோழி துணையாவதுண்டு.

தனக்கு உயிர்த்துணையாம் தோழி யாரென உணர்த்தும் உரிமை தலைவிக்கே உண்டு. பல நூறு வகையாலும் தனக்கு வேண்டிய நன்மைகளை ஆராய்ந்து உதவுதல், அத் துணையாவாள் கடமையாதலால், அத்தகையாளைத் தலைவி சொல்வதே முறையாகும்.

மிக்க சிறப்பினையுடைய களவொழுக்கத்தைத் தலைவி சொல்வதற்கு உரியவர் செவிலித்தாயே. நற்றாயிடம் தலைவி தன் காதலை நேரே கூறுதல் நாகரிகமாகாது. அதனால் செவிலி வழியாகவே கூறுவாளாதலால் இப் பாடல்களில் 'தாய்' என வருவது, செவிலியையே குறிக்கும்.

தோழி செவிலித்தாயின் மகள். தலைவியுடன் வளர்பவள்.

தலைவிக்குத் தோழி நன்மை தீமையை ஆராயவும் இன்ப துன்பத்தில் உசாவி அறியவும் சிறப்புள்ள நற்றுணையாவாள்.

களவொழுக்கம் தோழிக்கும் தெரியாமல்தான் தொடங்கும். ஆனால் துணை தேவைப்படும் நிலைமை வரும். தலைவன் தோழியின் துணைதேடி, உதவி வேண்டி வருதல்; தலைவியது குறிப்புக் கண்டுணர்தல்; இருவரும் உடனிருக்கும் போது தலைவன் வர உணர்தல் என மூன்று நிலைகளிலும் தலைவியின் காதலைத் தோழி அறிந்துகொள்வாள். அறிந்து, அக் களவிற்குத் தோழி துணையாக இசைவது 'மதியுடம்படுதல்' எனப்படும்.

அவ்வகையால் தோழி மதியுடம்பட்டதை அறிந்த பிறகல்லது, தலைவன் தோழியிடம் குறையிரந்து நிற்கும் – இரந்து பின்னிற்றலாகிய முயற்சியை மேற்கொள்ள மாட்டான்.

அவன் அவ்வாறு முயலும்போது, பொருத்தமான நல்வழியை ஆராய்ந்து, இருவரையும் கூட்டுவிக்கும் ஆற்றலும் தோழியின் கண்ணதேயாகும்.

## குறிக்கு ஏற்ற இடமும் சூழலும்

'குறி' என்பது காதலர் சந்திக்குமிடம். அது இரவிலும் பகலிலும் அவர்கள் நன்கு அறியுமிடங்களில் நிகழும்.

இரவுக்குறி வீட்டினுள் ஒரு புறத்தே யாரும் அங்கு வராத சமயத்தில், மனையிலுள்ளார் பேச்சுக்குரல் கேட்கக் கூடிய தூரத்தில் நிகழும்.

பகலில் கூடுமிடம் வீட்டின் புறத்தே, அவள் வழியறிந்து வரக் கூடிய தூரத்தில் நிகழும்.

அவன் அடையாளக்குறி செய்வான். மரத்தை அசைப்பதும் பறவையை எழுப்புவதும் உண்டு. அவன் செய்யாத குறி, ஏனைய காற்றசைவால் நிகழ, அவன் செய்ததாக எண்ணி வந்து தலைவி ஏமாறுவாள். பிறகு வந்த அவன் தன் குறி கேட்டு வராததால் வெறும்னே திரும்புவான். அதனால் அவ்வாறு 'அல்லகுறிப்பட்டு' வருந்துவதும் தலைவிபால் உண்டு.

குறியிடம் குறியாது, ஆங்காங்கு எதிர்பாராது சந்தித்துக் கூடுதலுமுண்டு. மிக்க சிறப்பினையுடைய, தக்கதொரு மறைவான இடம் கிடைத்தால் இது நிகழும்.

களவொழுக்கத்தில் ஓரை என்னும் மகளிரது வண்டல் விளையாட்டையும் விழா நாட்களில் கலந்து கொள்ளுதலையும் துறந்து கைவிடுதலென்பது தலைவனுக்கு இல்லை. அக் காலங்களில் தலைவன் தலைவியை எளிதிற் சந்திக்கப் பெறுவான்.

குறியிடம் வரும் தலைவன் தவறாது வருவான். வழியருமை கருதியோ, அழிவு நேருமெனவோ, அச்சப்பட்டோ, இடையூறுகளை எண்ணியோ தலைவன் அஞ்சி வாராதிருக்க மாட்டான்.

## பெற்றோர் களவை அறியும் நெறி

தந்தையும் தமையனும் குறிப்பால் மட்டுமே, தலைவியின் களவொழுக்கத்தை அறிவர்.

செவிலித்தாய் எவ்வாறு அறிவாளோ, அவ்வாறே நற்றாய் தானும் அறிவாள். (பெரிதும் இவ்விரு தாயரிடையே பாடலில் வேறுபாடு காணப்பெறாது.)

## அம்பலும் அலரும்

அம்பல் – ஊரார் முகக் குறிப்பால், காதலர் களவுறவு பற்றித் தம்முள் மறைமுகமாகப் பேசிக் கொள்ளுதல். அலர் – வாய்விட்டு, வெளிப்படையாகப் பலரும் பேசிக் கொள்ளுதல். இவை இரண்டுமே களவை, ஊரார் அறிய வெளிப்படுத்துவன. இவற்றிற்குக் காரணமாவான் தலைவனே. அவன் தலைவியைத் தேடி அடிக்கடி வருதல் முதலியவற்றால் அம்பல் தோன்றி, அலராக மலரும்.

## திருமணம்

களவு வெளிப்பட்டபின், பெற்றோர் இசைந்து மணம் செய்து வைப்பதுண்டு. களவு வெளிப்படு முன்பே திருமணம் நடந்து விடுவதுண்டு. இவை இரண்டும் திருமணம் நிகழும் முறைகளாகும்.

களவு வெளிப்படுதலே கற்பின்பாற்படுமாயினும், திருமணம் செய்து கொள்ளுமுன் முன்பு கூறப்பட்ட ஓதல், பகை, தூது மூன்றும் காரணமாகத் தலைவியைத் தலைவன் பிரிதல் இல்லை. 'வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிதல்' எனும் சிறு பிரிவு மட்டும் திருமணத்திற்கு முன் உண்டு என்பது இதனால் பெறப்படும்.

# களவியல்

**ஐந்திணையுள்**
**களவு ஒழுக்கத்தின் இயல்பு**
**வேதியர்கள் கூறும் எட்டுவகை மணத்துள்**
**கந்தருவர் மணம் போன்றது**

**இன்பமும் பொருளும் அறனும் என்றாங்கு**
**அன்பொடு புணர்ந்த ஐந்திணை மருங்கின்**
**காமக்கூட்டம் காணுங் காலை**
**மறையோர் தேஎத்து மன்றல் எட்டனுள்**
**துறையமை நல்யாழ்த் துணைமையோர் இயல்பே. (1038)**

*அறவழிப் பட்டதே களவொழுக்கம்*

'களவு' தீது என்பது உலகறிந்தது. இங்குக் 'களவு' என்பது இன்பம் கருதித் தோன்றி, பொருளால் சிறப்புற்று, அறவழி நடப்பது; இருவரின் ஒத்த அன்பொடு சார்ந்தது. இவ் ஐந்திணையுள் 'காமக் கூட்டமாகிய' களவை ஆராயுமிடத்து, அது மறை ஓதும் அந்தணர்களது நூல்களில் சொல்லப்படும் எட்டுவகை மணத்துள் ஒன்று. அதாவது இசைத்துறை வல்ல நல்ல யாழை ஏந்திய, என்றும் பிரியாத சோடிகள் எனப்படும் கந்தருவரது மணம் போன்றதாகும்.

கந்தருவ மணத்தை ஒத்தது களவு.

**களவு என்றதும் பழியொடு பட்டதன்று என நிறுவ பொருள் இன்பத்துடன் அறத்தையும் சுட்டிச் சொல்கிறார். காமக் கூட்டம் - காம உணர்வு எய்தியவர் தாமே அன்பால் இணைவது. தேஎம் - தேயம்; அவரது நூல்கள். மன்றல் எட்டு - பிரமம் - பிரமச்சாரிக்குத் தானமாகக் கொடுப்பது. பிரசாபத்தியம் - இரு பெற்றோரும் இசைந்து கொடுப்பது. ஆரிடம் - ஆவும் ஆனேறும் வாங்கிக் கொண்டு கொடுப்பது. தெய்வம் - வேள்வி ஆசிரியர்க்குக் கொடுப்பது. காந்தருவம் - ஒத்த இருவர் தாமே கூடும் கூட்டம். அசுரம் - வில் போட்டியில் வென்றவர்க்குக் கொடுப்பது. இராக்கதம் - இசைவில்லா வழியும் வலிதிற் கொள்வது. பைசாசம் - கள்ளுண்டு களித்து மயங்கிக் கிடந்தாள் மாட்டும் துயின்றாள் மாட்டும்**

கூடுவது. இவற்றை வடநூலார் இலக்கியப்படுத்துவர். துறை - இசை வகை. துணைமையோர்- ஒருவரை ஒருவர் இணை பிரியாத கந்தருவர். இயல்பு - ஒருவகை ஒப்புமையுடையது. 'கந்தருவர்க்குக் கற்பின்றி அமையவும் பெறும்; ஈண்டுக் கற்பின்றிக் களவே அமையாது' என்பர் நச்சினார்க்கினியர். துசியந்தன் சகுந்தலையைக் கூடியதுபோல, அதுவே திருமணமாகிவிடும். இங்கு களவு 'நாடு அறி நன்மணமாக' முடிய வேண்டும். அல்லாதது களவுமாகாது.

**காதல் முன்னைய நல்வினையால் விளைவது**
**தலைவன் தலைவி உரு, திரு, பண்பு, அன்பு, அகவை**
**போல்வனவற்றால் ஒத்தவராதல் வேண்டும்**

**ஒன்றே வேறே என்றிரு பால்வயின்**
**ஒன்றிஉயர்ந்த பாலது ஆணையின்**
**ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப**
**மிக்கோன் ஆயினும் கடிவரை யின்றே. (1039)**

*காட்சி*

காதல் கண்டவரிடத்தெல்லாம் நிகழ்வதன்று. ஒருவர் மீது ஒருவர்க்கு எதிர்பாராது, கண்டதும் காதல் பிறப்பது முன்வினைத் தொடர்ச்சி (சுதையுணர்வால் விலங்கினம் போல் நடப்பன காதலுமாகாது; காமமுமாகாது. அவை விலங்கின வெளிப்பாடுகள்.) பால், முறை, வினை, ஊழ் என்பன முன்வினைத் தொடர்ச்சிகள். இவற்றுள் ஒன்று சேர்ப்பனவுமுண்டு; ஒன்படுத்தாதனவுமுண்டு. அவற்றுள் ஒன்றுபடுத்தவல்ல, உயர்ந்த ஊழின் ஆணையால், தம்முள் உரு, திரு, பண்பு போன்றவற்றால் ஒப்புமையுடைய தலைவனும் தலைவியும் எதிர்பாராது சந்தித்துக் கொள்வர். இருவருக்கும் 'ஒப்புமை'யே முக்கியம்; சிலவற்றில் (அகவை, செல்வம்) தலைவன் தலைவியினும் உயர்ந்தவனாயினும் அது ஏற்கத் தக்கதேயாகும்.

**பால், முறை, ஊழ் என்பன ஒரு பொருட் சொற்கள். கண்டவர் மேலெல்லாம் அன்பு செல்லாது, ஒருவரைக் கண்டதும் மனம் ஈடுபடுவதேன்? அதுதான் தெய்வத்தால் ஏற்படும் முன்னைய நல்வினைத் தொடர்ச்சி. வேறுபடுத்தும் ஊழ் அல்லாமல் ஒன்றுபடுத்தும் ஊழால் - அதன் ஆணையால் (ஆற்றலால்) ஒப்புமையுடைய இருவரும் எதிர்பாராது காண்கின்றனர். சிலவற்றில் தலைவன் தலைவியைவிட உயர்ந்தவனாக இருக்கலாம்.**

**தலைவன் முதன்முதல் தலைவியைக் கண்டதும் 'இவள் பேரழகுடையாள், தெய்வ மகளோ' என ஐயுறுவான். மிகுசிறப்புடைய சூழலிலேயே இது நிகழும்**

**சிறந்துழி ஐயம் சிறந்தது என்ப**
**இழிந்துழி இழிபே சுட்டலான. (1040)**

*ஐயம்*

தலைவன் தலைவியர் பேரழகுடையராய், அவர்கள் சந்திக்குமிடமும், கனவுலகம் போன்ற சிறப்புடையதாக இருந்தால், அவன் 'இவள் தெய்வமகளோ' என ஐயுறுவான். அதாவது கனவுலகக் கற்பனைகளில் ஆழ்வான். கண்டறியாத பேரழகைக் கண்டதுபோல் ஆவான். சிறிது திகைத்து நிற்கும் இது ஒரு மனவுணர்வு நிலை. காதல் வயப்பட்டோர் உள்ளுள் உணர்வது.

சிறந்துழி – சந்திக்குமிடம், தலைவியதழகு, இருவரது சிறப்பியல்பு என எல்லாம் சிறந்துநிற்குமிடத்தேதான், 'ஐயம்' நிகழும். 'ஐயம்' – தலைவியைக் கண்ட தலைவன் வியப்பிலாழ்தல், தெய்வ மகளோ, மானுடப் பெண்தானோ என ஐயுறுதல். முதற்காட்சியில் மனம் தடுமாறி வியப்பிலாழ்வதை, இது மிகைப்படுத்தி நாடகமாக்குகிறது.

இழிந்துழி – முன் கூறியவை இழிவுடையன ஆயவழி எதுவும் நிகழாது. இழிவுணர்வே மேலோங்கும். கனவுலகில் மிதப்பது போன்ற இனிய, உயரிய சூழலிலேயே, முற்சுட்டியவை நிகழுமென்பது கருத்து. உண்மையில் இவையும் ஒருசார் மனவுணர்வுகளே.

**ஐயத்தை நீக்குவன, மானுட மகளே எனத்துணிதல் இவை கைக்கிளை சார்ந்தவை**

**வண்டே இழையே வள்ளி பூவே**
**கண்ணே அலமரல் இமைப்பே அச்சமென்று**
**அன்னவை பிறவும் ஆங்கு அவண் நிகழ**
**நின்றவை களையும் கருவி என்ப. (1041)**

*ஆராய்ந்து தெரிதலும் தெளிதலும்*

தலைவி சூடிய பூவில் வண்டு மொய்க்கும். இழைத்துச் செய்த அணிகலன்களை அணிந்திருப்பாள். வள்ளி என்பது தலைவியின் மார்பு மற்றும் உடலில் எழுதப்படும் ஓவியம். பிற மாலை முதலியவற்றிலுள்ள பூ வாடியிருக்கும். கண்கள் மருட்சியால் சுழலும்; இமைக்கும். முகத்தில் அச்சம் தோன்றும்.

சூரரமகளிர் போலும் தெய்வ மகளிராயின் வண்டு மொய்க்காது; பூ வாடாது; தொய்யில் இராது; கண் இமைக்காது; அணிகள் இரா; அச்சமெய்ப்பாடு தோன்றாது.

முற்சுட்டிய அத்தகைய பிற குறிப்புக்கள், அங்கே அவளிடம் காணப்படுதலால், தோன்றிய ஐயங்கள் நீங்கும். அவள் மானுட மகளே எனத் துணிவான், தலைவன். முதன் முதல் இளையோரிடம் தோன்றும் காம உணர்வுகள் மிகைப்பட்டன எனும் பாலியல் உளவியல் இது.

தலைவி கூந்தலிற் சூடிய பூவில் வண்டு மொய்க்கும். அவள் மானுடர் இழைத்துச் செய்த அணிகலனை அணிந்திருப்பாள். வள்ளி - அவள் மார்பிலும் தோளிலும் கரு மையால் எழுதிய ஓவியம் காணப்படும். அதைத் 'தொய்யில்' என்பர். பூ - சூடிய பூ வாடியிருக்கும். கண் அலமரல் - கண் தடுமாறும்; இமைக்கும்; அஞ்சும். அன்னவை பிற - கால் நிலந் தோய்தல். வியர்த்தல் போல்வன. இவை தெய்வமகள் அல்லள், மானுட மகளே என உணர்த்தும்.

காமவயப்படும் புதிய இளைஞர் கற்பனையில் மிதப்பது பற்றிய பாலியல் உளவியலை உட்கொண்டது இது.

**கண்கள் கலந்தவழி ஐந்திணைக் காதல் தொடங்குகிறது**

**நாட்டம் இரண்டும் அறிவு உடம்படுத்தற்குக்**
**கூட்டி உரைக்கும் குறிப்புரை ஆகும். (1042)**

***ஐந்திணை அன்புக் காதலின் தொடக்கம்***

காதலரின் கண்களிரண்டும், அவர்களது உள்ளன்பை அறிவித்து உடம்படுத்துவதற்கு, ஒன்றுபட்டுப் பேசாமல் பேசிக் கொள்ளும் குறிப்புப் பேச்சு ஆகும்.

நாட்டம் இரண்டும் - இருவரது கண்களும். அறிவு உடம்படுத்தற்கு - அறிவை இணைப்பதற்கு. கூட்டி உரைத்தல் - ஒருவரது வேட்கைக் குறிப்பைக் காட்டி, மற்றவர்க்கு உரைத்து இருவரையும் ஒருப்படுத்தல். குறிப்புரை - காமக்குறிப்பை உணர்த்துவது. உள்ளங்கள் இணைந்த பிறகே ஐந்திணைக் காதல் உருவாகிறது.

## தலைவன் குறிப்பைத் தலைவி ஏற்றால் களவு ஒழுக்கம் தொடரும்

**குறிப்பே குறித்தது கொள்ளுமாயின்**
**ஆங்கவை நிகழும் என்மனார் புலவர். (1043)**

தலைவன் மனத்தால் குறித்த குறிப்பை, தலைவியது கண்களும் கருத்தும் ஏற்றுக் கொள்ளுமாயின், அந்நிலை தொடங்கிக் காதல் ஒழுக்க நிகழ்வுகள் தொடரும்.

குறிப்பே குறித்தது - தலைவன் கண்ணாற் குறித்த காமக் குறிப்பை. கொள்ளுமாயின் - தலைவி கண்கள் ஏற்றுக் கொள்ளுமானால். ஆங்கு அவை - மேலே நிகழும் களவொழுக்க நிலைகள். நிகழும் - தொடரும். இன்றேல், பார்வைகள் ஒன்றுடன் ஒன்று இசையாத வழி, களவொழுக்கம் தொடராது.

## அகத்திணையில் ஆடவன் மிகுந்த பண்பாளனாகவே படைக்கப்படுவான்

**பெருமையும் உரனும் ஆடூஉ மேன. (1044)**

இவ்வாறு காதலிக்கும் தலைமகன் பெருமையுடையவனும் அறிவுத்திறன் மிக்கவனுமாவான். ஐந்திணைப் பாடல்களில் வரும் ஆண்மகன் இத்தகையவன் என்பது கருத்து.

பெருமை - திருக்குறளில் பெருமைக்குக் கூறிய இலக்கணங்கள். செயற்கரிய செய்பவர். அரிய பண்பாளர், பெருமிதமுடையவர் என்க. உரன் - அறிவுத் திண்மை. அகத்திணைத் தலைமகன் இவ்வாறுதான் படைக்கப்படுவான்.

## பெண் பெண்மைக்குக் காட்டாகப் படைக்கப்படுவாள்

**அச்சமும் நாணும் மடனும் முந்துறுத்த**
**நிச்சமும் பெண்பாற்கு உரிய என்ப. (1045)**

காதலி அஞ்சுவதற்கு அஞ்சவேண்டும். நாணம் பேணவேண்டும். இளமையால் மடப்பம் உடையவளாய், அடக்கத்தோடிருத்தல் வேண்டும். இவற்றை முதன்மையாகக் கொண்ட நற்பண்புகள் என்றென்றும் பெண்மகளுக்கு இன்றியமையாதன. அகப்பாடல் தலைவி இவ்வாறுதான் படைக்கப் பெறுவாள்.

**தலைவி அச்சம் - அஞ்சவேண்டியதற்கு அஞ்சுப்வள். நாண் - பழிக்கு நாணுபவள். மடம் - எதற்கும் முந்தாமை. அறிந்தும் அறியாதாள் போலிருக்கும் ஒரு வித அடக்கமுடைமை. இது பேதைமை அன்று. நிறைகுடம் போல இருக்கும் தன்மை. முந்துறுத்த - இவற்றை முதன்மையாகக் கொண்ட நற்பண்புகள். நிச்சமும் - என்றும்.**

### இயற்கைப் புணர்ச்சிக்கு இருவரையும் தூண்டும் மெய்ப்பாடுகள்

**வேட்கை ஒருதலை உள்ளுதல் மெலிதல்**
**ஆக்கம் செப்பல் நாணுவரை இறத்தல்**
**நோக்குவ எல்லாம் அவையே போறல்**
**மறத்தல் மயக்கம் சாக்காடு என்றுஅச்**
**சிறப்புடை மரபினவை களவு என மொழிப. (1046)**

காதல் தோன்றியதும் மெய்யுறு புணர்ச்சியில் ஈடுபடமாட்டார்கள். காதலுணர்வு வளர்ந்து, மெலிந்து, இனி இஃது இன்றி வாழ்தலரிது என்ற இறுதிக்கட்டத்தில் தான் இயற்கைப் புணர்ச்சி நிகழும். இதைக் காமக் கூட்டம், தெய்வப் புணர்ச்சி என்றெல்லாம் கூறுவர். முதன்முதல் கூடுவது இது.

கண்ணாற்கண்டு மனம் கலந்தபின் ஒருவர்மீது ஒருவருக்கு மீதூர்ந்த விருப்பம் எழும். முதலாவதான காட்சிக்குப்பிறகே வேட்கை பிறக்கும். இடையறாது ஒருவரை ஒருவர் நினைத்துக்கொண்டிருப்பர். உணவு குறையவும் மனம் கலங்கவும் மெலிவடைவர். தமக்கு ஏற்படும் துன்பங்களையும் மெலிவுகளையும் மறைத்து, ஆக்கமாகச் செப்புவர். வெட்கம எல்லை கடக்கும். பார்ப்பவை எல்லாம் காதலர் போலவும் அவர்தம் உறுப்புக்கள் போலவும் தோன்றும். தம்மை மறந்து பித்தாவர். மோகத்தால் மயங்குவர். காட்சிக்குப் பிறகு இவை எட்டுநிலைகள். இறுதியில் பத்தாவதாக வருவது சாக்காடு - சாவது போலும் நிலை அது. அதனால் இனி வாழ்தல் அரிது என்று எண்ணத்தொடங்குவர். இவை யாவும் களவுக் காலத்தில், உள்ளப்புணர்ச்சிக்கண் நிகழும் மெய்ப்பாடுகளாகும். பிற்காலத்தார் அவத்தைகள் என்பர். இவை எல்லாம் ஒருசேர நிகழுமென்றோ, வரிசைப்படி நிகழுமென்றோ கருதுதல் தவறு. அவரவர் மனநிலைக்கு ஏற்ப இவை நிகழும்.

**வேட்கை - முதன்முதற் கண்டு மனங்கலந்தபின் ஒருவர் மீது ஒருவருக்குத் தோன்றும் மீதூர்ந்த விருப்பம். ஒருதலை உள்ளுதல் - ஒருபடித்தாக இடையறாது ஒருவரை ஒருவர் நினைத்தல். மெலிதல் - காம உணர்வால் உடல் மெலிவுறுதல். ஆக்கம் செப்பல் - தமக்கு ஏற்படும்**

துன்பங்களை மறைத்து ஆக்கமாகக் கூறுதல். நாணு வரை இறத்தல் - வெட்கம் எல்லை கடத்தல். நோக்குவ எல்லாம் அவையே போறல் - எதைப் பார்த்தாலும் காதலர்தம் உறுப்புகளைப் போலவே தோன்றுதல். மறத்தல் - தன்னை மறந்து பித்தாதல். மயக்கம் - மனம் அழிந்து மயங்குதல். சாக்காடு - சாகவும் துணிதல். இந்த அளவு இருவர்க்கும் மெய்ப்பாடுகள் (அவத்தைகள்) தோன்றிய பின்பே இருவரும் புணர்ச்சியில் ஈடுபடுவர். விலங்குப் புணர்ச்சியன்று இது. கண்களால் மனக்குறிப்பு ஒத்த பிறகு பலநாட்கள் இவ்வாறாகி, ஒரு நாள் சாக்காடு போலும் மெய்ப்பாட்டு எல்லை வந்துழி நெருங்கிப் பழகுவர். உண்மைக் காதலின் வளர்ச்சி இது.

### தலைவி தன்னை நம்புமாறு தலைவன் அவளிடம் பேசுதல்

முன்னிலை யாக்கல், சொல்வழிப்படுத்தல்,
நன்னயம் உரைத்தல், நகை நனி உறாஅ
அந்நிலை அறிதல், மெலிவு விளக்குறுத்தல்,
தன்னிலை உரைத்தல், தெளிவகப் படுத்தல்என்று
இன்னவை நிகழும் என்மனார் புலவர். (1047)

*தலைவன் தலைவியைத் தன்வயப்படுத்துதல்*

தலைவன் தலைவியை முன்னிலைப் படுத்தி, முதன் முதலிற் பேசுவான். தன் பேச்சை அவள் செவிசாய்த்துக் கேட்டு அதன்படி நடக்குமாறு செய்ய முயல்வான். அவளது அழகு, பண்பு முதலிய நல்ல நயங்களைக் கூறி, அவளை மகிழ்விப்பான். அவளது வெளிப்படத் தோன்றாத சிரிப்பை - முகை மொக்குள் போன்ற நகைச்சிரிப்பை அறிந்து கொள்வான். தனது காம உணர்வால் ஏற்படும் மெலிவினை இரக்கமுண்டாகும்படி விளக்குவான். தனக்குத் தலைவி மீதுள்ள அன்பையும் உறுதியையும் எடுத்துரைப்பான். அவள் தன்னை நம்பும்படி தன்னகப் படுத்துவான். இத்தகையவை, இயற்கைப் புணர்ச்சிக்குமுன் நிகழும்.

முன்னிலை ஆக்கல் - தலைவியை அவளது நாணம் நீங்குமாறு முன்னிலைப் படுத்திப் பேசுதல். சொல்வழிப் படுத்தல் - தான் சொல்கிறபடி அவள் நடக்கும்படி செய்ய முயலுதல். நல் நயம் உரைத்தல் - அவளது நலங்களை எடுத்துரைத்தல். நகை நனி உறாஅ அந்நிலை அறிதல் - தலைவன் பாராட்டைக் கேட்டு, தலைவி தன்னுள் நகைப்பது புன்னகையாக மட்டும் வெளிப்படுதலை அறிதல். நனி உறாஅ - மிகுதிப்படாத நிலை,

புன்னகை. மெலிவு விளக்குறுத்தல் - தனது மெலிவையும் தலைவி மெலிவையும் எடுத்து விளக்குதல். தன்னிலை உரைத்தல் - தலைவன் தனது வேட்கை பற்றியும் தலைவி மீது தனக்குள்ள அன்பு பற்றியும் கூறுதல். தெளிவு அகப்படுத்தல் - தலைவியிடம் உறுதி கூறி, அவள் தன் மீது நம்பிக்கை வைக்குமாறு செய்தல். தெளிவு - நம்பிக்கை.

**தலைவியைத் தேற்றிக் கூடிக் களவொழுக்கத்தில்**
**ஈடுபடும்போது தலைவனுக்கு நிகழுங் கூற்று**

**மெய்தொட்டுப் பயிறல், பொய்பாராட்டல்,**
**இடம்பெற்றுத் தழாஅல், இடையூறு கிளத்தல்,**
**நீடுநினைந்து இரங்கல், கூடுதல் உறுதல்,**
**சொல்லிய நுகர்ச்சி வல்லே பெற்றுழித்**
**தீராத் தேற்றம் உளப்படத் தொகைஇப்**
**பேராச்சிறப்பின் இருநான்கு கிளவியும்;**
**பெற்றவழி மகிழ்ச்சியும், பிரிந்தவழிக் கலங்கனும்,**
**நிற்பவை நினைஇ நிகழ்பவை உரைப்பினும்;**
**குற்றம் காட்டிய வாயில் பெட்பினும்,**
**பெட்டவாயில் பெற்று இரவுவலி யுறுப்பினும்**
**ஊரும் பேரும் கெடுதியும் பிறவும்**
**நீரிற் குறிப்பின் நிரம்பக் கூறித்**
**தோழியைக் குறையுறும் பகுதியும்; தோழி**
**குறைஅவள் சார்த்தி மெய்யுறக் கூறலும்,**
**தண்டாது இரப்பினும் மற்றைய வழியும்,**
**சொல்லவட் சார்த்தலின் புல்லிய வகையினும்,**
**அறிந்தோள் அயர்ப்பின் அவ்வழி மருங்கில்**
**கேடும் பீடும் கூறலும், தோழி**
**நீக்கலினாகிய நிலைமையும் நோக்கி**
**மடன்மா கூறும் இடனுமார் உண்டே. (1048)**

*களவொழுக்கத்தில் தலைவன் கூற்று*
*இயற்கைப் புணர்ச்சியில் நிகழ்வன*

1. தலைவியின் உடலைத் தொட்டுப் பழகிக் கூச்சத்தைப் போக்குதல். 2.பொய்யாகப் புனைந்து அவள் நெற்றி, கூந்தலைப் போல்வனவற்றைப் பாராட்டல். 3. அவளை நெருங்கித் தழுவுதல் 4. அவள் நாணமுற்று விலகுவதால் தான் துன்புறுவதைச் சொல்லுதல். 5. அவள் இணங்காதவள் போலக்

காணப்படுதலால், 'எப்போது இசைவாளோ' என்று நீண்ட நேரம் நினைந்து இரங்குதல். 6. கூடி மகிழ்தல். 7. தான் கூடிய 'நுகர்ச்சியை' விரைந்து பெற்றவிடத்து அவ்வின்பத்தில் திளைத்தல் 8. அப்போது அவளது தீராத அச்சத்தைத் தீர்த்து உறுதி கூறித்தேற்றுதல். இவை எட்டும் இயற்கைப் புணர்ச்சியாம் முதற் கூட்டத்தில் நிகழ்வன.

*தொடர்ந்து பொதுவாக நிகழ்வன*

1. அடுத்தடுத்துத் தலைவியைப் பெற்றவழி மகிழ்தல் 2. பிரிய நேர்ந்தவழிக் கலங்கல் 3. நிலையான இல்லற வாழ்வு நெறிகளை நினைத்து, அதற்குத்தக நிகழ வேண்டியவற்றைப் பேசுதல் 4. தன்னிடம் குற்றம் கண்டு கழறிய பாங்கனிடம் அவன் ஏற்குமாறு தன் காதலை விளக்குதல். 5. தலைவியால் விரும்பப்பட்ட அவளின் உயிர்த்தோழியை அணுகித் தலைவியை அடைய உதவுமாறு வலியுறுத்தி இரத்தல் 6. தினைப்புனத்தில் கண்டபோது 'உங்கள் ஊர் எது?' பேர் என்ன? என்று வினவி அணுகுதலுண்டு. 'கெடுதி வினாதல்' என்பது, 'யான் வேட்டையாடிய மான்தப்பித்துவிட்டது; அது இப்பக்கம் வந்ததா?' என வினவுதல். இத்தகைய நீர்மைப் பண்புடைய வினாக்களை நிரம்பச் சொல்லித் தோழியிடம் குறையிரந்து வேண்டுதல். 7. தலைவிமேல் குறையைச் சார்த்தி, தோழி உண்மையை அறியும்படி கூறுதல் 8. திரும்பத் திரும்பச் சளைக்காது கெஞ்சுதல் 9. பிறவாறு தோழி அலக்கழிக்கும்போது பேசுதல் 10. தோழியைக் கேட்டுக் கெஞ்சுதலினும் நேரே சென்று தலைவியைத் தழுவிக் கொள்ளுதல் 11. எல்லாம் அறிந்து 'மதியுடம் பட்ட' தோழி ஐயப்பட்டு மறுக்கும் போது, அதனால் வரும் கேடும், தனது பெருமையும் கூறி வேண்டுதல். 12. தோழி 'வாரற்க' எனத் தடுப்பதனால் ஏற்படும் நிலையில் பேசுதல் 13. எதுவும் இயையாதவழி மடலேறுவேன் என அச்சுறுத்தல். இவையாவும் தலைவன்பால் நிகழக்கூடியன.

**தலைவியின் உடலைத் தொட்டுப் பழகிக் கூச்சத்தைப் போக்கல். தலைவி தலைமுடி முதலியவற்றைப் பொய்யாகத் திருத்துவான் போலப் பாராட்டுதல். அதனால் அவளிடம் நெருக்கம் பெற்றுத் தழுவுதல், தலைவி நாணத்தால் ஒதுக்கி ஒதுங்கிப் போதலால் இடையூறு உற்றதைக் கூறுதல். அவள் இணங்காதாள் போலுதலால் நீண்ட நேரம் 'எப்போது' இணங்குவாள் என எண்ணி இரங்குதல், கூடி மகிழ்தல், முற் கூறிய இன்ப நுகர்ச்சியை விரைந்து (வல்லே) பெற்ற வழி, அவள் அச்சம் உறாது தெளிவித்தல். இவை எட்டும் இயற்கைப் புணர்ச்சிக்கண் நிகழ்வன.**

**தலைவியைப் பெற்றபோது மகிழ்ச்சி, பிரிய நேரும்போது கலங்குவது, உலகில் நிலையாக நிற்பதாகிய இல்லறத்தை நினைத்து,**

மேலே நிகழ வேண்டியவற்றைத் தலைவியிடம் எடுத்துரைப்பது, தன்பால் 'ஒருபெண் பொருட்டு வருந்துவதா' எனக் குற்றஞ் சொல்லி இடித்துரைக்கும் பாங்கனிடம் தனது களவொழுக்கத்தை ஏற்கும் வகையில் பேசுதல், தலைவியால் மிக விரும்பப்பட்ட உயிர்த்தோழியைத் துணையாகப் பெற்று அவளிடம் தலைவியைக் கூட உதவுமாறு வலியுறுத்தி இரத்தல், தலைவியும் தோழியும் தினைப்புனங்காக்குமிடத்துச் சென்று ஊர் எது என வினவியும் பேர் எதுவென வினவியும் தான் வேட்டையாடிய யானை முதலியன தப்பித்து இப்பக்கம் வந்தனவா என வினவியும் நீர்மையுடன் (பண்புடன்) மிகக் குறிப்பாகக் கூறித் தோழியிடம் தன் குறையைத் தீர்த்துவைக்க வேண்டுதல், தலைவிமேல் குறையைச் சார்த்தித் தோழி உண்மையை அறியும்படி நடந்ததைக் கூறுதல்.

தழாஅல் – தழுவுதல்; வல்லே – விரைவாக; குற்றங் காட்டிய வாயில் – பாங்கன். பெட்ட – விரும்பிய; வாயில் – தோழி. இரவு – இரத்தல், கெஞ்சிக்கேட்டல். கெடுதி – வேட்டையாடிவந்த யானையோ, மானோ தப்பிப்போனது. காணாமற் போனதைக் கெட்டுப் போனது என்பது பண்டைய வழக்கு. நீரில் – நீர்மையில். தடையின்றி மீண்டும் மீண்டும் கெஞ்சுதல். பிறவழிகளில் 'பிறகு வருக என்பது போல்' தோழி மறுத்துரைத்தல். தலைவிமேல் குறை சொல்லவே முன்பு நடந்த புணர்ச்சியைக் கூறித் தழுவிக் கொள்ளுதல். மதியுடம்பட்டு அறிந்த தோழி ஐயப்பாட்டால் அவ்விடத்துக் கேடு வருமெனவும், பெருமை குலையுமெனவும் கூறுதல், தோழி தன்னைச் சேய்மைப்படுத்தி நீக்க நினைக்குமிடத்துப் பேசுதல், அதைப் பார்த்து மடலேறுவேன் என்று கூறுதல் – இவை யாவும் தலைவன்பால் நிகழ்வன. தண்டாது – குறையாது.

**தலைவன் தோழியிடம் பேசும் முக்கியமான சூழல்கள்**

**பண்பிற் பெயர்ப்பினும், பரிவுற்று மெலியினும்,**
**அன்புற்ற நகினும், அவட்பெற்று மலியினும்**
**ஆற்றிடை யுறுதலும் அவ்வினைக்கியல்பே. (1049)**

தலைவன் தோழியிடம் பேசுவதற்கான மன நிலைகள்; தோழி 'இக் களவு பண்புடைமைக்கு அழகன்று' என மறுக்கும்போதும், காமத்தால் தான் மிகவும் பரிதவித்து உடல் மெலியும் போதும், தோழி அன்புடன் தன்னை நகையாடிக் கேலிக் குறிப்புடன் பேசும்போதும், அத்தோழியின் உடம்பாடு பெற்று மகிழும் போதும் தான் வரும் வழியில் இடையூறுகள் நேர்தலை உணர்த்துமிடத்தும் தலைவன் பேசுவான்.

இது பண்புடைமைக்கு அழகன்று எனக் கூறிக் களவைத் தோழிமறுக்குமிடத்தும், காமத்தால் மிகப் பரிதவித்து உடல் மெலியும் போதும். அன்பு தோன்ற நகையாடித் தோழி மறுக்கும் போதும் தோழியது உடம்பாடு பெற்று மகிழும் போதும் தான் வரும்வழியின் இடையூறுகள் பற்றிக் கூறும்போதும் தலைவன்பால் கூற்று நிகழும். மலிதல் – மகிழ்தல்.

**களவுப் புணர்ச்சிக்கு நிமித்த காரணங்களாகப் பன்னிரண்டு உணர்வுச் சூழல்கள் நிகழும்**

**பாங்காம் நிமித்தம் பன்னிரண்டு என்ப. (1050)**

***இயற்கைப் புணர்ச்சிக்கான உணர்வுச்சூழல்கள்***

பாங்காக – புணர்ச்சிக்கு நிமித்தமாக நிகழ்பவை பன்னிரண்டு மெய்ப்பாடுகள் அல்லது உணர்வுச் சூழல்கள் ஆகும்.

பாங்கு ஆம் நிமித்தம் – காதலர் கூடுதற்கு நிமித்தமாக நிகழ்பவை பன்னிரண்டாகும். காட்சி ஐயம் துணிவு; வேட்கை முதல் சாக்காடு ஈறானவை ஒன்பது ஆகப் பன்னிரண்டு.

**அவற்றுள் கைக்கிளை, பெருந்திணைகட்கு உரிய உணர்வு நிலைகள்**

**முன்னைய மூன்றும் கைக்கிளைக் குறிப்பே**
**பின்னர் நான்கும் பெருந்திணை பெறுமே. (1051)**

முதலில் கூறப்பட்ட காட்சி, ஐயம், ஆராய்ந்து தெளிதல் மூன்றும் கைக்கிளைக்கு உரியன. இறுதியில் கூறிய நோக்குவ எல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு நான்கும் பெருந்திணைக்குரியன.

காட்சி, ஐயம், தெளிதல் (துணிதல்) மூன்றும் ஐந்திணைக் காதலாகத் தொடர்வதன்றி ஒருதலைக் காமமாகிய கைக்கிளையாகவும் அமைதல். இறுதியிலுள்ள 'நோக்குவ எல்லாம் அவையே போறல், மறத்தல், மயக்கம், சாக்காடு என்ற நான்கும் அன்பின் ஐந்திணையாதலே யன்றி ஒவ்வாக் காமமாய்ப்' பெருந்திணையாகும்.

**அகன் ஐந்திணைக்கு உரிய உணர்வு நிலைகள்**

**முதலொடு புணர்ந்த யாழோர் மேன**
**தவலருஞ் சிறப்பின் ஐந்நிலம் பெறுமே. (1052)**

முதற்பொருளுடன் (நிலமும் பொழுதும்) கூடி வருவது எனவும் யாழோராம்

கந்தருவர் ஒழுக்கம் போல்வதெனவும் கூறப்பட்ட அன்பின் ஐந்திணையாம் களவொழுக்கம் குற்றமற்ற சிறப்பினையுடையதாய், இடையில் வரும் ஐந்து அடிக்கருத்துக்களைப்பெறும். வேட்கை, ஒருதலை உள்ளுதல், மெலிதல், ஆக்கஞ்செப்பல், நாணு வரை இறத்தல் என்பன அவை. இவை முறையே 1039, 1040, 1041 நூற்பாக்களிலும் 1046ஆம் நூற்பாவிலும் கூறப்பட்ட பன்னிரண்டும் ஆகும்.

இடையிலுள்ள ஐந்து: வேட்கை, ஒருதலையுள்ளுதல், மெலிதல், ஆக்கஞ்செப்பல், நாணுவரை இறத்தல் என்பன. இவை தமிழ் அகன் ஐந்திணை பற்றியே வரும். முதலொடு - முதற் பொருளுடன் கூடியதால் யாழோர் மேன என்பது தமிழ்க் களவு ஆகும்.

**களவொழுக்கத்தில் தலைவனுக்கு மேலும் நிகழுங் கூற்றுக்கள்**

**இருவகைக் குறி பிழைப்பாகிய இடத்தும்,**
**காணா வகையில் பொழுதுநனி இகப்பினும்,**
**தான்அகம் புகாஅன் பெயர்தல் இன்மையின்**
**காட்சி ஆசையில் களம்புக்குக் கலங்கி**
**வேட்கையின் மயங்கிய கையறு பொழுதினும்,**
**புகாஅக்காலைப் புக்கு எதிர்ப்பட்டுழிப்**
**பகாஅ விருந்தின் பகுதிக் கண்ணும்,**
**வேளாண் எதிரும் விருப்பின் கண்ணும்,**
**தாளாண் எதிரும் விடுத்தற் கண்ணும்,**
**நாணுநெஞ் சலைப்ப விடுத்தற் கண்ணும்**
**வரைதல் வேண்டித் தோழி செப்பிய**
**புரைதீர் கிளவி புல்லிய எதிரும்**
**வரைவு உடம்படுதனும் ஆங்கதன் புறத்துப்**
**புரைபட வந்த மறுத்தலொடு தொகைஇக்**
**கிழவோன் மேன என்மனார் புலவர். (1053)**

*களவொழுக்கத்தில்*
*மேலும் தலைவன் கூற்றுக்கள்*

பகற்குறி இரவுக்குறி இரண்டும் தவறுதலான போது; குறியிடம் சென்று காணாது நேரம் கடந்து கொண்டே இருக்கும்போது; தலைவன் குறியிடத்திற்குச் செல்வதில் சிறிதும் தவறமாட்டானாதலால் தலைவியைக் காணும் ஆசையில் குறியிடம் சென்று காமவேட்கையில் கையற்று மயங்கியபோது; உணவுண்ணும்

சமயத்தில் வீட்டினுள் சென்று, தலைவியை எதிர்ப்பட்டபொழுது, அவரால் தடுக்கப்படாமல் விருந்தினனாயிருந்ததுபற்றி; விருந்து புறந்தரும் இல்லறத்தை விரும்பி; பொருள் முயற்சிகருதிப் பிரியும்போது; நாணம் அவள் மனத்தை அலைக்கழித்தலால் அவளைப் போகவிடும்போது; திருமணம் நிகழ்வதற்காகத் தோழி கூறுகின்ற பொய்யும் மெய்யும் கலந்த குற்றமற்ற கூற்றுக்கு மறுமொழிகூறுதல்; திருமணத்திற்கு உடம்படுதல், அதைத்தவிர்த்துக் குற்றமுண்டாகத் திருமணத்திற்கு உடம்படாது களவை நீட்டித்தல் – இச்சூழல்களில் தலைவனுக்குக் கூற்று நிகழும்.

பகற்குறி இரவுக்குறி இரண்டும் தவறிய போதும் தலைவியைக் காணாது காலங் கடக்கும் போதும் தலைவன் குறியிடத்திற்குத் தவறாது செல்வதில் தவற மாட்டானாதலால் அவளைக் காணச் சென்று காணாது, காம வேட்கையின் கலங்கிச் செயலற்ற பொழுதும் உணவுண்ணும் நேரமாகிய சமயத்தில் புகுந்து, அவரால் நீக்கப்படாத விருந்தினனாகிய போதும், விருந்து புறந்தரும் இல்லறத்தை விரும்பியும் தலைவன் பொருள் முயற்சிக்காகப் பிரியும் போதும் தலைவிக்கு நாணத்தால் மனம் அலைவதைப் பார்த்து அவளைப் போகுமாறு விடுத்தற் கண்ணும் திருமணம் நிகழ்த்துவதற்காகத் தோழி கூறும் குற்றமற்ற கூற்றை ஏற்ற பொழுதும் வரைவுக்கு உடம்படுமிடத்தும் அதனைத் தவிர்த்துக் குற்றமுண்டாகத் திருமணத்தை மறுத்தலும் ஆகிய இவை தலைவன் கூற்றுக்களாகும்.

அகம் – குறியிடம். புகாஅக்காலை – உண்ணும் நேரம். புகா – உணவு. பகா – விலக்காத. வேளாண் – விருந்து புறந்தருதல் முதலிய இல்லற நெறிகள். தாளாண் – பொருள் முயற்சி. புரை – குற்றம், இது உயர்வையும் குறிக்குமிடமுண்டு. புரைபட வந்த – குற்றமுண்டாகுமாறு வந்தவை.

**தலைவியின் வேட்கை குறிப்பாலும் சூழலாலும் உணரப்படும். வெளிப்படக் கூறமாட்டாள், தலைவி**

**காமத் திணையில் கண்ணின்று வரூஉம்**
**நாணும் மடனும் பெண்மைய ஆதலின்**
**குறிப்பினும் இடத்தினும் அல்லது வேட்கை**
**நெறிப்பட வாரா அவள்வயி னான.** (1054)

*தலைவி மெய்ப்பாட்டால் தன் வேட்கையை உணர்த்துதல்*

காமத்திணையாம் அன்பின் அகத்திணையில் நிலைபெற்றுவரும் நாணமும் இளமைப் பண்பாகிய அடக்கத்ததைக் காட்டும் மடப்பமும் பெண்மைக்கே உரியன. ஆகையால் தலைவியது காம வேட்கைகள் வெளிப்படத் தோன்றா. குறிப்பாலும் சூழலாலும் பிறரால் உணரப்படும். (வாய்விட்டுரைப்பது அவள் வழக்கமில்லை.)

காமத்திணை - அகத்திணை. கண் நின்று - நிலைபெற்று. பெண்மைக்கு நாணமும் மடமும் முக்கியம். அவளது வேட்கைக் (விருப்பம்) கூற்றுக்கள் குறிப்பால் உணரப்படும், சூழலாலும் அறியப்படும்; நேர்முகமாக வெளிப்படா.

**கண்களாலேயே உணர்த்த முடிதலால், நாணமும் மடப்பமும் நீங்குவதில்லை**

**காமம் சொல்லா நாட்டம் இன்மையின்**
**ஏமுற இரண்டும் உளஎன மொழிப. (1055)**

காம வேட்கையை அவளது கண்களே சொல்லி விடும். அங்ஙனம் குறிப்புணர்த்தாத கண்களே இல்லையாதலால், அவளுக்குப் பாதுகாப்பாக முற்கூறிய நாணமும் மடப்பமும் உள்ளனவேயாம்.

ஏம்உற- தலைவனுக்கு விளங்குமளவு. காமத்தைக் கண்களே சொல்லும். அவ்வாறு சொல்லாத நாட்டம் (கண்பார்வை) இல்லை. இரண்டு - நாணமும் மடப்பமும். மடப்பம் - இளமைத் தன்மை, அதிரப் பேசாத தன்மை.

**மகளிர் பெரிதும் 'அல்ல' எனும் நடையில் 'வேண்டாம்' என்றே பேசுவர், அதற்கு 'வேண்டும்' என்றே பொருள்**

**சொல்எதிர் மொழிதல் அருமைத்து ஆகலின்**
**அல்ல கூற்றுமொழி அவள்வயி னான. (1056)**

தலைவன் வேட்கையை வெளிப்படுத்தி வேண்டும் போது, அச்சொல்லுக்கு மறுமொழிதல் தலைவிக்கு அரிது. ஆதலால் 'வேண்டாதார் போலக் கூறும்' 'அல்ல, வேண்டாம்' எனும்படியான சொற்களே அவளிடம் தோன்றும்.

சொல் எதிர்மொழிதல் - தலைவன் விரும்பிப் பேசும்போது உடம்பட்டுப் பேசும் முறை. அருமைத்து - தலைவிக்கு இயலாது. அல்ல கூற்றுமொழி - வேண்டாதாள் போலப் பேசுவது.

## களவுக்காலத்தில், மேலும் தலைவிக்கு நிகழும் கூற்றுக்களும் மெய்ப்பாடுகளும்

மறைந்து அவற் காண்டல், தற் காட்டுறுதல்,
நிறைந்த காதலில் சொல் எதிர் மழுங்கல்,
வழிபாடு மறுத்தல், மறுத்து எதிர்கோடல்,
பழிதீர் முறுவல் சிறிதே தோற்றல்,
கைப்பட்டுக் கலங்கினும், நாணுமிக வரினும்
இட்டுப்பிரிவு இரங்கினும், அருமை செய்து அயர்ப்பினும்
வந்தவழி எள்ளினும், விட்டு உயிர்த்து அழுங்கினும்,
நொந்து தெளிவு ஒழிப்பினும், அச்சம் நீடினும்
பிரிந்தவழிக் கலங்கினும், பெற்றவழி மலியினும்
வரும் தொழிற்கு அருமை வாயில் கூறினும்
கூறிய வாயில் கொள்ளாக் காலையும்
மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்கு
நினைத்தல் சான்ற அருமறை உயிர்த்தலும்
உயிராக் காலத்து உயிர்த்தலும், உயிர்செல
வேற்று வரைவுவரின் அது மாற்றுதற் கண்ணும்,
நெறிப்பட நாட்டத்து நிகழ்ந்தவை மறைப்பினும்,
பொறியின் யாத்த புணர்ச்சி நோக்கி
ஒருமைக் கேண்மையின் உறுகுறை தெளிந்தோள்
அருமை சான்ற நாலிரண்டு வகையின்
பெருமை சான்ற இயல்பின் கண்ணும்,
பொய்தலை அடுத்த மடலின் கண்ணும்
கையறு தோழி கண்ணீர் துடைப்பினும்
வெறியாட் டிடத்து வெருவின் கண்ணும்,
குறியின் ஒப்புமை மருடற் கண்ணும்,
வரைவு தலைவரினும், களவு அறிவுறினும்,
தமர் தற் காத்த காரண மருங்கினும்,
தன்குறி தள்ளிய தெருளாக் காலை
வந்தனன் பெயர்ந்த வறுங்களம் நோக்கித்
தன் பிழைப்பாகத் தழீஇத் தேறலும்,
வழுவின்று நிலைஇய இயற்படு பொருளினும்,
பொழுதும் ஆறும் புரைவது அன்மையின்

அழிவு தலைவந்த சிந்தைக் கண்ணும்,
காமஞ் சிறப்பினும், அவன் அளி சிறப்பினும்,
ஏமம் சான்ற உவகைக் கண்ணும்,
தன் வயின் உரிமையும் அவன் வயின் பரத்தையும்
அன்னவும் உளவே ஓரிடத் தான. (1057)

1. மறைந்து நின்று தலைவனைக் காணுதல் 2. தன்னை அவன் காணுமாறு நிற்றல் 3. மிகுந்த காதலால் விடை கூறாது மழுங்குதல் 4. தலைவன் கெஞ்சுவான் போல் நெருங்குவதை மறுத்தல். 5. மறுத்துப்பின் ஏற்று எதிர் கொள்ளுதல் 6. குற்றமற்ற குறுநகை சிறிது தோற்றுதல். இவை ஆறும் முதல் புணர்ச்சிக்கு முன் நிகழும் என்பர் இளம்பூரணர். 1. தலைவன் கையகப்பட்டபின் 'என் செய்தோம்' எனக் கலங்குதல் 2. மிகவும் நாணப்படுதல் 3. சிறு பிரிவுக்கும் வருந்துதல் 4. காப்பு அருமை கூறித் தலைவன் வருதலைத் தடுத்தல் 5. அவன் வந்த போது அலராகுமென மறுத்துப் பேசுதல் 6. வெளிப்பட மனவருத்தத்தைச் சொல்லியிரங்குதல் 7. மனம் நொந்து தலைவன் உறுதி கூறுவதை ஏற்க மறுத்தல் 8. தலைவன் வருகைக்கு மிகவும் அஞ்சி வருந்துதல் 9. தலைவன் பிரிந்த போது கலங்குதல் 10. அவனைப் பெற்றுக் கூடியவழி மகிழ்தல் 11. அவன் வருகின்றமைக்குக் காவல் மிகுதியால் தடையேற்படுமெனத் தோழி கூறும்போது பேசுதல் 12. தோழி கூறுவதை ஏற்காது கூறுதல் இவை பனிரண்டும் தலைவி தனித்தும் தோழியிடத்தும் பேசுவன; புணர்ச்சிக்குப் பின் நிகழ்வன என்பர் இளம்பூரணர்.

வீட்டில் சிறையாகக் காவலில் வைக்கப்பட்டபோது மனமுடைந்து தோழிக்கு, முன் நிகழ்ந்தவற்றை நினைத்து, அக்களவுக் கூட்டத்தை வெளிப்படுத்துதல். வெளிப்படாத சூழலிலும் தலைவி தன் களவைத்தானே முன் வந்து தோழியிடம் கூறுதல், உயிர் போகுமாறு, வேற்றவர் மணம் பேசவந்தால் அதை மாற்ற முயலுதல், பெற்றோர் முறையாக ஆராயுங்காலத்து முன்பு நிகழ்ந்த களவை மறைக்க முயலுதல், ஊழினால் கூட்டுவிக்கப்பட்ட புணர்ச்சியால் ஏற்பட்ட, மாறாத ஒருமை நட்பினுக்கு வரக்கூடிய குறைகளை அறிந்த தலைவி, அருமை பொருந்தியதாக முன்னர்ச்சுட்டிய 'மெய்தொட்டுப் பயிறல்' முதலான எட்டுவகை மெய்ப்பாடுகளை நினைப்பாள் (1048). அவற்றின் பெருமைக்கு ஊறுவராதபடி நடப்பாள்.

தலைவன் பொய்யாக மடலேறுவேன் என மருட்டும் போதும், தோழி கையற்றுத் தன் கண்ணீரைத் துடைக்கும் போதும், தாயர் வெறியாட்டு எடுக்கும்போது தோன்றும் அச்சத்தின் கண்ணும், தலைவன் செய்த குறி

பிறிதொன்றால் நிகழ அவ் ஒப்புமைகண்டு மருளும் போதும், மணம் நிகழும் சூழல் வரினும், தங்கள் களவு ஒழுக்கம் பெற்றோரால் அறியப்படினும், தம் சுற்றத்தவர் தன்னைப் புறம் செல்லாது காத்த காரணங்களின் போதும், தலைவன் செய்த, குறி – அடையாள ஒலியைத் – தான் தெளிய அறியாது தவறியதால், தலைவன் வந்து தன்னைக் காணாது வறுங்களத்தைப் பார்த்து வருந்திப் போகவே அதைத் தன் பிழைப்பாகக் கருதித் தலைவன் பிழையன்று எனத் தெளிதலும், குற்றமின்றி நிலைபெற்ற தலைவனது இயல்பைப் போற்றிப் பேசும்போதும், தலைவன் தன்னைத் தேடிவரும் காலமும் வழியும் பொருத்தமுடையன அன்மையின் சிந்தை அழிந்து வருந்துதற்கண்ணும் காமஉணர்வு மிகும்போதும், அவன் தன்பாற் செய்யும் தண்ணளி (கருணை) மிகும்போதும், களவுக்காலம் போலாது துன்பமற்ற இன்பவுணர்வு ஏற்படும் போதும், தனக்கு இல்லற வாழ்வில் கிடைத்த உரிமையை நினைத்தலும், அவனிடம் அயன்மை உணர்வு இருப்பதை எண்ணிப் பார்த்தலும் அத்தகையன பிறவும் தலைவியிடம் காணப்படுபவையாகும்.

தான் மறைந்து நின்று தலைவனைப் பார்த்தல், தன்னை அவன் பார்க்குமாறு நிற்றல், மழுங்கல் – பதில் கூறாது மழுங்குதல், தலைவன் கெஞ்சுவது போல் வேட்கையுடன் நெருங்குவதை மறுத்தல், பின்பு ஏற்று எதிர்கொள்ளுதல், சிறிது புன்னகைத்தல். இவை புணர்ச்சிக்கு முன் நிகழும் ஆறு மெய்ப்பாடுகள்.

அவன் கையகப்பட்ட பிறகு 'என்ன செய்துவிட்டோம்' எனத்தானே மயங்குதல், மிகுந்த நாணவயப் படுதல், இட்டுப்பிரிவு – சிறுபிரிவு, வரைவிடைப் பிரிவு, காண வருதலுக்குக் காப்பு மிகுதி என அருமை கூறி அவன் வருதலைத் தளர்த்தினும், வந்த வழி அலராகுமென இகழ்தலும், விட்டு உயிர்த்து – வெளிப்படச் சொல்லி. தெளிவு – தலைவன் கூறிய நம்பிக்கை. தலைவன் வரும் வழிக்கு அஞ்சுதல். பெற்றவழி – கூடிய போது. தலைவன் வருவதற்குத் தடையாகக் காவல் மிகுதியானதெனத் தோழி கூறிய போது. தோழி கூறியதை மனங்கொள்ளாத இடத்தும் (வாயில் – தோழி) அருமறை – களவு.

இவை பன்னிரண்டும் தலைவிமாட்டுத் தனித்தும் தோழியிடத்துமாக நிகழ்வன. புணர்ச்சிக்குப் பின்பு நிகழ்வன. இவை வீட்டுக் காவலில் அகப்பட்டு வருந்தும் போது தோழியிடம் நடந்ததை விவரிப்பனவுமாம். இவை உள்ளப் புணர்ச்சிக்குப் பின்னும் நிகழும் என்பர் இளம்பூரணர்.

உயிராக் காலம் – அவ்வாறு வெளிப்படாத காலம். உயிர்த்தல் – சொல்லுதல். உயிர்போகுமாறு, பிறர் மணம் பேசவரின் அதை மாற்ற

முயல்வாள். நெறிப்படு நாட்டத்து - தோழி தலைவியை ஆராய்தல். தலைவி களவை மறைக்க முயலுதல். பொறி - ஊழ்வினை. புணர்ச்சி - இயற்கைப் புணர்ச்சி. ஒருமைக் கேண்மை - மாறாக் காதல். தெளிந்தோள் - தலைவி. நாலிரண்டு வகை - முன்பு 'மெய் தொட்டுப் பயிறல்' முதலாகச் சொன்ன இயற்கைப் புணர்ச்சிக்கு நிமித்தமான எட்டு. அவற்றின் பெருமையறிந்து தலைவி நடந்து கொள்ளுதல். இவை சிறிதும் மனம் கலங்காத நிலையின.

பொய்தலை வைத்த - தலைவன் பொய்யாக, அச்சுறுத்தற்குக் கூறிய (மடல்). தோழி தலைவி கண்ணீரைத் துடைத்தல். செவிலி வெறியாட்டு எடுக்குமிடத்து அஞ்சிப் பேசுவாள். தலைவன் செய்த குறி (பறவையைக் கலைத்தல் போல) வேறொன்றால் அதைப் போலக் கேட்க மருட்சியுற்ற போதும். திருமணம் கைகூடினும் களவு அறியப்படினும் தமர் தன்னைப் பாதுகாக்குமிடத்தும். தன்குறி - தலைவன் செய்த அடையாளம். தள்ளிய - தவறிய. தன் பிழைப்பாக - தலைவி இது தன் பிழை என்று.

வழுவின்று - குற்றமின்றி. இயற்படுபொருள் - தலைவன் இயல்பைப் போற்றிக் கூறல். பொழுதும் ஆறும் - தலைவன் வரும் நேரமும் வழியும். புணர்வது அன்மையின் - பொருந்தாமையின். சிறத்தல் - மிகுதல். அளி - தலையளி செய்தல், தலைவனின் அருளுடைமை. உவகை - இன்ப மகிழ்ச்சி. குடும்பத்தில் தலைவி தன்பால் உள்ள உரிமையும் தோன்றப் பேசுவாள். தலைவனிடம் பரத்தைமை (அயன்மை என்பது ஈண்டுப் பொருள்) அதாவது தன்னுடன் ஒட்டாமை. குடும்பத்தில் தனது உரிமையும் அவனது அயன்மையும்.

ஓரிடத்தான - ஒவ்வொன்றும் ஒவ்வொரிடத்தன. இவை அனைத்தும் எல்லாத் தலைவியரிடத்தும் எல்லாக் காலத்தும் நிகழ்வன அல்ல. தொடர்ச்சியாக நிகழ்வனவும் அல்ல. ஒவ்வொரு கூற்றும் ஒரு தனி நாடகப் பின்புலமுடையன. தொல்காப்பியர் இவற்றை எத்தொடர்புமின்றிக் கலந்து கூறியிருப்பது அதனாலேயாம்.

### தலைவி சிந்தித்துப் பேசும் இடங்கள்

**வரைவு இடைவைத்த காலத்து வருந்தினும்**
**வரையா நாளிடை வந்தோன் முட்டினும்**
**உரை எனத் தோழிக்கு உரைத்தற் கண்ணும்**
**தானே கூறும் காலமும் உளவே. (1058)**

தலைவன் வரைவிடை வைத்துப் பொருள் தேடப் போனவன் விரைந்து வராததால் வருந்திய போதும் வரைவதற்கு முற்பட்ட நாட்களில் தன்னைத் தேடி வந்தவன் எதிர்பாராது தன் சுற்றத்தவரை நேருக்குநேர் சந்திக்க நேர்ந்த போதும் விரைவில் மணம்முடிக்கத் தலைவனுக்குச் சொல் என்று தோழியிடம் கூறுகிறபோதும் தலைவி தானாகவே சிந்தித்துக் கூறும் சூழல்களும் உள.

வரைவு – திருமணம். இடைலவத்து – பொருளீட்டி வந்து மணப்பேன் எனக் கூறிக் கால இடைவெளி வைத்துப் பிரிதல். அவ்வாறு சொன்னபடி வாராதபோது தலைவி கூற்று நிகழும். வரையாநாளிடை – மணம் செய்யாத காலத்து. முட்டினும் கையும் களவுமாகத் தாயரை எதிர்ப்பட நேரினும். விரைவில் மணம் முடிக்குமாறு தலைவனிடம் கூறு எனத் தோழியிடம் வற்புறுத்துமிடத்தும்.

**தலைவி, தன் கற்பைக் காக்க உறுதிபூண்டு பேசுமிடங்கள்**

**உயிரினும் சிறந்தன்று நாணே; நாணினும்**
**செயிர் தீர் காட்சிக் கற்புச் சிறந்தன்று எனத்**
**தொல்லோர் கிளவி புல்லிய நெஞ்சமொடு**
**காமக் கிழவன் உள்வழிப் படினும்**
**தாவில் நன்மொழி கிழவி கிளப்பினும்**
**ஆவகை பிறவும் தோன்றுமன் பொருளே. (1059)**

நம் முன்னோர் நமக்குச் சொல்லிக் காட்டிய நெறி ஒரு பெண்ணுக்கு உயிரைவிட நாணம் சிறந்தது; நாணத்தைவிடக் குற்றமற்ற அறிவார்ந்த கற்புச் சிறந்தது. இதனை உட்கொண்ட மனத்துடன் தன் காமத்திற்குரியனாகிய தன் தலைவனிருக்குமிடம் தேடிச் செல்ல நினைத்துப் பேசினும் குற்றமற்ற பிற நன்மொழிகளாய் அதனொடு தொடர்புடையனவற்றைத் தலைவி சொன்னாலும் அவ்வகைப்பட்டன பிறவும் பாட்டுப்பொருளாக அக இலக்கியத்தில் வரும்.

செயிர் தீர் – குற்றமில்லாத. தொல்லோர் கிளவி – தொன்றுதொட்டுப் பெரியோர் சொல்லி வருவது. புல்லிய – பொருந்திய. காமக் கிழவன் – தன் காமத்தைத் தீர்க்க வேண்டிய தலைவன். உள்வழிப் படுதல் – தலைவனிடம் போக நினைத்துப் பேசுதல். தாஇல் – குற்றமில்லாத. நன்மொழி – நல்லனவற்றை. இத்தகைய கூற்றுக்களும் தலைவியிடம் நிகழும். வாய்அதிகம் பேசாத மடப்பத்தையுடைய தலைவி இங்ஙனம் சூழல் மாறும் பொழுது சினந்தும் பரிந்தும் பேசுவாள் என்பது கருத்து.

## களவுக் காலத்தில் தோழிக்கு நிகழும் கூற்று

நாற்றமும் தோற்றமும் ஒழுக்கமும் உண்டியும்
செய்வினை மறைப்பினும் செலவினும் பயில்வினும்
புணர்ச்சி எதிர்ப்பாடுள்ளுறுத்து வருஉம்
உணர்ச்சி ஏழினும் உணர்ந்த பின்றை
மெய்யினும் பொய்யினும் வழிநிலை பிழையாது
பல்வேறு கவர்பொருள் நாட்டத்தானும்,
குறையுறற்கு எதிரிய கிழவனை மறையுறப்
பெருமையிற் பெயர்ப்பினும் உலகு உரைத்து ஒழிப்பினும்
அருமையின் அகற்சியும் அலர் அறிவுறுத்துப்
பின்வா என்றலும் பேதைமை ஊட்டலும்
முன்னுறு புணர்ச்சி முறைநிறுத் துரைத்தலும்
அஞ்சி அச்சுறுத்தலும் உரைத்துழிக் கூட்டமோடு
எஞ்சாது கிளந்த இரு நான்கு கிளவியும்,
வந்த கிழவனை மாயம் செப்பிப்
பொறுத்த காரணம் குறித்த காலையும்
புணர்ந்தபின் அவன்வயின் வணங்கற் கண்ணும்
குறைந்துஅவள் படரினும் மறைந்தவள் அருகத்
தன்னொடும் அவளொடும் முன்னம் முன்தளைஇப்
பின்னிலை நிகழும் பல்வேறு மருங்கினும்
நன்னயம் பெற்றுழி நயம்புரி இடத்தினும்
எண்ணரும் பன்னகை கண்ணிய வகையினும்
புணர்ச்சி வேண்டினும் வேண்டாப் பிரிவினும்,
வேளாண் பெருநெறி வேண்டிய இடத்தும்
புணர்ந்துழி உணர்ந்த அறிமடச்சிறப்பினும்
ஓம்படைக் கிளவிப் பாங்கின் கண்ணும்
செங்கடுமொழியால் சிதைவுடைத்தாயினும்
என்பு நெகப் பிரிந்தோள் வழிச்சென்று கடைஇ
அன்பு தலையடுத்த வன்புறைக் கண்ணும்
ஆற்றது தீமை அறிவுறு கலக்கமும்
காப்பின் கடுமை கையற வரினும்
களனும் பொழுதும் வரைநிலை விலக்கிக்
காதல் மிகுதி உளப்படப் பிறவும்,
நாடும் ஊரும் இல்லும் குடியும்

**பிறப்பும் சிறப்பும் இறப்ப நோக்கி**
**அவன் வயின் தோன்றிய கிளவியொடு தொகைஇ**
**அனை நிலை வகையான் வரைதல் வேண்டினும்**
**ஐயச் செய்கை தாய்க்கு எதிர் மறுத்துப்**
**பொய்யென மாற்றி மெய்வழிக் கொடுப்பினும்**
**அவள் விலங்குறினும் களம் பெறக்காட்டினும்**
**பிறன் வரைவு ஆயினும் அவன் வரைவு மறுப்பினும்**
**முன்னிலை அறன் எனப்படுதல் என்று இருவகைப்**
**புரைதீர் கிளவி தாயிடைப் புகுப்பினும்**
**வரைவு உடன்பட்டோர்க் கடாவல் வேண்டினும்**
**ஆங்கு அதன் தன்மையின் வன்புறை உளப்படப்**
**பாங்குற வந்த நாலெட்டு வகையும்**
**தாங்கு அரும் சிறப்பின் தோழி மேன.** (1060)

*களவுக் காலத்தில் தோழி கூற்று*

தலைவியின் களவொழுக்கத்தைத் தோழி உய்த்துணர்ந்து கண்டுகொள்ள முயலும் முறைகள். 1. புதிய மணம் தலைவிபால் ஏற்படுதல் 2. தோற்றப் பொலிவு புதிதாதல் 3. நடை முறைகளில் புதிய மாற்றம் 4. உண்டி பண்டையிற்சுருங்குதல் 5. தன் செயல்களை மறைக்க முயலுதல் 6. ஒரு திசைக்கே செல்லுதல் 7.ஓரிடத்திலேயே பல காலும் சுற்றித்திரிதல்.

இவை புணர்ச்சியை நோக்கி உள்ளுள் விளையும் மறைவான வேட்கையில் ஏற்படும் உணர்ச்சிகள். இவை ஏழினும் உணர்வாள். உணர்ந்தபிறகு மெய்யாகவும் பொய்யாகவும் ஏதும் பின் விளைவு ஏற்படாதபடி, பலவகையான, இருபொருள்படும்படியானவற்றைச் சொல்லி, தலைவியின் உட்குறிப்பை ஆராய்வாள். (வழியிடை வந்த ஒருவனைப் புலி ஒன்று விரட்டியதாம் என்றதும் தலைவியிடம் ஒரு நடுக்கம் தோன்றும்.) இவை இரண்டு வகை.

1. தன் குறை வேண்டிவந்த தலைவனிடம், இம்மறைவான உறவு உன் பெருமைக்குத் தகாது என மறுப்பாள். 2. உலகு பொல்லாதது! என அதன் இயல்பை உரைத்து மறுப்பாள். 3. தலைவி அணுகுதற்கு அரியள் என விலக்குவாள் 4. தலைவிக்கு அறிவுறுத்தியபின் தலைவனைப் பின்னொருகால் வா என்பாள்.5. தலைவி அறியாப் பருவத்தாளெனச் சொல்லி மறுப்பாள்.

6. முதலில் நடந்த புணர்ச்சியைச் சுட்டி அதைப்போல நீயே சென்று கூடுக எனக் கூறி விடுப்பாள். 7. பெற்றோர் அறியக் கூடுமெனத் தானும் அஞ்சி அவனையும் அச்சுறுத்துவாள். 8. தலைவன் விளக்கியுரைத்தவழித் தலைவியைக்

கூடுதற்குத் தலைவனிடம் சம்மதிப்பாள். இவை எட்டும் களவைத் தடுத்துத் திருமணத்திற்குத் தூண்டுவதற்காகத் தோழியிடம் நிகழ்வன.

இனி வருவன தலைவன் தலைவியைக் கூடியபின் நிகழ்வன. முன்பு தேடிவந்த தலைவனைப் பொய் பல சொல்லித் தடுத்ததற்கான காரணங்களைத் தோழி சொல்வாள். புணர்ச்சி நிகழ்ந்தபின் தோழி தலைவனிடம் வணக்கத்தோடு பேசுவாள். தலைவன் தன்னிலையில் தாழ்ந்து தோழியிடம் இரந்து நிற்கும்போதும் பேசுவாள். தலைவியைக் காணமுடியாது, வாய்ப்புச் சுருங்கும். அப்போது தன்னோடும் அவளோடும் முன்னதாக நடந்த குறிப்பைக் கூறித் தலைவன் இரந்து நிற்கும் பல சூழல்களிலும் தோழி பேசுவாள். தோழி தலைவியின் இசைவைப் பெற்றவழி நல்லது செய்யுமிடத்திலும், பலவாறு நகையாடிப் பேசும் போதும், தலைவன் புணர்ச்சி வேண்டுமிடத்தும் விருப்பமில்லாத பிரிவு நேரும்போதும், இல்லற நெறியை வேண்டுமிடத்தும், புணர்ந்துழித் தலைவி அறிந்தும் அறியாதாள் போலிருக்கும் இளமைச் சிறப்பை எடுத்துரைக்குமிடத்தும், தலைவியைப் பாதுகாக்க வேண்டுமிடத்தும், தலைவனால் எலும்பும் உருகப் பிரிந்திருக்கும் தலைவியிடம் சென்று, செம்மையான கடிய சொற்களால், தலைவியது மனம் கலங்கும்படி பேசி, அன்புடன் கூடிய சொற்களால் அவளை ஆற்றியிருக்குமாறு வற்புறுத்துமிடத்தும் தோழிக்குக் கூற்று நிகழும். இவை பன்னிரண்டுவகை.

இனி வருவன தலைவனைத் திருமணத்திற்குத் தூண்டுவன. தலைவன் வரும் வழியிடை நேரும் ஆபத்தை அறிவுறுத்திக் கலங்குதல். பெற்றோர் இற்செறிக்கும் கடுமையால் கையற்று வருந்துதல். குறியிடமும் நேரமும் குறித்ததைக் காப்பு மிகுதியால் விலக்கித் தலைவியது காதல் மிகுதியைக் கூறலும் நாடும் ஊரும் வீடும் குடியும் பிறப்பும் சிறப்பும் ஆகியன பற்றி மிக விரிவாகத் தலைவனிடம் கூறி, திருமணத்திற்குத் தூண்டுவாள். இவை நான்காகும்.

தாய் ஐயப்படும்போது மறுத்துரைப்பாள்; பொய் என மாற்றிச் சொல்லி, உண்மையாய் நடந்த வழியில் ஈடுபடுத்தித் தந்திரம் செய்வாள். தாய் தடுத்தாலும் வெறியாட்டெடுத்தாலும் வேற்றவர் வரைய வரினும் தலைவனுக்கு மணம் செய்து கொடுக்க மறுப்பினும் முன்னிலை (முன் நின்று பேசுதல்), அறத்தொடுநிலை என்னும் இருவகையால், பொய்யும் மெய்யும் கலந்த குற்றமற்ற தன் சமர்த்துப் பேச்சால் தாயை வழிப்படுத்துவாள். பெற்றோர் வரைவுக்கு உடம்பட்டாரெனத் தலைவனை 'வரைவு கடாவ' (பெற்றோரிடம் சென்று பெண்கேட்டல்) வேண்டுவாள், அவ்வாறு நிகழ இருப்பதால் தலைவியை ஆற்றியிருக்க வற்புறுத்துவாள். இவை ஆறு. ஆக இவ்வாறு வந்த முப்பத்து இரண்டு வகையும் மிக்க சிறப்பினையுடைய தோழிக்குரியன.

முதல் ஏழு, தோழி தலைவிக்குக் களவொழுக்கம் உண்டு என உய்த்து அறிவது. தோழிக்கும் தெரியாமல் தொடங்குவதே இக்காதலுறவு. அதைக் கீழ்க்கண்ட முறைகளில் தோழி உய்த்தறிய முயலுவாள்.

நாற்றம் - புதிய மணம். தலைவனைக் கூடிய காலத்துப் புதிய பூமணமும் சந்தன மணமும் பெற்றிருப்பாள் தலைவி.

தோற்றம் - கூடியதால் வரும் புதிய பொலிவு.

ஒழுக்கம் - அன்றாட நடையுடையில் மாற்றம்; தன்னை மிகவும் பேணிக் கொள்ளுதல்.

உண்டி - உண்ணும் உணவு சுருங்குதல்.

செய்வினை மறைப்பு - பூக்கொய்தல், புனலாடலில் தோழிக்குத் தெரியாமல் நிகழ்த்துதல்; தன் காரியங்களை மறைக்க முயலுதல்.

செலவு - என்றும் போலாது ஒருதிசைக்கே அடிக்கடி போதல்

பயில்வு - குறிப்பிட்ட இடத்திலேயே பலகாலும் இருத்தலும் உலவுதலும்.

புணர்ச்சி எதிர்ப்பட்டதால் இவ்வுணர்ச்சிகளேற்பட, அதை வைத்துத் தோழி, களவை அறிவாள்.

கவர் பொருள் நாட்டம் - இருபொருள்படப் பேசிக் குறிப்பறிதல். 'யானை ஒன்று குருதிபடிந்த தந்தத்தோடு வந்தது.யாரைக்குத்தியதோ' என்பாள் தோழி. தலைவி நடுங்கவே, தோழிக்கு ஐயம் ஏற்படும். நாட்டம் - ஆராய்தல்.

கிழவன் - தலைவன். தலைவனது பெருமை கூறித் தோழி தலைவியை அவன் காண முயல்வதைத் தடுப்பாள்.

உலகியல்படி மணம் பேசி வருக என்று மறுப்பாள்.

தலைவியை அணுகுதல் அரிதென விலக்குதல், முதலில் தலைவிக்கு அறிவுறுத்திப் பிறகு வா எனல், அறியாப் பருவத்தாளெனல், முதலில் நடந்த புணர்ச்சியைச் சுட்டி அதைப் போல நடந்து கொள்க என்பாள், யாரேனும் காண்பரென அஞ்சியதாக அச்சுறுத்துதல், உரைத்துழி - தலைவன் விளக்கியுணர்த்தியவழி. கூட்டம் - தலைவனிடம் தலைவியும் உன்னைப் போன்றவளே, எனச் சேர்த்துக் கூறுதல். இவை எட்டும் தலைவனைக் களவொழுக்கத்தைத் தடுப்பதற்கும் திருமணத்திற்குத் தூண்டுவதற்கும் எனத் தோழி கூறுவன.

இனி வருவன தலைவன் தலைவியைக் கூடிய பின் நிகழ்வன.

மாயம் செப்பி – பொய் கூறி. பொறுத்த காரணம் – தடுத்த காரணம். புணர்ச்சியின் பின் தோழி வணங்கி வற்புறுத்த வேண்டிய நிலை ஏற்படுகிறது. குறைந்து – தலைவன் முன் தன் நிலையில் தாழ்ந்து பேசி. அருக – தலைவி மறைக்க. முன்னம் – குறிப்பினால். பின்னிலை – தலைவி தலைவனை ஏற்குமாறு செய்தல். அவன் இரந்து பின்னிற்றலைக் குறிப்பால் உணர்த்தல். நன்னலம் – தலைவி குறை நயத்தல், தலைவனை ஏற்க இசைதல். பன்னகை – பலவாகிய நகையாடற் பேச்சுக்கள். தலைவன் புணர்ச்சி வேண்டுமிடத்தும். விருப்பமில்லாத பிரிவு – சிறுபிரிவு – பொருள்தேடப் பிரிதல். பெருநெறி – இல்லறம். தலைவி அதை வேண்டுதல். அறிமடச் சிறப்பு – தலைவி அறிந்தும் அறியாதாள்போல் இருக்கும் பெருந்தன்மை. ஓம்படை – தலைவியை இறுதிவரை காக்குமாறு வேண்டுதல். செங்கடு மொழி – நேர்மையான ஆனால் கடியசொல். (செம்மையும் கடுமையும் கலந்த சொல்), தலைவியை வற்புறுத்தவே. சிதைவு – தலைவி மனங்கலங்குதல். என்பு நெக – பிரிவில் எலும்பும் உருகப் பிரிந்து வருந்தும் தலைவி. வழி – தலைவி போக்கில் பேசி. கடைஇ – அழுத்தமாக மனத்தில் பதிய. வன்புறை – தலைவியை ஆற்றுவித்தல்.

இனி வருவன தலைவனைத் திருமணத்திற்குத் தூண்டுவன. ஆற்றது தீமை – வழியிடை நேரக் கூடிய ஆபத்து. காப்பு – இற்செறிப்பு, பெற்றோர் காத்தல். களம் – குறியிடம். பொழுது – குறித்த காலம். வரைநிலை – முன்பு வரையறுத்ததைக் காப்பு மிகுதியால் விலக்கி. காதல் – தலைவியது வேட்கை கூறல்.

நாடு, ஊர், இல்லம், குடி இவற்றை எண்ணிப் பார்த்து, இழுக்கு நேராதவாறு காக்கப் பேசுதல். பிறப்பு, சிறப்புப் பற்றித் தலைவனிடம் தோழி எடுத்துரைத்தல். இவ்வாறு திருமணம் செய்து கொள்ள வேண்டுவாள்.

தாய் ஐயப்பட, அதை மறுப்பாள். பின் பொய்யாக ஒன்றைக் கூறி, மெய்யை நிலைநாட்டுவாள் தோழி. யானை கொல்ல வந்த போது காத்தனன் எனப் பொய்கூறி, அத்தலைவனையே மணக்க வழி செய்வாள். இங்கு பொய், மெய்யாக மாற்றப்படுகிறது. விலங்குறினும் – தாய் திருமணத்தைத் தடுத்தாலும். முன்னிலை – வேலன், கட்டுவிச்சி குறி கூறும்போது, முன்னின்று உண்மையைக் குறிப்பாற் கூறுதல். அறன் –

அறத்தொடு நிலை. தாயிடம் தலைவி காதல் பற்றி வெளியிடுதல். புரைதீர் – குற்றமற்ற. கடாவல் – வரைவு வேண்டுதல். பெற்றோர் உடம்பட்டதால் தலைவனைப் பெண் கேட்கப் போகுமாறு தூண்டுதல். வன்புறை – திருமணம் நிகழ இருப்பதால், தலைவியை ஆற்றியிருக்க வற்புறுத்தல்.

**செவிலிக்கு நிகழும் கூற்று**

**களவு அலராயினும், காமம் மெய்ப் படுப்பினும்,**
**அளவு மிகத் தோன்றினும், தலைப் பெய்து காணினும்,**
**கட்டினும் கழங்கினும் வெறிஎன இருவரும்**
**ஒட்டிய திறத்தாற் செய்திக் கண்ணும்,**
**ஆடிய சென்றுழி அழிவு தலைவரினும்**
**காதல் கைம்மிகக் கனவின் அரற்றலும்,**
**தோழியை வினாவலும், தெய்வம் வாழ்த்தலும்**
**போக்குடன் அறிந்த பின் தோழியொடு கெழீஇக்**
**கற்பின் ஆக்கத்து நிற்றற் கண்ணும்,**
**பிரிவின் எச்சத்தும், மகள் நெஞ்சு வலிப்பினும்,**
**இருபால் குடிப்பொருள் இயல்பின் கண்ணும்**
**இன்ன வகையிற் பதின்மூன்று கிளவியொடு**
**அன்னவை பிறவும் செவிலி மேன. (1061)**

***செவிலி கூற்று***

1. காதலர் களவொழுக்கம் அலராகிவிடவே செவிலி கூற்று நிகழும். 2.தலைவி உடலில் காமஉணர்வு வெளிப்படும்போது, 3. தலைவி உடற்கூறு முன்னிலும் அளவு மிகும்போது; 4. எதிர்பாராது தலைவன் தலைவியரை ஓரிடத்துக் காணினும்; 5. கட்டுப் பார்த்தல் – கட்டுவிச்சி குறி கூறல். கழங்கு – கோடாங்கி அருள்வந்து ஆடிக் கழற்சிக்காயை உருட்டிக் குறிகூறல். அவர்கள் இருவரும் ஒரே மாதிரி 'வெறியாட்டு' எடுக்க வேண்டுமிடத்தும்; 6. வெறியாடிய இடத்து, மனம் வருந்த நேரினும் 7. காதல் கரை கடக்கவே தலைவி கனவில் அரற்றுவதைத் தாயர் கேட்க நேரினும் 8. தோழியை இதன் காரணம் வினவும்போதும் 9. தெய்வத்தைத் தீங்கு நேராதவாறு வாழ்த்தும் போதும் 10.உடன் போக்கை அறிந்த பிறகு தோழியுடன் கலந்து, தலைவனுக்கே மணமுடிக்க இசைந்து கற்புக்கு ஆதரவாக நிற்கும் நிலையிலும் 11. பிரிவின் பின் வருந்துமிடத்தும் 12. மகளுக்காக மனம் நோகுமிடத்தும் 13. இரண்டு குடிப் பக்கத்துப் பெருமையை எண்ணுமிடத்தும் என இவ்வாறான பதின்மூன்று கூற்றுக்களுடன் அன்னவை பிறவும் செவிலிபால் நிகழ்வனவாகும்.

அலர் – ஊர் அறிந்து பேசுதல். மெய்ப்படுப்பினும் – தலைவி உடலில் காம உணர்வு பற்றிய அறிகுறி தோன்றினும். அளவு மிகத் தோன்றினும் – தலைவியது முலையும் கவினும் பொலிவுற்று அளவு மிகுந்து தோன்றினும். தலைப்பெய்து காணினும் – இருவரையும் ஓரிடத்துக் காண நேரினும். கட்டினும் – கட்டுப் பார்ப்பினும் (கட்டுவிச்சி குறி கூறல்). கழங்கினும் – கோடாங்கி கழற்சிக் காயை உருட்டிக் குறி கூறினும், 'வெறி' என்று அவ்விருவரும் கூறியதால் அவை நிகழுமிடத்திலும், வெறியாடியவிடத்து மனம் வருந்தும் நிலை ஏற்படினும். தலைவி காதல் அளபு கடக்கவே கனவில் அரற்றுதலைக் கேட்டும் – இவை ஏன் எனத் தோழியைச் செவிலி வினவுவாள்.

உடன்போக்கை அறிந்த செவிலி தெய்வத்தை வாழ்த்துவாள். தோழி கருத்தொடு பொருந்தி திருமணம் செய்விக்கும் எண்ணத்தில் நிற்றலும் உண்டு. பிரிவினால் வருந்துமிடத்தும், மகளுக்காக மனம் நோகுமிடத்தும், இருகுடிச் சிறப்புக் குறையுறலாகாது என எண்ணும் போதும் இத்தகைய பதின்மூன்று வகையிலும் பிறவாறும் செவிலிக்குக் கூற்று நிகழும். கெழீஇ – பொருந்தி.

### நற்றாய்க்கும் இக்கூற்று நிகழும்

**தாய்க்கும் வரையார் உணர்வு உடம்படினே. (1062)**

*நற்றாய் கூற்று*

செவிலியுடன் உணர்வு ஒன்றுபடுமிடங்களில் பெற்ற தாய்க்கும், மேலே செவிலிக்குக் கூறியன நிகழும்.

செவிலியுடன் உணர்வுஉடம்படும்போது நற்றாய்க்கும் இக் கூற்றுக்கள் நிகழும். வரையார் – நீக்கமாட்டார்கள்.

### நற்றாயும் செவிலியும் தலைவனைப் பற்றிப் பெரியவர்களிடம் கேட்டு ஐயம் தெளிதல்

**கிழவோன் அறியா அறிவினள் இவள் என**
**மையறு சிறப்பின் உயர்ந்தோர் பாங்கின்**
**ஐயக்கிளவி அறிதலும் உரித்தே. (1063)**

தலைவி, தலைவனை நன்கு அறிந்து நட்புக் கொள்ளக் கூடிய அறிவு வளர்ச்சியில்லாதவளென எண்ணி, தாயர் குற்றமற்ற சிறப்பினையுடைய பெரியவர்களிடம் தங்கள் ஐயங்களை வினவி அறிதற்கும் உரியர்.

தலைவி தலைவன் இத்தகையன் என அறிய வல்ல அறிவினள் அல்லள். அதனால் குற்றமற்ற சிறப்பினையுடைய உயர்ந்தோர்களிடம் வினவி ஐயத்தைத் தீர்த்து உண்மையை அறிதலும் உண்டு.

**தலைவி தன் வேட்கையை வாய்விட்டுச் சொல்லமாட்டாள்; மெய்ப்பாட்டால் மட்டுமே உணர்த்துவாள்**

**தன்னுறு வேட்கை கிழவன் முன் கிளத்தல்**
**எண்ணுங் காலைக் கிழத்திக்கு இல்லை,**
**பிறநீர் மாக்களின் இன்றிய ஆயிடைப்**
**பெய்ந்நீர் போலும் உணர்விற்று என்ப. (1064)**

தன் உள்ளத்துள் தோன்றும் காம வேட்கையை, தலைவன் முன் கூறுவது தலைவிக்கு இயல்பில்லை. பிற நீர்மையுள்ள மக்களைப் போன்றவள் அல்லள் அவள். அதனால் அவளது உணர்வு புதுமண் பானையுள் பெய்துவைத்த நீர், புறம் பொசிந்து காட்டுவதுபோல வெளிப்படும்.

வேட்கை - காம உணர்வு, கிளத்தல் - வாய்விட்டுச் சொல்லுதல். பிற நீர் மாக்களின் இன்றிய ஆயிடை - பிற நீர்மை (தன்மை) யுடைய மக்களைப் போல அல்லாததால். பெய்ந்நீர் போலும் உணர்விற்று - புதிய மண்பானையில் பெய்து வைத்த நீர் புறம் பொசிந்து காட்டுவது போலும் உணர்வினையுடையது அவள் இயல்பு.

**யாருடைய உதவியுமின்றிக் காதலர்கள் தாமே தமக்குத் தூதுவர்களாய்ச் சந்தித்துக் கொள்வதுண்டு**

**காமக் கூட்டம் தனிமையிற் பொலிதலின்**
**தாமே தூதுவர் ஆதலும் உரித்தே. (1065)**

இக் களவிற் புணரும் காமக் கூட்டம் தனிமையிலேயே மிகுந்து பொலிவு பெறும். எனவே தோழி, பாங்கன் யார் துணையும் இன்றி, காதலர்கள் தாமே தமக்குத் தூதுவர்களாய்ச் சென்று கண்டு கூடுதலுமுண்டு.

தனிமையில் பொலிதல் - யார் துணையுமின்றித் தனியே கூடும்போதுதான், களவின்பம் சிறக்கும். இருவரும் வேட்கை மிகுதியால் யாரையும் நாடாமல் தாமே தமக்குத் தூதுவராதலும் உண்டு.

**இயற்கைப் புணர்ச்சிக்குப் பிறகு, மீண்டும் சந்திப்பதற்குத் தலைவியே குறியிடம் கூறுதல்**

**அவன் வரம்பு இறத்தல் அறம் தனக்கு இன்மையின்**
**களம் சுட்டுக் கிளவி கிழவியது ஆகும்**
**தான் செலற்கு உரிய வழி ஆகலான. (1066)**

தலைவி தலைவனின் சொல்லைக் கடந்து நடப்பது தனக்கு அறமாகாது என நினைப்பாள். எனவே சந்திப்பதற்கான குறியிடம் கூறும் உரிமை அவளதேயாகும். ஏனெனில் தான் செல்லுதற்கு ஏற்ற வழியை அவளே அறிவாள்.

அவன் வரம்பு இறத்தல் - அவன் கட்டுப்பாட்டை மீறுதல். களம் - மீண்டும் சந்தித்துக் கூடுமிடம். தான் செல்வதற்கு ஏற்ற வழியை அவளே அறிவாளாதலின், அவள் இவ்வாறு குறியிடம் கூறுவதால் குற்றமில்லை.

**இன்ன இடத்தில் சந்திக்கலாமென்று**
**தோழியும் களஞ்சுட்டலாம்**

**தோழியின் முடியும் இடனுமா ருண்டே. (1067)**

இவ்வாறு களம் சுட்டுதல் தோழியின் உதவியுடன் நடப்பதுமுண்டு.

தோழியின் முடிதல் - தலைவி பழகுமிடங்களை நன்கறிந்த தோழியும் குறியிடம் கூறலாம்.

**துணையின்றித் தாமே சந்திப்பது மூன்று நாளேயாம்**

**முந்நாள் அல்லது துணையின்று கழியாது**
**அந்நா ளகத்தும் அதுவரை வின்றே. (1068)**

காதலர் யார் துணையுமின்றித் தாமே சந்திப்பது, மூன்று நாட்கள் மட்டுமேயாகும். அம்மூன்று நாளிலும் கூடத் தோழி துணையாவதுமுண்டு.

காதலர் யார் துணையுமின்றித் தாமே சந்தித்துக் கூடுவது மூன்று நாள்கள் மட்டுமே. அப்போதும் துணையமையுமேல் நீக்கப்படுதல் இல்லை.

**தனக்கு வரும் நன்மைகளை அறிய வேண்டுதலின், தோழியையே தலைவன் துணையாகக் கொள்ள வேண்டும் என்பது தலைவி கருத்து**

**பன்னூறு வகையினும் தன்வயின் வரூஉம்**
**நன்னய மருங்கின் நாட்டம் வேண்டலின்**
**துணைச் சுட்டுக் கிளவி கிழவிய தாகும்**
**துணையோர் கருமம் ஆக லான. (1069)**

தனக்கு உயிர்த்துணையாம் தோழி யாரென உணர்த்தும் உரிமை தலைவிக்கு உண்டு. பல நூறு வகையாலும் தனக்கு வேண்டிய நன்மைகளை ஆராய்ந்து உதவுதல், அத் துணையாவார் கடமையாதலால், அத்தகையாரைத் தலைவி சொல்வதே முறையாகும்.

பன்னூறு வகையினும் - பல வகையாலும். நல் நயம் - நல்லனவற்றை. நாட்டம் - ஆராய்தல். துணையோர் கருமம் - துணையாய் விளங்குபவர் செயற்பாடு. துணைச் சுட்டுக் கிளவி - தன் துணை யாரெனச் சுட்டும் சொல்; உயிர்த் தோழி யாரென உணர்த்துதல்.

### தலைவி தன் மறைவான ஒழுக்கத்தைக் கூறக்கூடியவள் செவிலித் தாயே, நற்றாயிடம் இரகசியத்தைக் கூறுவது நாகரிகமாகாது

**ஆய்பெருஞ் சிறப்பின் அருமறை கிளத்தலின்**
**தாயெனப் படுவோள் செவிலியாகும். (1070)**

மிக்க சிறப்பினையுடைய களவொழுக்கத்தைத் தலைவி சொல்வதற்கு உரியவர் செவிலித்தாயே. நற்றாயிடம் தலைவி தன் காதலை நேரே கூறுதல் நாகரிகமாகாது. அதனால் செவிலி வழியாகவே கூறுவாளாதலால் இப்பாடல்களில் 'தாய்' என வருவது, செவிலியையே குறிக்கும்.

அருமறை - களவொழுக்கம். செவிலியிடமே நல்ல பெரிய சிறந்த உண்மையான களவை வெளிப்படுத்துதல் உண்டு. செவிலிதான் பிறகு நற்றாய்க்குக் கூறுவாள்.

### உயிர்த்தோழி, செவிலி மகளாய் உடன் வளர்ந்தவள்

**தோழி தானே செவிலியது மகளே. (1071)**

தோழி செவிலித்தாயின் மகள், தலைவியுடன் வளர்பவள். (இதன்படி நோக்கினால், காதற்பாடல்கள் பல மிகவுயர் குடியினர் மாட்டு நிகழ்வனவாகவே படைக்கப் பெற்றன என உணர வேண்டியுளது.)

செவிலி தன் மகளைப் பாலூட்டி வளர்த்த காலந் தொட்டே, தலைவியையும், அவ்வாறு வளர்த்தவள்.

### நன்மை தீமை ஆராயவும் கலந்தாலோசிக்கவும் தோழி சிறந்த துணையாவாள்

**சூழ்தலும் உசாத்துணை நிலைமையிற் பொலிமே. (1072)**

தலைவிக்குத் தோழி நன்மை தீமை ஆராயத் துணையாவாள். அதுவும் இன்ப துன்பத்தில் உசாவி அறியும்போது பொலிவுள்ள நற்றுணையாகும்.

தோழி தலைவிக்குத் தக்க துணையாவாள். சூழ்தல் - ஆராய்தல். உசாத்துணை - இன்ப துன்பத்தில் உசாவியறியும் துணை.

## தலைவியின் களவொழுக்கத்தைத் தோழி கண்டறியும் திறன்

**குறையுற உணர்தல், முன்னுற உணர்தல்**
**இருவரும் உள்வழி அவன் வரவுணர்தல் என**
**மதியுடம்படுதல் ஒரு மூவகைத்தே. (1073)**

களவொழுக்கம் தோழிக்கும் தெரியாமல்தான் தொடங்கும். ஆனால் துணை தேவைப்படும் நிலைமை வரும். தலைவன் தோழியின் துணைதேடி, உதவி வேண்டி வருதல்; தலைவியது குறிப்புக்கண்டுணர்தல்; இருவரும் உடனிருக்கும் போது தலைவன் வர உணர்தல் என மூன்று நிலைகளிலும் தலைவியின் காதலைத் தோழி அறிந்து கொள்வாள். அறிந்து, அக் களவிற்குத் தோழி துணையாக இசைவது 'மதியுடம்படுதல்' எனப்படும்.

குறையுற - தலைவன் தன்னிடம் உதவி வேண்டி வரும்போது. முன்னுற - முன்னம் உற - தலைவியது குறிப்புக்கண்டு. முன்னம் - குறிப்பு. மதியுடம்படுதல் - தலைவன் தலைவி களவொழுக்கத்தைத் தோழி அறிந்து உடம்படுதல்.

## மதியுடம்பட்ட பிறகே தோழி தலைவனின் உதவி கேட்கும் முயற்சிக்குத் துணை செய்வாள்

**அன்ன வகையான் உணர்ந்த பின் அல்லது**
**பின்னிலை முயற்சி பெறாள் என மொழிப. (1074)**

அவ்வகையால் தோழி மதியுடம்பட்டதை அறிந்த பிறகல்லது, தலைவன் தோழியிடம் குறையிரந்து நிற்கும் - இரந்து பின்னிற்றலாகிய முயற்சியை அவள் பெறுதல் நிகழாது.

அவ்வாறு மதியுடம்பட்ட பிறகல்லது, தலைவனின் பின்னிலை முயற்சியை (இரந்து உதவி கேட்பதைப்) பெறமாட்டாள் (இசைய மாட்டாள்.)

**தலைவன் முயலுங் காலத்து, நல்வழிப்படுமாறு வழிகாட்டி, தலைமக்களைக் கூட்டுவிக்கும் ஆற்றல் தோழிகண்ணதே**

**முயற்சிக் காலத்து அதர்ப்பட நாடிப்**
**புணர்த்தல் ஆற்றலும் அவள்வயி னான. (1075)**

அவன் அவ்வாறு முயலும்போது, பொருத்தமான நல்வழியை ஆராய்ந்து, இருவரையும் கூட்டுவிக்கும் ஆற்றலும் தோழியின் கண்ணதேயாகும்.

தலைவன் தலைவியைக் கூட முயலும் காலத்தில். அதர்ப்பட நாடி - பொருத்தமான நல்வழியை ஆராய்ந்து. புணர்த்தல் ஆற்றல் - கூட்டுவிக்கும் திறன். அவள் - தோழி.

**தலைமக்கள் இருவரும் நன்கு அறியுமாறு அமையும் இடங்களே பகற் குறியும் இரவுக் குறியும்**

**குறியெனப் படுவது இரவினும் பகலினும்**
**அறியத் தோன்றும் ஆற்றது என்ப. (1076)**

குறியிடம் எனப்படுவது இரவிலும் பகலிலும் நிகழக் கூடியதாகும்.

குறி - குறியிடம் - தலைமக்கள் சந்தித்துக் கூடுமிடம். இரவுக்குறி, பகற்குறி என இருவகைப்படும். அறியத் தோன்றும் - அவர்கள் அறியுமிடமாக அமையும்.

**இரவுக் குறிக்கு ஏற்ற இடம்**

**இரவுக் குறியே இல்லகத் துள்ளும்**
**மனையோர் கிளவி கேட்கும் வழி அதுவே;**
**மனையகம் புகாஅக் காலை யான. (1077)**

இரவுக்குறி வீட்டினுள் ஒரு புறத்தே, யாரும் அங்குவராத சமயத்தில், மனையிலுள்ளார் பேச்சுக்குரல் கேட்கக் கூடிய தூரத்தில் நிகழும்.

இல்லகத்துள்ளும் - மிகப் பெரிய வளமனையின் ஒரு புறத்தே நிகழும். கிளவி கேட்கும் வழி - இன்று கூப்பிடு தூரம் என்பர். மனை அகம் புகாக் காலை - அவ்விடத்தே யாரும் புகாத நேரத்தில்.

**பகற்குறிக்கு ஏற்ற இடம் தலைவிக்குப் பழக்கமான இடம்**

**பகற்புணர் களனே புறன் என மொழிப**
**அவள் அறிவுணர வருவழி யான. (1078)**

பகலில் கூடுமிடம் வீட்டின்புறத்தே, அவள் வழியறிந்து வரக்கூடிய தூரத்தில் நிகழும்.

பகற் புணர் களன் - பகற் குறி. புறன் - வீட்டுக்குப் புறத்தே. அவள் அறிவுணர வருவழி - அவளுக்குப் பழக்கமான போய் வரக் கூடிய வழி.

**தலைவன் குறி செய்வது போலவே, பிறிதொன்று நிகழ்ந்தால் அது, தலைவிக்கு அல்ல குறிப்படுதல் ஆகும்**

**அல்ல குறிப்படுதலும் அவள்வயின் உரித்தே**
**அவன் குறி மயங்கிய அமைவொடு வரினே. (1079)**

அவன் அடையாளக்குறி செய்வான். மரத்தை அசைப்பதும் பறவையை எழுப்புவதும் உண்டு. அவன் செய்யாத குறியை ஏனைய காற்றசைவால் நிகழ, அவன் செய்ததாக எண்ணி வந்து தலைவி ஏமாறுவாள். அவன் பிறகு தன் குறி கேட்டு வராது வெறுமனே திரும்புவான். அதனால் அவ்வாறு 'அல்ல குறிப்பட்டு' வருந்துவதும் தலைவிபால் உண்டு.

அவன் குறி மயங்குதல் - அவன் மரத்தை அசைத்து ஓசையிடுவதாகச் சொன்ன குறி, இயற்கைக் காற்று மிகுதியால் நிகழ்ந்தால், அது ஏமாற்றமாகும். அவள்தான் இதனால் அல்ல குறிப்பிட்டு ஏமாறித் திரும்பிச் சென்று வருந்துவாள்.

**குறியிடம் சுட்டாது, எதிர்பாராதும் தக்க நல்ல மறைவான இடத்தில் கூட நேரலாம்**

**ஆங்காங்கு ஒழுகும் ஒழுக்கமும் உண்டே**
**ஓங்கிய சிறப்பின் ஒரு சிறை யான. (1080)**

குறியிடம் குறியாது, ஆங்காங்கு எதிர்பாராது சந்தித்துக் கூடுதலுமுண்டு. மிக்க சிறப்பினையுடைய தக்கதொரு மறைவான இடம் கிடைத்தால் இது நிகழும்.

மிக்க சிறப்புடையதும் களவுக்கு ஏற்றதுமான ஒருசிறை - ஒரு மறைவான இடம். முன்திட்டமிட்டுக் குறியிடம் சுட்டாது அவ்வப்போது எதிர்பாராது கூடும் ஒழுக்கமும் உண்டு.

**தலைவன் விளையாட்டு, திருவிழா நாட்களில் தலைவியைச் சந்திக்காது தவிர்க்க மாட்டான்**

**மறைந்த ஒழுக்கத்து ஓரையும் நாளும்**
**துறந்த ஒழுக்கம் கிழவோற்கு இல்லை. (1081)**

களவொழுக்கத்தில், ஓரை என்னும் மகளிரது வண்டல் விளையாட்டையும் விழா நாட்களில் கலந்து கொள்ளுதலையும் துறந்து கைவிடுதலென்பது தலைவனுக்கு இல்லை. அக்காலங்களில் தலைவன் தலைவியை எளிதிற் சந்திக்கப்பெறுவான்.

ஓரை - விளையாட்டு. நாள் - திருநாள், விழா. களவொழுக்கமேயாயினும் அறியாதாரிடையே வந்து கலந்து கொள்வான். துறத்தல் - அவற்றைக் கைவிடுதல்.

**தலைவன் வழியருமை, அழிவு, அச்சம், இடையூறு எதற்கும் அஞ்ச மாட்டான்**

**ஆற்றினது அருமையும், அழிவும், அச்சமும்,**
**ஊறும் உளப்பட அதனோ ரன்ன. (1082)**

குறியிடம் வரும் தலைவன் தவறாது வருவான். வழியருமை கருதியோ, அழிவு நேருமெனவோ, அச்சப்பட்டோ, இடையூறுகளை எண்ணியோ தலைவன் அஞ்சி வாராதிருக்க மாட்டான்.

வழியது அருமை, அழிவு நேருமெனல், அச்சவுணர்வு, இடையூறுகள் - இவை உளப்பட எதற்கும் தலைவன் அஞ்சிக் களவொழுக்கத்தைத் துறக்க மாட்டான்.

**தந்தை தமையன்மார் முதலியோர் குறிப்பால் மட்டுமே களவை அறிவர்**

**தந்தையும் தன்னையும் முன்னத்தின் உணர்ப. (1083)**

*பெற்றோர் களவை அறியும் நெறி*

தந்தையும் தமையனும் குறிப்பால் மட்டுமே, தலைவியின் களவொழுக்கத்தை அறிவர்.

தந்தையும் தமையன்மாரும் தலைவியின் களவொழுக்கத்தைக் குறிப்பாலறிவர். வாய்விட்டு வினவி அறிவதில்லை. தன் + ஐ= தனக்கு மூத்தவன், தமையன்.

**நற்றாய் செவிலி அறிவதையே தானும் அறிவாள்**

**தாய் அறிவுறுதல் செவிலியோடு ஒக்கும். (1084)**

நற்றாய், செவிலித்தாய் எவ்வாறு அறிவாளோ, அவ்வாறே தானும் அறிவாள். (பெரிதும் இவ்விரு தாயரிடையே பாடலில் வேறுபாடு காணப்பெறாது.)

செவிலி தோழியையும் குறிபார்ப்பவரையும் கொண்டு உசாவி அறிவாள். நற்றாயும் அவ்வாறே அறிவாள்.

### தலைவனால் ஊரார்க்குக் களவு வெளிப்படும்

**அம்பலும் அலரும் களவு வெளிப்படுத்தலின்**
**அங்கு அதன் முதல்வன் கிழவனாகும். (1085)**

*அம்பலும் அலரும்*

அம்பல் - ஊரார் முகக் குறிப்பால், காதலர் களவுறவு பற்றித் தம்முள் மறைமுகமாகப் பேசிக் கொள்ளுதல், அலர் - வாய்விட்டு, வெளிப்படையாகப் பலரும் பேசிக் கொள்ளுதல். இவை இரண்டுமே களவை, ஊரார் அறிய வெளிப்படுத்துவன. இவற்றிற்குக் காரணமாவான் தலைவனே. அவன் தலைவியைத் தேடி அடிக்கடி வருதல் முதலியவற்றால் அம்பல் தோன்றி, அலராக மலரும்.

அம்பல் - காதலர் களவை முதன்முதல் அறிந்த ஊரார் முகக் குறிப்பால் அதை வெளிப்படுத்துவர். அலர் - வாய்விட்டு காதலிருவரையும் தொடர்புபடுத்திப் பலவாறு பேசுவர். அம்பல் - மொட்டு நிலை, அலர் - மலர்ந்த நிலை. அங்குஅதன் முதல்வன் - அவ்வாறு களவு ஊரார்க்கு வெளிப்படக் காரணமானவன்.

### இருவகையாகத் திருமணம் நிகழ்தல்

**வெளிப்பட வரைதல், படாமை வரைதல் என்று**
**ஆயிரண் டென்ப வரைதல் ஆறே. (1086)**

*திருமணம்*

களவு வெளிப்பட்டபின், பெற்றோர் இசைந்து மணம் செய்து வைப்பதுண்டு. களவு வெளிப்படுமுன்பே திருமணம் நடந்துவிடுவதுமுண்டு. இவை இரண்டும் திருமணம் நிகழும் முறைகளாகும்.

களவு வெளிப்படுமுன்பே திருமணம் நிகழ்தல் 'படாமை வரைதல்'. அது வெளிப்பட்ட பின் நடப்பது 'பட்டபின் வரைதல்' வெளிப்பட - களவு வெளிப்பட்டபின்.

## பொருள் வயிற் பிரிவு தவிரப் பிற பிரிவனைத்தும் திருமணத்திற்குப் பின்பே நிகழும்

**வெளிப்படை தானே கற்பினோடு ஒப்பினும்**
**ஞாங்கர்க் கிளந்த மூன்று பொருளாக**
**வரையாது பிரிதல் கிழவோற்கு இல்லை. (1087)**

களவு வெளிப்படுதலே கற்பின்பாற்படுமாயினும், திருமணம் செய்து கொள்ளுமுன் முன்பு கூறப்பட்ட ஓதல், பகை, தூது மூன்றும் காரணமாகத் தலைவியைத் தலைவன் பிரிதல் இல்லை. 'வரைவிடை வைத்துப் பொருள் வயிற்பிரிதல்' எனும் சிறு பிரிவு மட்டுமே திருமணத்திற்கு முன் உண்டு என்பது இதனால் பெறப்படும்.

களவு வெளிப்பட்டாலே அது கற்பின்பாற்படும். ஆயினும் திருமணமாகாத அந்நிலையில் 'வரைவிடை வைத்துப் பொருள் வயிற் பிரிதல்' எனப் பரிசம் போடுவதற்குப் பொருள் தேடத் தலைவன் பிரிதலுண்டு. மற்றபடி முன்பு சுட்டிய பகை தூது பற்றிய மூன்றுக்காக, திருமணம் செய்து கொள்ளுமுன் பிரிதல் தலைவனுக்கு இல்லை. ஞாங்கர்க் கிளந்த – முன்னே கூறிய.

# உ. கற்பியல்

கற்பு :- கற்பிக்கப்படுவது, மனத் திண்மை, சொன்ன சொல் திறம்பாமை, மனம் ஒரே நிலையில் நிற்றல்.

காதலர் வாழ்வில் 'ஒருவனுக்கு ஒருத்தி; ஒருத்திக்கு ஒருவன்' என்பதில் உள்ள ஒருமைக் கேண்மை கற்பு எனப் பரவலாக வழங்கப்பெற்றது.

இங்கு அகத்திணையுள் களவுக் காதல் ஒழுக்கில் ஈடுபட நேர்ந்தவர்கள், நாடறிய மணம் செய்துகொண்டு வாழ்வது 'கற்பு' எனும் சடங்காகி, உலகறியும் ஒன்றாயிற்று.

திருமணச் சடங்கு மணமான பிறகு தலைவன், தலைவி,தோழி, காமக் கிழத்தியர், வாயில்கள் (தூதுவர்கள்), செவிலி, அறிவர் கூற்றுக்கள் நிரலே இடம்பெறுகின்றன.

ஊடல்கள், ஊடலில் தோன்றும் அலரும் கூற்றுக்களும், பரத்தமைத் தொடர்புடையன, பிற பிரிவுகள், பிரிவில் இடையிலுள்ளோர் கூற்றுக்கள், பிரிவின் கால எல்லைகள், வாழ்வின் பயன் முதலியவை கற்பியலில் இடம்பெறும் செய்திகளாகும்.

## இயல் கருத்து நிரல்

கற்பு என்று திருமணம் குறிக்கப்படுகிறது. அது கரணமொடு - சடங்குகளுடன் நடத்தப்படும். தலைவியைக் கொள்ளுதற்குரிய தன்மையுடைய த்லைவன், கொடுத்தற்குரிய உரிமையுடைய தன்மையினர் கொடுப்ப, மணம் செய்து கொள்வதாகும்.

தலைவியை மணம் செய்து கொடுத்தற்குரியவர்கள் இல்லாமலும், காதலர் உடன்போகிய காலத்தில், மணச்சடங்குகள் உண்டு. திருமணம் நடத்தப்பெறும்.

நிலமக்கள் தலைமக்கள் வினைவலர் அடியோர் நால்வரில் மேலோராம் முன்னைய மூவர்க்கும் பொருந்திய கரணம் பின்னர் ஏவலர் – அடியோர் எனப்பட்டவர்க்கும் ஒரு காலத்தில் உரியதானது.

களவுக் காலத்தில் 'இவளை அறியேன்' எனப் பொய் கூறலும் வேற்று வரைவு, இடையில் கைவிடல் முதலான வழுவும் ஏற்பட்ட பிறகு, தந்தை தமையன்மார் அகவை முதிர்ந்த சான்றோர் 'கரணம்' என நாடு அறியும்படியான மணச் சடங்குகளை வகுத்தனர்.

**கற்பில் தலைமகன் கூற்று (33) நிகழும் இடங்கள்**

திருமணம் முடிந்தபின், களவுக் காலத்திற்கு மன இறுக்கம் நீங்கிக் கூடுதல், தலைவிக்குத் தான் செய்த பிழையைக் கருதுதல், உடன்போக்கு வரை (23) இவை யாவும் தலைவன் தோழியிடம் பேசுவன.

வேற்றுநாட்டிற்குப் பிரியும் பெருந் துன்பம் தொடங்கி இறுதிப் பத்துக் கூற்றுக்களும் தலைவன்பால் நிகழும்.

**கற்பில் தலைவி கூற்று (24)**

தலைவனை நன்கு அறிவாளாதலின் தலைவி அவனைப் புகழ்தல் தொடங்கி வாயில்களின் மாட்டுப் பல்வேறு சூழல்களில் பேசுதல் வரை யாவும் தலைவி கூறுவன.

**இறைச்சிப் பொருள்**
**தலைவி கூற்றில் அமைதல்**

முன்பு உடன் போக்கில் தலைவனுடன் சுரவழியில் சென்ற தலைவிக்கு, அவ் வழி பற்றித் தெரியும். அவள் இப்போது வீட்டிலிருக்க, தலைவன் பொருள் தேடப் போயுள்ளான். அப்போது அவள், சுர இடைவழிகளில் பாலை நிலப் பறவை விலங்கு முதலிய கருப் பொருள்களையும் அவற்றின் காதற் செயல்களையும் சுட்டி, தலைவன் அவற்றைக் கண்டு, தன்மேல் அன்பு கொள்ளுதற்குத் தக்கவற்றைச் சொல்வாள். அதனால் தலைவன் தன் வினைமேற் செல்லாது, இடைவழியில் தன்னை நினைத்துத் திரும்பிவிடுவானோ என்ற அவளது அச்சத்தை அக் கூற்று விளக்கும்.

தோழி உள்ளிட்ட வாயில்களைத் தலைவி தலைவனிடம் அனுப்பினாலும் அவ்வகையான அச்சம் நிகழும். இடைச்சுரத்து 'இறைச்சி கண்டு, தலைவன் திரும்புவனோ' எனும் அச்சம் ஏற்படும்.

**கற்பில் தோழி கூற்று**

பெறுதற்கரிய பொருள் தேடி வந்த தலைவனுடைய அழிவற்ற சிறப்புடைய நிலைமையில் பாராட்டுதல் தொடங்கி தலைவன் எதிரே நின்று, பணிவாக

மறுத்துக் கூறுதல் வரை இவை போல் பல வகைப்பட வந்த கூற்றுக்கள் அனைத்தும் தோழிக்குரியன.

### காமக் கிழத்தியர் கூற்று

தலைவன் தழுவுதலைத் தடுக்கும் புலவிக்கண் பேசுதல் முதலாக ஆறும் குளமும் காவும் சென்று விளையாடுதல் ஈறாகப் பேச்சு நிகழும். இவை காமக் கிழத்தியர் கூற்று.

### வாயில்கள் கூற்று

வீட்டினுள் புகுந்து பழகுமளவு தொடர்புரிமையுடைய வாயில்கள், முகத்திற்கு நேரே நின்று சொல்லக் கூடிய அளவிற்கு, தலைவனிடம் தலைவியின் மாண்பமைந்த குணங்களை விவரிப்பர். தலைவியின் கற்புடைமை, நல்வழி ஒழுகுதல், மென்மைச் சாயலுள்ள பொறுமை, மனத்தைக் கட்டுப்படுத்தும் நிறை, முடியாத போதும் வருந்தி விருந்து புறந்தருதல், சுற்றத்தாரைக் காத்தல் - இன்னன பிறவுமான தலைவியின் நற்குணங்களை விளக்கிக் கூறுவர்.

### செவிலியின் அறிவுரை

செவிலித்தாய் காதலர்களுக்கு அறிவுரை பகரும் கூற்றுக்களை நிகழ்த்துவாள். கடந்த காலம், எதிர் காலம், நிகழ்காலம் என மூன்று காலமும் பற்றி மரபுக்கு ஏற்ப, நல்லவற்றைக் கடைப் பிடிக்குமாறு உரைப்பாள்; அல்லாத தீயவற்றைக் கடிந்து நீக்குமாறு அறிவுரைப்பாள்.

### அறிவர்

மேற் சொல்லிய கூற்றுக்கள், முக்காலமும் உணர்ந்தவர் எனப்படும் அறிவர்களுக்கும் உரியன.

தலைமக்களை இடித்துக் கூறி, எல்லை கடவாது தடுத்து நன்னெறியில் நிறுத்துதற்கும் அறிவர்க்கு உரிமையுண்டு. தலைவனும் தலைவியும் அவர்களது அறிவுரைக்குக் கட்டுப்பட்டு நிற்பது தமிழர் பண்பாடு. ஆதலினால் அறிவர் கடிந்து கூறியும் திருத்துவர்.

### ஊடல்

தலைவிதான் ஊடுவாள் என்பது அவளது இயல்பைப் பொறுத்தது. தலைவனும் ஊடும் இடங்கள் உண்டு. தலைவி ஊடல் தவிர்க்காது நீட்டித்தால் தலைவன் வருந்தி ஊட நேரும்.

தலைவன் புலந்தும் ஊடியும் சிறு மனவேறுபாடுகளைக் காட்டுமிடத்துத் தோழி சொல்லத் தக்கவற்றை மட்டுமே சொல்லுதற்கு உரியள்.

பரத்தமையைக் கண்டிப்பதற்காக, தலைவனை 'அன்பிலை', 'கொடியை' எனவும் தோழி கடிந்து பேசுவாள்.

தலைவி ஊடும்போதும் அதைத் தவிர்க்கும் போதும் தன்னை ஒரு மூன்றாம் பேர்வழி போல வைத்துப் பேசுவாள். தலைவனின் உள்ளக் குறிப்பை அறிய வேண்டிய இடத்தும் தன் உள்ளத்தில் நிறைந்திருந்த ஊடல் நீங்கும் போதும் தான் வேறு ஒருத்தி போல வைத்துப் பேசும்முறை அவளிடம் உளதாகும்.

தலைவிதான் பணிவுடன் தலைவன் சொல்கிற வழியில் நிற்பாள். தலைவன் பணிவாக, வழிபடுவான் போலப் பேசுவது தலைமைக்கு இயல்பில்லை. ஆனால் தலைமகளின் ஊடலால், காம உணர்வு எல்லை கடந்தவிடத்து, அவள் ஊடலை நீக்கத் தலைவன் பணிவுடன் கூடிய சொற்களை அவளிடம் பேசுவான். தலைவியின் தலைமையும் தலைதூக்குமிடங்கள் உண்டு என அறிகிறோம்.

அருளைத் தோற்றுவிக்கும் அன்பு நிறைந்த சொற்களை, உண்மையாகச் (தலைவன் போல் அந்நேரத்திற்கு ஏற்ப அல்லாமல்) சொல்லுதல் தலைவிக்கும் உரியதாகும்.

அலர் என்பது ஊரார் பேசும் பழிச்சொல். வதந்திப் பேச்சு, களவிற்போலக் கற்பிலும் அலர் உண்டு.

அலர் பழி ஆகாது. அது காமத்தின் சிறப்பை வெளிப்படுத்தும்.

தலைவன் மேற்கொள்ளும் காம விளையாட்டுக்களும் அலரை விளைவிக்கும்.

மனைவியிடத்துத் தலைவன் தனது பரத்தைமை ஒழுக்கத்தால் செய்யும் கொடுமைகளை, தமக்கு நேர்ந்தனபோல் வருந்தித் தலைவனிடம் வாயில்கள் கூறுவதில்லை.

ஆனால், அக் கொடுமைகளுக்கு ஆளான மனைவி முன்பாக, கையற்று வருந்திச் சொல்வர். அதுவும் மனைவிக்கு நல்வாழ்வு அமையுமாறு செய்யும் வழியிலேயே பேசப்படும்.

தலைவன் தலைவி ஆகிய இருவரும் தங்கள் ஊடலைத் தவிர்க்க உதவுமாறு, தங்களிடம் வேண்டி நிற்கும் பொழுது, நேரே கூறாது, முன்னிலைப் புற மொழியாகப் (பிறரைக் கூறுவது போல) பேசுதல் வாயில்கள் அனைவருக்கும் உரியதாகும்.

**கூத்தர்கள் நிகழ்த்தும் கூற்றுக்கள்**

முன்பு நிகழ்ந்தவற்றை எடுத்துரைத்தல் (களவுக் கால நிகழ்வுகள்) தலைவியின் அழகையும் அது கெடுமாறு வருந்துதல் கூடாதெனவும் கூறுதல் வரை நிகழ்த்துவன கூத்தர்கள் கூற்றுக்களாகும்.

கூத்தரும் பாணரும் தலைவனிருக்கும் நாட்டுக்கு நிலம் பெயர்ந்து சென்று தலைவி நிலையை உரைப்பதுண்டு. தலைவன் வருவதாகச் சொன்ன பருவ எல்லையைத் தலைவியிடம் வந்து கூறலும் உண்டு. இவற்றுள் அவரவர்க்குப் பொருந்தியவை, பொருந்திய காலங்களில் நிகழும்.

**ஏவல் செய்யும் இளையோர் கூற்று**

ஏவியதைச் செய்பவர் 'இளையோர்' என்பது பண்டைய வழக்கு. அவர்களும் கூற்று நிகழ்த்துதற்கு உரியர். அவர்கள் வழியது அருமை கூறுதல், வழியிடையே காணப்படும் நிமித்தமானவை கூறுதல் 'இறைச்சி' எனும் கருப்பொருளாம் உயிரினங்களின் காமவுணர்வுத் தொடர்பான நிகழ்வுகளைப் பேசுதல் என இவ்வாறு விளக்கமமைந்த பிறவற்றையும் கூறுவர்.

உடலுழைப்பாலாம் தொழில்களைச் செய்தலும் தலைமக்களுக்கு மெய்க்காப்பாளராய்க் காத்தலும் அவற்றுடன் உயர்குடி மக்களுக்குச் செய்யத்தக்க நடவடிக்கை அனைத்தும் இவ் இளையோர்க்கு உரியனவாகும்.

பின்பு நடத்திய பெருஞ்சிறப்புடன் கூடிய இரண்டாம் திருமணத்தில் முன்னைய, முறைப்படி மணந்த முதல் மனைவி எதிர்ப்பட்டவிடத்தும் விளங்கும் அணிகலன் பூண்ட புதல்வனை வாயிலாகக் கொண்டு மனைவி எதிர்வரினும், கடந்த காலத்தை நினைத்துத் தலைவன் அவ்விடத்தே, அந்நேரத்தில் மனங்கலங்குவதற்கும் உரியவனாவான்.

தலைவன் முன்பு சுட்டியபடி மனங்கலங்கி நிற்பான்; மனைவி தழுவுதலின்மையால் மயங்குவான். அப்போது, மென்மைப் பண்புடைய தலைவி, தலைவனைத் தாய்போல் இடித்துரைத்துத் தழுவிக் கொள்ளுதற்கும் உரியவள் ஆவாள்.

அவன் குறையை வெளிப்படாமல் காப்பது இல்லற மகளிர்க்குக் கடமை எனப்படும். அதனால் கணவனது பணிவான சொற்கள் ஊடற்காலத்தே இயல்பாகும். இந்நிலையில் மகனைப் பெற்ற, உரிமையுள்ள தாயாகிய மனைவி, கணவனைவிட உயர்வாக, மதிப்பாக, கவுரவமாகப் பேசுவாள். அவ்வாறு நிகழும் மனைவியது உயர்வும் தலைவனால் தனது உயர்வாகவே கருதப்படும்.

### பிரிவில் சில நிகழ்வுகள்

நினைத்தற்கரிய அச்சமுடைய பாசறையில், பெண்களை அழைத்துச் செல்வதில்லை.

புறத்தொழிலாம் போர்ப் பயிற்சியுடைய பெண்கள் அப்பாசறையில் வந்து தங்குதற்குரியர்.

### பிரிவில் பார்ப்பார் கூற்று

பார்ப்பார் பாங்கனாக, தூதுவனாகப் பயன்பட்டனர். பிரிவின்போது தலைவியின் காமநிலையைத் தலைவனுக்கு உரைப்பர். தலைவன் நெடுந்தூரம் பிரிந்து போவது பற்றிய கூற்றுக்களும் அங்ஙனம் செல்லாமல் தடுப்பதற்கான கூற்றுக்களும் அன்னவை பிறவும் அவர்பால் தோன்றும்.

### வாயிலோர்க்குச் சில கூற்றுமுறைகள்

வாயில்கள் எல்லோரிடத்தும் தலைமக்கள் இருவரிடத்தும் மகிழ்ச்சி பொருந்திய பொருள்கள் பற்றியே பேசுவர்.

அன்பு இல்லாத கடுஞ்சொற்களைப் பேச நேர்ந்தால், நேரே பேசாமல், சிறைப்புறமாக – முன்னிலைப் புறமொழியாகப் பேசுவர்.

### தற்புகழ் கிளவிகள்

முன்பு தலைவன் பரத்தையிடமிருந்து வந்து, தலைவி ஊடலைத் தீர்க்க, அவளிடம் குறை இரத்து நிற்பான்; இனி இத் தவறு செய்யேன் என உறுதி கூறுவான் என்று கூறப்பட்டது. (இரத்தலும் தெளித்தலும் கிழவோன் மேன. 987) அவ்விரு நிலையிலும் தலைவி தன் உயர்வு தோன்றத் தன்னைப் புகழ்ந்து கூறுவாளாம். மற்றபடி தலைவன் எதிரே, தன்னைத் தானே புகழ்வதென்பது, தலைவிக்கு எவ்வகையிலும் இல்லை.

தலைவனும் தலைவி முன்னர் தன்னைத்தானே புகழ்ந்து பேசுவதுண்டு. அது தலைவன் அரசன் பொருட்டு வினைவயிற் பிரியும் போதும் பொருள்தேடப் பிரியும் போதும் உளதாகும்.

தலைவனை எதிர்த்துப் பேசுதல் (கழறுதல்) பாங்கனுக்கு உண்டு.

தலைவன் குற்றத்தை நேரே சுட்டிக்காட்டி எதிர்மொழி பேசுதல் மிகவும் அருகியே காணப்படும்.

பிரிவுக் காலச் சூழல்கள்

தலைவி தலைவன் பிரிவுக்கு வருந்துவாள். அவ்வாறு வருந்தும் பொழுதிலும் பிற நேரங்களிலும் தலைவன் தலைவியை வற்புறுத்தி, ஆற்றுவித்தல்லது பிரிந்துபோக மாட்டான். இதற்காகவே அவன் சிலநாள் செலவழுங்குவான்.

அங்ஙனம் பிரிந்து செல்லுதற்கிடையே சிலநாள் அதைத் தவிர்த்து இருத்தல், செல்லாமல் இல்லிலேயே இருப்பதற்கன்று. வற்புறுத்திப் பிரிதல் என்ற 'வன்புறை' குறித்த, தவிர்ச்சி ஆகும் அது.

தலைவியின் நிலையை அவன் போர்க்களப் பாசறையில் இருக்கும்போது யாரும் நினைவூட்ட மாட்டார்கள்; அவனும் நினைக்கமாட்டான். வெற்றி பெற்ற காலத்திலேதான், அந் நினைவு உடனே விளக்கமுறத் தோன்றும்.

தலைவி மாதப் பூப்படைந்த காலத்திற்குப் பின்வரும் பன்னிரண்டு நாளும், தலைவன் அவளைப் பிரிந்து செல்லமாட்டான். ஏனெனில் அது கருவுருவாகும் காலம் என்பர் உரையாசிரியர். பரத்தையிற் பிரிந்த காலத்தில் தலைவன் இவ்வாறு நடந்து கொள்ளுதல் மரபு. இது சிறு பிரிவுகள் பற்றியது.

விரும்பிப் பயில வேண்டிய கல்வி மூன்றாண்டுகளுக்கு மேல் பிரிந்து நிகழாது.

வேந்தனுக்கு உற்றுழி – போர், தூது, நாடுகாவல் – பிரிவுகள் ஓர் ஆண்டுக்குட்பட்டனவாகவே அமையும்.

ஏனைய பொருள்வயிற் பிரிவும் முன்னே சுட்டிய மூன்றாண்டு அல்லது ஓராண்டிற்குள் அமையும். அவ்வயின் எனப் பொதுப் படச் சொன்னதால் முன்னே சொன்ன இரண்டும் பொருந்தும். கடல் வழிப் பிரிவும் தரைவழிப்பிரிவும் உள்ளனவாதலால் இவை இரண்டையும் கொள்ளலே பொருந்தும்.

தலைவன் தலைவியர் ஊரைவிட்டுப் பிரிந்து போய் ஆறுகளிலும் குளங்களிலும் (அருவிகளிலும்) நீராடியும் பூங்காக்களில் விளையாடியும் இன்பம் நுகர்தற்கும் உரியவர்கள் ஆவர்.

### அறநெறித்தவம்

காம உணர்வு, விருப்பங்கள், ஆசைகளை எல்லாம் நன்கு அனுபவித்து நிறைவெய்திய, இவை முடிவுற்றன என உண்மையிலேயே மனம் நிறைவடைந்த கடைசிக் காலத்தில், தங்கட்குப் பாதுகாவலாய் அமைந்த மக்கள் மற்றும் அவர்களின் மக்களொடு நெருங்கிச் சூழ்ந்திருந்து, நாளும் அறச் செயல்களையே செய்யும் நண்பர்கள், அறிஞர்கள், சான்றோர்களாகிய சுற்றத்துடன் தலைவனும் தலைவியும் உலகிற் சிறந்தது எனப்படும் மக்கட்பணி, கல்விப்பணி அறப்பணி முதலான அனைத்தையும் செய்து அதுவே பொது வாழ்வாய் வாழ்தல், இவ்வளவு காலமாக நடந்து கடந்து போன இல்லற வாழ்வின் பயனாகும்.

### புறனடை நூற்பாக்கள்

தலைவன் தலைவியருடன் இணைபிரியாது பிணைக்கப்பட்ட வாயில்களாவார் பன்னிருவர்; தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையர் (ஏவலர்), விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர்.

### வினை முடித்த தலைவன் விரைந்து திரும்பி வருதல்

போர் முதலிய அரச காரியங்களுக்காகத் தேரில் பிரிந்து போனவன் வினை முடித்துத் திரும்பி வரும்பொழுது, சுரவழியிடையே தங்குதல் என்பது இல்லை. அவனுக்கு உள்ளமெல்லாம் அப்போது தலைவியிடம் சென்றிருக்கும். அவனது உள்ளம் போலவே, உற்றுழி உதவக் கூடியதும் புள் (பறவை) போலப் பறக்கக் கூடிய இயல்புடையதுமான ஒலிக்கும் எழுச்சிமிக்க குதிரைகளை உடையவனாதலால், அவன் விரைந்து மீள்வான்.

# கற்பியல்

## கற்பு என்பது திருமணச்சடங்கு உலகறிய நடத்தி வைக்கப்படுவது

கற்பு எனப்படுவது கரணமொடு புணரக்
கொளற்குரி மரபின் கிழவன் கிழத்தியைக்
கொடைக்குரி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே. (1088)

கற்பு என்று திருமணம் குறிக்கப்படுகிறது. அது கரணமொடு சடங்குகளுடன் நடத்தப்படும். தலைவியைக் கொள்ளுதற்குரிய தன்மையுடைய தலைவன், கொடுத்தற்குரிய உரிமையுடைய தன்மையினர் கொடுப்ப, மணம் செய்து கொள்வதாகும்.

கரணம் - திருமணச் சடங்கு. கொடைக்குரியோர் - கொடுத்தற்குரிய தலைவியின் பெற்றோர். கொளற் குரி மரபு - தலைவன் பரிசம் தந்து, மங்கலநாண் பூட்டி மணத்தல் (அகநானூறு 66, 86).

## உடன் போக்கிலும் மணம் செய்தல் உண்டு தலைவன் மூலம் மணந்துகொள்ளும் சடங்கு நிகழும்

கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே
புணர்ந்து உடன்போகிய காலை யான. (1089)

தலைவியை மணம் செய்து கொடுத்தற்குரியவர்கள் இல்லாமலும், காதலர் உடன்போகிய காலத்தில், மணச்சடங்குகள் உண்டு. திருமணம் நடத்தப்பெறும்.

## நான்கு நிலத்திலும் தலைமக்கள், நிலமக்கள், வினைவலராகிய மூவர்க்கேயல்லாமல் அடியோர்க்கும் இது நிகழலானது

மேலோர் மூவர்க்கும் புணர்த்த கரணம்
கீழோர்க்காகிய காலமும் உண்டே. (1090)

நிலமக்கள் தலைமக்கள் வினைவலர் அடியோர் நால்வரில் மேலோராம் முன்னைய மூவர்க்கும் பொருந்திய கரணம் பின்னர் கீழோர் - ஏவலர் - அடியோர் எனப்பட்டவர்க்கும் ஒரு காலத்தில் உரியதானது.

'மேலோர் முறைமை நால்வர்க்கும் உரித்தே' (975) என முன்னர் வருவதுடன் ஒப்பிடுக. அங்கு வரும் நால்வரில் மூவர். கீழோர் - அடியோர், ஏவல் செய்து வாழ்வோர். காலமும் உண்டு - முன்பு கரணமே இல்லாத காலமுண்டு என்றும் பின்பு மேலோர் இதைக் கைக் கொண்டனரென்றும் சமுதாய நிலையில் கீழிருந்தோருக்கும் பின்பு இக் கரணம் உரித்தானது என்றும் உய்த்துணரலாம்.

**மக்களிடையே பொய்யும் ஏமாற்றும் புகுந்தபின் உலகறியும் சடங்கு தோன்றியது**

**பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர்**
**ஐயர் யாத்தனர் கரணம் என்ப.** (1091)

களவுக் காதலில் 'இவளை அறியேன்' எனப் பொய் கூறலும் வேற்றுவரைவு, இடையில் கைவிடல் முதலான வழுவும் ஏற்பட்ட பிறகு, தந்தை தமையன்மார் அகவை முதிர்ந்த சான்றோர் 'கரணம்' என நாடு அறியும்படியான மணச்சடங்குகளை வகுத்தனர். மணமானவளை மணம் ஆகாதவளோ என எண்ணி, ஓர் ஆடவன் காமத்துடன் பார்ப்பதை, தாலி முதலான அடையாளம் தடுக்கும். இன்றேல் மணமானவளைக் காதலிக்கவும் மணம் பேசவுமான பொய்யும் வழுவும் தோன்றும். கரணமும் அதன்வழி மணமானவரை ஆகாதவரினின்றும் வேறு படுத்தும் அடையாளங்களும் சமுதாயப் பெரியோர்களால் வகுக்கப்பட்டன என்பார் வ.சுப. மாணிக்கம். (தமிழ்க் காதல்.153)

பொய் - இவளை அறியேன் எனப் பொய் கூறல். வழு - வேற்று மணம் முடித்தல், இடையில் கைவிடல், துன்புறுத்தல் இன்னபிற. ஐயர் - தந்தை, தமையன்மார். பெரியோர்.

**கற்பில் தலைமகன் கூற்று நிகழுமிடங்கள்**

**கரணத்தின் அமைந்து முடிந்தகாலை**
**நெஞ்சுதளை அவிழ்ந்த புணர்ச்சிக்கண்ணும்**
**எஞ்சா மகிழ்ச்சி இறந்துவரு பருவத்தும்**
**அஞ்சவந்த உரிமைக் கண்ணும்**
**நன்னெறிப்படரும் தொன்னலப் பொருளினும்**
**பெற்ற தேஎத்துப் பெருமையின் நிலைஇக்**
**குற்றஞ் சான்ற பொருளெடுத் துரைப்பினும்**
**நாமக் காலத்து உண்டு எனத் தோழி**
**ஏமுறு கடவுள் ஏத்திய மருங்கினும்**

அல்லல் தீர ஆர்வமொடு அளைஇச்
சொல்லுறு பொருளின் கண்ணும், சொல்லென
ஏனது சுவைப்பினும் நீ கை தொட்டது
வானோர் அமுதம் புரையுமால் எமக்கு என
அடிசிலும் பூவும் தொடுதற் கண்ணும்,
அந்தணர் திறத்தும் சான்றோர் தேஎத்தும்
அந்தமில் சிறப்பின் பிறர் பிறர் திறத்தினும்
ஒழுக்கம் காட்டிய குறிப்பினும், ஒழுக்கத்துக்
களவினுள் நிகழ்ந்த அருமையைப் புலம்பி
அலமரல் உள்ளமொடு அளவிய இடத்தும்
அந்தரத்து எழுதிய எழுத்தின் மான
வந்த குற்றம் வழிகெட ஒழுகலும்,
அழியல் அஞ்சல் என்று ஆயிரு பொருளினும்
தான் அவள் பிழைத்த பருவத்தானும்,
நோன்மையும் பெருமையும் மெய் கொள அருளிப்
பன்னல் சான்ற வாயிலொடு பொருந்தித்
தன்னின் ஆகிய தகுதிக் கண்ணும்,
புதல்வன் பயந்த புனிறுதீர் பொழுதின்
நெய்யணி மயக்கம் புரிந்தோள் நோக்கி
ஐயர் பாங்கினும் அமரர்ச் சுட்டியும்
செய்பெருஞ் சிறப்பொடு சேர்தற் கண்ணும்
பயங்கெழு துணையணை புல்லிய புல்லாது
உயங்குவள் கிடந்த கிழத்தியைக் குறுகிப்
புல்கென முன்னிய நிறையழி பொழுதின்
மெல்லென் சீறடி புல்லிய இரவினும்
உறலருங் குரைமையின் ஊடல் மிகுத்தோளைப்
பிற பிற பெண்டிரின் பெயர்த்தற் கண்ணும்
பிரிவின் எச்சத்துப் புலம்பிய இருவரைப்
பிரிவின் நீக்கிய பகுதிக் கண்ணும்
நின்றுநனி பிரிவின் அஞ்சிய பையுளும்,
சென்று கையிகந்து பெயர்த்து உள்ளிய வழியும்
காமத்தின் வலியும், கைவிடின் அச்சமும்,
தான் அவள் பிழைத்த நிலையின் கண்ணும்
உடன்சேறல் செய்கையொடு அன்னவை பிறவும்

மடம்படவந்த தோழிக் கண்ணும்
வேற்று நாட்டு அகல்வயின் விழுமத்தானும்
மீட்டுவர வாய்ந்த வகையின் கண்ணும்,
அவ்வழிப் பெருகிய சிறப்பின் கண்ணும்,
பேர் இசை ஊர்திப் பாகர் பாங்கினும்
காமக் கிழத்தி மனையோள் என்றிவர்
ஏமுறு கிளவி சொல்லிய எதிரும்
சென்ற தேஎத்து உழப்புநனி விளக்கி
இன்றிச்சென்ற தன்னிலை கிளப்பினும்,
அருந்தொழில் முடித்த செம்மல் காலை
விருந்தொடு நல்லவை வேண்டற் கண்ணும்
மாலை ஏந்திய பெண்டிரும் மக்களும்
கேளிர் ஒழுக்கத்துப் புகற்சிக் கண்ணும்
ஏனை வாயில் எதிரொடு தொகைஇப்
பண்ணமை பகுதி முப்பதினொரு மூன்றும்
எண்ணருஞ் சிறப்பிற் கிழவோன் மேன.

*கற்பில் தலைமகன்கூற்று (33) நிகழும் இடங்கள்*

1.திருமணம் முடிந்தபின், களவுக் காலத்திலிருந்த மன இறுக்கம் நீங்கிக்கூடுதல் 2.குறையாத மகிழ்ச்சி மேன்மேலும் கூடிவரும் சமயம் 3. தலைவி மனைவியானதும் அவளுக்கு இல்லத்து உரிமை கூடுதலால், தலைவன் அஞ்சி நடத்தல் – உரிமை கொடுத்துத்தவறு நேராது நடத்தல் பண்பாடு. 4. நல்ல இல்லற நெறியில் நடக்கும் தொன்மையான அறவழி 5. மணம் பெற்ற பெருமையில் நிலைத்து, முன்பு களவில் குற்றம்பட நடந்தவற்றை எடுத்துரைத்தல் 6.அச்சந்தரும் களவுக் காலத்து காவலாக இருந்து காத்த, கடவுளைத் தோழி வழுத்திய பொழுது. 7.களவுக் காலத்துத் துன்பமெல்லாம் தீர ஆர்வம் மிகுந்த மனத்துடன் பொருந்தித் தலைவி பேசும் நிலையில் 8. தலைவன் நற்சொல்லாகப் பேசி மனைவியை மகிழ்விப்பான். “நீ எதைத் தொட்டாலும் வானோர் அமுதம் போலுளது எனக்கு” என்று அவள் சமைத்த உணவையும் பூவையும் தொடும் நிலையில். 9.அந்தணரையும் சான்றோரையும் சிறப்புடைய பிறரையும் காட்டி ஒழுக்கத்தைக் கற்பிக்கும் போது 10. களவினுள் ஒழுக்கத்தைக் காக்கப் பட்ட அரிய துயரைக்கூறி, மனம் சுழன்று புலம்பி அளவளாவுதல் 11. அந்தரத்தில் எழுதிய எழுத்துப் போலக் களவுக் காலத்துக் குற்றம் எல்லாம் நீங்கும்படி ஒழுகுதல் 12. அவளிடம் வருந்தாதே, அஞ்சாதே என்று இரண்டு உறுதி மொழிகள் கூறிப் பின்பு அவற்றை மறந்து

அவளிடம் நடந்ததை நினைத்தல். 13. பொறுமையும் பெருமையும் உறுதிப்பட அருளி, திரும்பத் திரும்ப வற்புறுத்திய தோழியுடன் பொருந்தித் தன்னைத்தான் காத்த தகுதியைக் கூறுங்காலத்தில் 14. மகன் பெற்ற, ஈன்றணிமை நீங்கியபோது, நெய்பூசித் தலைமுழுகிக் கிடந்த தலைவியை நோக்கி, ஐயர் (பெரியோர்) அமரர்களின் அறிவுரைகளைச் சுட்டிக் காட்டி பெருஞ்சிறப்புடன் அவளைச் சேரும்பொழுதில் 15. பயன்மிக்க இருவர் படுக்கையில் பக்கத்தில் படுத்தும் தலைவனைத் தழுவாது, வருத்தத்தோடு கிடந்த தலைவியை அணுகி தழுவிக்கொள் எனச் சுட்டிய, நிறையழிந்த நேரத்தில், அவளது மெல்லிய சீறடியைத் தொட்டு வணங்கிய போது, 16. நெருங்கவிடாத தலைவியிடம் பிறபிற பெண்டிரின் அன்பைக் கூறி விலக்குதற்கண் 17. பிரிவதாகச் சொன்னதின் முடிவில், புலம்பிய தலைவி, தோழி இருவரையும், பிரியேன் எனக் கூறி அப்பிரிவை நீக்கியபோது 18. நீண்ட பிரிவில் அஞ்சிய துன்பத்தில் 19. முன்பு சென்று வழியிடையே வருந்தியவன், மீண்டும் பிரியக் கருதியபோது 20. காம உணர்வின் வலிமை கூறல் 21. தலைவன் கை விடுவானோ எனும் தலைவியின் அச்சத்தில் 22. தலைவிக்குத் தான் செய்த பிழையைக் கருதுதல் 23. உடன்போக்கு. இவை யாவும் தோழியிடம் பேசுவன.

1. வேற்று நாட்டிற்குப் பிரியும் பெருந்துன்பம். 2. திரும்பிவர வாய்த்த நிலைமைகள் 3. அப்பிரிவில் கிடைத்த வெற்றிச் சிறப்பு 4. மிக்க சிறப்புடைய ஊர்திகளை ஓட்டும் பாகர்களிடம் பேசுதல் 5. காமக் கிழத்தி, 6. மனைவி தமக்குப் பாதுகாவலாகச் சொன்னவற்றுக்கு மறு மொழிதல் 7. பிரிந்து சென்ற தேயத்தில் பட்ட துன்பத்தை விளக்கி, மனைவியை விட்டுச் சென்ற தனது நிலையைக் கூறுதல் 8. அரிய காரியத்தை முடித்த மனஎழுச்சிமிக்க பொழுதில் விருந்துடன் நல்லவற்றை வேண்டிப் பேசுதல் 9. வரவேற்க மாலை ஏந்தி நிற்கும் பெண்டிரும் மக்களும் உறவு முறை காட்டி மகிழ்ச்சியடையும்போது 10. பிற வாயில்கள் எதிர்கொள்ளுதல்.

**தளை அவிழ்தல் - இதுவரை களவில் இருந்த இறுக்கம் தளர்ந்து, மனமகிழ்வுடன் கூடுதல். இறந்து - கூடுதலாதல். தலைவிக்கு உரிமை மிகுந்ததால் தலைவன் அவளுக்குத் தன் கடமை தவறாமைப் பொருட்டு அஞ்சுதல்.**

**நன்னெறி - இல்லற நெறி. தொல் நலப் பொருள் - தொன்று தொட்டு வரும் நல்வாழ்க்கை முறை. பெற்ற தேஎம் - தலைவியை உரித்தாகப் பெற்றவிடத்து. நிலைஇ - நிலைத்து. குற்றம் சான்ற பொருள் - முன்பு நடந்த களவு வாழ்வை நினைத்துப் பார்த்துச் சில கூறுதல். நாமக்**

காலம் – அச்சக்காலம். ஏம் உறு – காவலாயமைந்த. களவில் காத்த தெய்வத்தை. அல்லல் தீர் – களவுக் காலத்துப்பட்ட துன்பமெல்லாம் தீர. அளைஇ – கலந்து. தலைவி சொல்லும் போதும். ஏனது – எதையேனும், எதுவேயாயினும், வேப்பங்காயே ஆயினும். புரையும் – ஒக்கும். அடிசிலும் – தலைவி சமைத்த உணவு. பூ – சூடிய பூ. அந்தணர், சான்றோர், பிற பெரியோரைச் சுட்டிக் காட்டி ஒழுக்கம் பற்றிய அறிவுரை கூறுதல். களவொழுக்கத்தில் நிகழ்ந்த நினைத்தற்கரிய துன்பங்களைச் சொல்லிச் சொல்லிப் புலம்புதலும் அளவளாவிப் பேசுதலும். களவுக் காலக் குற்றங் குறைகளைக் களைந்து வாழ்தல். அந்தரத்து எழுதும் எழுத்துப் புலனாகாதே போவது போலச் செய்த குற்றங்கள் மறையும்படி. வருந்தாதே, அஞ்சாதே என்று இரண்டு உறுதிமொழிகள் கூறிப் பின்பு அதில் தவறிச் சிலபோது நடக்க நேர்ந்ததைக் கூறியும் வருந்துவான். நோன்மை – பொறுமை. மெய்கொள – உறுதிப்பட. பன்னல் சான்ற வாயில் – திரும்பத் திரும்ப வற்புறுத்தும் தோழி. தன்னின் ஆகிய தகுதி – தன்னைத்தான் காக்கும் தகுதியுடைமை. புனிறு – ஈன்று அணிமை. நெய்யணி மயக்கம் – மகப் பேறுற்ற பதினாறாம் நாளோ பிறவாறோ எண்ணெய் தேய்த்துக் குளித்து, வீட்டுக் கழைப்பது ஒரு சடங்காக நடந்துளது. ஐயர் – பெரியோர். அமரர் – தெய்வமானோர். சிறப்பொடு சேர்தல் – சிறப்புச் செய்து, வழிபாடுற்றுச் சேர்தல். துணை அணை – இரட்டைப்படுக்கை. புல்லிய புல்லாது – பக்கத்தே படுத்தும் தழுவாது.

உயங்குவள் – வருந்தியவளாய். புல்கு என – தழுவுக என. நிறை அழிபொழுது – காமம் எல்லைகடந்த நேரம். சீறடி புல்லுதல் – தலைவன் தலைவி காலைத் தொட்டு வணங்குதல் (ஊடல் தீர்க்க. மகப்பேற்றுக் காலத்தில் தலைவன் பரத்தை வீடு போய் விடுவது பழங்கால வழக்கம் போல் தெரிகிறது. உடற்கூறு காரணமாகலாம்.) பிற பெண்டிரெல்லாம் எவ்வளவு பொறுமையினராயுள்ளர் எனக் காட்டி ஊடல் தீர்க்க முயலுதல். எச்சம் – இறுதிநேரம். இருவர் – தலைவியும் தோழியும். நீக்கிய – அவ் வருத்தத்தை நீக்கிய. நனி பிரிவு – சேய்மைக்குப் பிரிதல். பையுள் – துன்பம். சென்று – முன்பு ஒரு முறை பிரிந்து. கையிகந்து – மிக்க துன்புற்றதை. பெயர்த்து – மீட்டும். உள்ளிய – நினைத்த. பொருளை விடக் காமத்தினது வலிமை. கைவிடின் – பிரிந்தால் தலைவி உயிர் விடுவள். அவள்பால் பிழைத்த நிலை – பிரியேன். பிரியின் உயிர் தரியேன் என்பதைப் பிழைத்தமை. உடன் போக வேண்டுமெனக் கூறல். மேற்

சொன்னவையும், அவற்றுடன் அவை தொடர்பாகத் தோழியிடம் பேசுதலும் தலைவன்பால் நிகழும். மடம்பட - இளமை பொருந்த.

வேற்று நாடு செல்லுதல். விழுமம் - துன்பம். மீட்டுவர - திரும்ப, வாய்ந்த - வாய்ப்பு ஏற்பட்ட. பெருகிய சிறப்பு - பிரிவில் வாய்த்த வெற்றி, பொருள் முதலானவை. பாகர் - தேர்ப் பாகனிடம். ஏமம் உறு கிளவி - பாதுகாவலாகச் சொல்லியதற்கு மறுமொழி. உழப்பு - போன இடத்தில் பட்ட துன்பம். தன்னிலை - தான் தனித்துச் சென்ற நிலை.

வினையை முடித்து வந்து விருந்தயர்தல். புகற்கு - விருப்பம். ஏனை வாயில் - பிற வாயில்கள்.

**கற்புக் காலத்தில் தலைவி கூற்று**

**அவன் அறிவாற்ற அறியு மாகலின்**
**ஏற்றற் கண்ணும், நிறுத்தற் கண்ணும்,**
**உரிமை கொடுத்த கிழவோன் பாங்கில்**
**பெருமையின் திரியா அன்பின் கண்ணும்,**
**கிழவனை மகடூஉப் புலம்பு பெரிதாகலின்**
**அலமரல் பெருகிய காமத்து மிகுதியும்,**
**இன்பமும் இடும்பையும் ஆகிய இடத்தும்,**
**கயந்தலை தோன்றிய காமர் நெய்யணி**
**நயந்த கிழவனை நெஞ்சு புண்ணுறீஇ**
**நளியின் நீக்கிய இளிவரு நிலையும்,**
**புகன்ற உள்ளமொடு புதுவோர் சாயற்கு**
**அகன்ற கிழவனைப் புலம்பு நனிகாட்டி**
**இயன்ற நெஞ்சம் தலைப்பெயர்த் தருக்கி**
**எதிர்பெய்து மறுத்த ஈரத்து மருங்கினும்,**
**தங்கிய ஒழுக்கத்துக் கிழவனை வணங்கி**
**எங்கையர்க்கு உரை என இரத்தற் கண்ணும்,**
**செல்லாக் காலைச் செல்கென விடுத்தலும்**
**காமக்கிழத்தி தன்மகத் தழீஇ**
**ஏமுறு விளையாட்டு இறுதிக் கண்ணும்,**
**சிறந்த செய்கை அவ்வழித் தோன்றி**
**அறம்புரி நெஞ்சமொடு தன்வரவு அறியாமைப்**
**புறம்செய்து பெயர்த்தல் வேண்டிடத் தானும்,**
**தந்தையர் ஒப்பர் மக்கள் என்பதனால்**

அந்தமில் சிறப்பின் மகப்பழித்து நெருங்கலும்,
கொடியோர் கொடுமை சுடுமென ஒடியாது
நல்லிசை நயந்தோர் சொல்லொடு தொகைஇப்
பகுதியின் நீங்கிய தகுதிக் கண்ணும்,
கொடுமை ஒழுக்கம் கோடல் வேண்டி
அடிமேல் வீழ்ந்த கிழவனை நெருங்கிக்
காதல் எங்கையர் காணின் நன்று என
மாதர் சான்ற வகையின் கண்ணும்,
தாயர் கண்ணிய நல்லணிப் புதல்வனை
மாயப் பரத்தை உள்ளிய வழியும்,
தன்வயின் சிறைப்பினும், அவன் வயின் பிரிப்பினும்
இன்னாத் தொல்சூள் எடுத்தற் கண்ணும்,
காமக் கிழத்தியர் நலம் பாராட்டிய
தீமையின் முடிக்கும் பொருளின் கண்ணும்,
கொடுமை ஒழுக்கத்துத் தோழிக்கு உரியவை
வடுவறு சிறப்பின் கற்பின் திரியாமைக்
காய்தலும் உவத்தலும் பிரித்தலும் பெட்டலும்
ஆவயின் வரூஉம் பல்வேறு நிலையினும்
வாயிலின் வரூஉம் வகையொடு தொகைஇக்
கிழவோள் செப்பல் கிழவதென்ப. (1093)

*கற்பில் தலைவி கூற்று*

1. தலைவனை நன்கு அறிவாளாதலின் தலைவி அவனைப் புகழ்தல் 2.தலைவனை அறநெறியில் நிறுத்துதல் 3. உரிமை கொடுத்த கணவனிடம் பெருமை தவறாது அன்பு செலுத்துதல் 4. தலைவனைப் பிரிந்த தலைவியின் புலம்பல் பெரிதாகலின், மனம் சுழலும் படியான காம மிகுதி 5. இன்பமுற்ற இடத்தும் துன்பமுற்ற இடத்தும் 6. புதல்வன் பிறந்தபின், நெய்யணி ஆடல் முடிந்து வீட்டுக்கு அழைக்கும் பொழுது (ஈன்றணிமை முடிந்ததும் எண்ணெய்க் குளியலிட்டு வீட்டுக்கு அழைத்தல்); அப்போது வந்து நயந்த கணவனை மனம் நோகும்படி செய்து, பக்கத்தில் வராமல் தடுத்த இளிவரல் நிலை, 7. புதிய பெண்களின் அழகை நாடிச் சென்று வந்தவனிடம், தன் துன்பத்தை வெளிக்காட்டி, அன்பால் அவனொடு போன நெஞ்சை அடக்கி, எதிரேற்றுப்பின், மறுத்தபோது 8. பரத்தையரிடம் தங்கிவந்த தலைவனை வணங்கி, எம் தங்கையர்க்கு (பரத்தையர்க்கு) நீ பணிந்து பேசும் இம் மொழிகளை உரைப்பாயாக என

நகையாடுதல் 9. பரத்தையர்பால் செல்லாத காலத்திலும் தலைவனை அங்கு போ என்று ஊடிச் சொல்லுதல் 10. காமக் கிழத்தி தனது மகனைத் தெருவிற்கண்டு தழுவி அவனுடன் மகிழ்ந்து விளையாடிய இறுதி நேரத்தில் 11. தன் மகனுடன் மனைவி அதுபோல் விளையாடிக் கொண்டிருக்கும் பொழுது,அறத்தை விரும்பும் மனத்துடன், தான் வருதலை மனைவி அறியா வகையில், அவள் பின்சென்று அவளை அழகுபடுத்துவான் போல ஊடலைத் தவிர்க்க முயலும் போது 12. மக்கள் தம் தந்தையரை ஒப்பர் என்று சொல்லித் தன் மகவைப் பழித்துப் பேசுதல் (உன் அப்பா போல்தானே நீயும் இருப்பாய் எனக் கடிந்து பேசுதல்) 13. கொடியவர் செய்யும் கொடுமைகள் தீங்கே செய்யுமென எண்ணி அதற்காக மறுக்காமல், நற்புகழை விரும்பின பெரியோர்தம் அறவுரைகளுடன் பொருந்தி, ஊடலால் வேறுபடாத தகுதியுடைமை 14.பரத்தையரை நாடும் கொடிய ஒழுக்கம் தவறே எனச் சொல்லி, அதனைப் பொறுத்துக் கொள்ளவேண்டி, தன் அடிமேல் விழுந்த, கணவனைக் கடிந்துரைத்து நின்னாற் காதலிக்கப்பட்ட என் தங்கையர் இதைக் காணின் சிரிப்புக்கிடமாகும் என, தலைவனிடம் காதலமையப் பேசும் பேச்சுக்கள் 15. தாயரால் விரும்பப்பட்ட நல்ல அணிகளை அணிந்த தன் புதல்வனை, பொய்ம்மை மிக்க பரத்தை விரும்பியதாகக் கேட்டுத் தலைவி வெகுளல். 16. தன்னிடமிருந்து பிரியாது தன் மகனைத் தன்னிடமே சிறைப்படுத்தி வைத்துக்கொள்ளுதல் 17.தலைவனிடமிருந்து தன் மகனைப் பிரித்தல் 18.முன்பு சொல்லி மறந்த, பழைய சூளுறவைத் தலைவனுக்கு மீட்டும் நினைவூட்டுதல் (பிரியேன் எனத் தலைவன் முதலிற் சொன்ற உறுதிமொழி) 19. தலைவன் காமக் கிழத்தியரின் அழகைப் பாராட்டிய தீய கருத்துடன் கூடிய செய்தியைக் கேட்ட போது 20. பரத்தைமை ஆகிய கொடிய ஒழுக்கத்தில் தலைமகள் தோழிக்குக் கூறுதற்கு உரியவையாய். குற்றமற்ற சிறப்பினையுடைய கற்பினின்றும் மாறுபடாமல் தலைவனைக் காய்தலும் (வெறுத்தலும்) 21. அவனை உவத்தலும் (மகிழ்தல்) 22.நீக்குதலும் 23. விரும்பி ஏற்றலும் என அவ்வாறு வரும் பல நிலைகளிலும் தோழியிடம் கூறுதல் 24. வாயில்களின்மாட்டுப் பலவேறு சூழல்களில் பேசுதல். இவை யாவும் தலைவி கூறுவன.

**அவன் - தலைவனை. ஏற்றல் - தலைவி புகழ்தல் (ஏத்தல்). நிறுத்தல் - தலைவனை அறநெறியில் நிறுத்தல். உரிமை கொடுத்த தலைவனிடம் அன்பு காட்டுதல். மகடூஉ - மனைவி. புலம்பு - பிரிவுத் துன்பம். கயந்தலை - குழந்தை. நெய்யணி - எண்ணெய் ஆட்டு. நெஞ்சு புண் உறீஇ - மனத்தை வருத்தி. நளி - நெருங்குதல் (பரத்தை வீடு போய் வந்ததால் நீக்குவாள்.) புகன்ற - விரும்பிய. புதுவோர் - இளைய**

பரத்தையர். இயன்ற நெஞ்சம் – அவன்பால் போன தன் மனத்தை மீட்டு. மறுமொழி பேசி மறுத்தல். மறுத்த ஈரம் – அன்பால் மறுத்தலே இது. தங்கிய – பரத்தையரிடம் தங்கிய. எங்கையர் – என் தங்கையர் என்றது அப்பரத்தையரை; நகையாடிக் கூறுவது. செல்லாக் காலை – பரத்தையரிடம் போகாத காலத்தும். தன்மகவைக் காமக் கிழத்தி தழுவி விளையாடிய போதும். அவ்வழி – அச்சமயத்தில். புறம்செய்து – தலைவியை அழகுபடுத்தி. பெயர்த்தல் – ஊடலை நீக்குதல். தலைவி அறியா வகையில் பின் சென்று ஊடலைத் தவிர்க்க முயலுதல். இது மகனை உன் தந்தை போல்வாய் எனப் பழித்தல்.

கொடியோர் போல் நடக்கும் கொடுமை. ஒடியாது – தலைவனுடன் மாறுபடாது.

நல்லிசை நயந்தவர் போல் நடப்பது. கொடுமை ஒழுக்கம் – பரத்தைமை தேடும் ஒழுக்கம். நெருங்கி – கடிந்து. எங்கையர் – எம் தங்கையராகிய பரத்தையர். மாதர் சான்ற – அன்பு நிறைந்த. தாயர் – பரத்தைத் தாயர். கண்ணிய நல்லணி – கருதிப் பூட்டிய அணிகளை. இது மாயப் பரத்தை செயலென நினைத்துத் தலைவி வருந்துமிடத்தும். சிறைப்பினும் – மகனைத் தன்னிடம் சிறைப்படுத்தல். மகனைத் தலைவனிடமிருந்து பிரித்தல். தொல்சூள் – தலைவன் முன்பு சொன்ன பிரியேன் என்ற உறுதிமொழி. காமக் கிழத்தியர் அழகைப் பாராட்டுமிடத்தும். கொடுமை ஒழுக்கத்து – பரத்தமை ஒழுக்கத்தால். தோழியிடம் கூறுதற்கு உரியவை : கற்புக்குப் பங்கமின்றித் தலைவனைச் சினத்தலும் மகிழ்ந்து கூறலும் பிரிதலும்; விரும்பலும் (பெட்டல்), அத்தகைய பல்வேறு கூற்றுக்களும் தலைவிக்கு உள. வாயிலின் (தூதுவர்பால்) வரும் கூற்றுக்களும் பலவுள.

### தலைவி இறைச்சிப் பொருள் வைத்துக் கூறுமிடங்கள்

**புணர்ந்துடன் போகிய கிழவோள் மனையிருந்து**
**இடைச் சுரத்து இறைச்சியும் வினையும் சுட்டி**
**அன்புறு தக்க கிளத்தல் தானே**
**கிழவோன் செய்வினைக்கு அச்சம் ஆகும். (1094)**

*இறைச்சிப்பொருள் தலைவி கூற்றில் அமைதல்*

முன் . உடன்போக்கில் தலைவனுடன் சுரவழியில் சென்ற தலைவிக்கு அவ்வழி பற்றித் தெரியும். அவள் இப்போது வீட்டிலிருக்க, தலைவன் பொருள்

தேடப் போயுள்ளான். அப்போது அவள், சுர இடை வழிகளில் - பாலைநில வழிகளில் பறவை விலங்கு முதலிய கருப்பொருள்களையும் அவற்றின் காதற் செயல்களையும் சுட்டி, தலைவன் அவற்றைக் கண்டு, தன்மேல் அன்பு கொள்ளுதற்குத் தக்கவற்றைச் சொல்வாள். அதனால் தலைவன் தன் வினைமேற்செல்லாது, இடைவழியில் தன்னை நினைத்துத் திரும்பிவிடுவானோ என்ற அவளது அச்சத்தை அக்கூற்று விளக்கும்.

இறைச்சிப் பொருள் என்பது உயிரினங்களின் காதல் உறவுகள் பற்றியது. இறைச்சி - கருப்பொருள். அதிலும் உயிருள்ளவை என்ற குறிப்புமுண்டு. இன்று ஆட்டு இறைச்சி, மாட்டு இறைச்சி எனப் பொருள் தாழ்ந்துவிட்டது. முன்னர் கணவனுடன் உடன் போய்ப் பழகிய தலைவி இப்போது தலைவன் பிரிய, தான் மட்டும் வீட்டிலிருக்கிறாள். அவள் இடைச்சுரம் - பாலைவழியில் - இறைச்சியும் - புறா, மான், யானை, குருவி முதலான கருப்பொருள்களையும்; வினையும் - அவற்றின் உறவுச் செயற்பாடுகளையும் பற்றிப் பேசுவாள். அவற்றின் அன்பு வாழ்வைச் சுட்டிப் பேசும் அவள், அவற்றைப் பார்க்கும் தலைவன் தன் முயற்சியை முற்றமுடிக்காது இடையிலேயே திரும்பி விடுவானோ என அஞ்சுவாள்.

### இதுவும் அது

**தோழி உள்ளுறுத்த வாயில் புகுப்பினும்**
**ஆவயின் நிகழும் என்மனார் புலவர். (1095)**

தோழி உள்ளிட்ட வாயில்களைத் தலைவி தலைவனிடம் செலவழுங்குவிக்க அனுப்பினாலும் அவ்வகையான இடைச் சுரத்து 'இறைச்சி' கண்டு, திரும்ப நேரும் என்ற கூற்று நிகழும்.

தோழி உள்ளிட்ட வாயில்கள். புகுப்பினும் - தலைவி தலைவனைச் செலவழுங்குமாறு கூற வேண்டித் தோழி முதலிய வாயில்களை அனுப்பும் போதும், இவ்வாறு இறைச்சி வைத்துப் பேசும் கூற்றுக்கள் நிகழும்.

### கற்புக்காலத்தில் தோழி கூற்று

**பெறற்கு அரும் பெரும் பொருள் முடிந்தபின் வந்த**
**தெறற்கரு மரபின் சிறப்பின் கண்ணும்,**
**அற்றம் அழிவு உரைப்பினும், அற்றம் இல்லாக்**
**கிழவோற் சுட்டிய தெய்வக் கடத்தினும்,**
**சீருடைப் பெரும்பொருள் வைத்தவழி மறப்பினும்,**
**அடங்கா ஒழுக்கத்து அவன்வயின் அழிந்தோளை**

அடங்கக் காட்டுதற் பொருளின் கண்ணும்,
பிழைத்து வந்திருந்த கிழவனை நெருங்கி
இழைத்தாங்கு ஆக்கிக் கொடுத்தற் கண்ணும்,
வணங்கியல் மொழியான் வணங்கற் கண்ணும்,
புறம்படு விளையாட்டுப் புல்லிய புகற்சியும்
சிறந்த புதல்வனை நேராது புலம்பினும்
மாண் நலம் தா என வகுத்தற் கண்ணும்
பேணா ஒழுக்கம் நாணிய பொருளினும்
சூள் நயந்திறத்தால் சோர்வு கண்டு அழியினும்
பெரியோர் ஒழுக்கம் பெரிதெனக் கிளந்து
பெரிநகை இல்லாப் பிழைப்பினும், அவ்வயின்
உறுதகை இல்லாப் புலவியுள் மூழ்கிய
கிழவோள்பால் நின்று கெடுத்தற் கண்ணும்,
உணர்ப்புவயின் வாரா ஊடல் உற்றோள் வயின்
உணர்த்தல் வேண்டிய கிழவோன்பால் நின்று
தான் வெகுண்டாக்கிய தகுதிக் கண்ணும்,
அருமைக் காலத்துப் பெருமை காட்டிய
எண்மைக் காலத்து இரக்கத் தானும்
பாணர் கூத்தர் விறலியர் என்றிவர்
பேணிச் சொல்லிய குறைவினை எதிரும்,
நீத்த கிழவனை நிகழுமாறு படீஇயர்
காத்த தன்மையின் கண் இன்று பெயர்ப்பினும்
பிரியுங்காலை எதிர் நின்று சாற்றிய
மரபுடை எதிரும் உளப்படப் பிறவும்
வகைபட வந்த கிளவி எல்லாம்
தோழிக்குரிய என்மனார் புலவர். (1096)

*கற்பில் தோழிகூற்று*

பெறுதற்கரிய பொருள் தேடி வந்த தலைவனுடைய அழிவற்ற சிறப்புடைய நிலைமையில் பாராட்டுதல். களவுக்காலத் துன்பம் நீங்கிய நிலைமை. ஏதும் குற்றம் வாராது தலைவனைக் காத்த தெய்வத்துக்கு நேர்த்திக்கடன் செலுத்துதல். சிறப்புடைய இல்லறமாகிய 'பொருளை'த் (வாழ்வை) திட்டமிட்டதைத் தலைவன் மறத்தல். அடக்கமின்றிப் பரத்தைமை ஒழுக்கம் பூண்டவனைப் பற்றி மனம் வருந்திய தலைவியைப் பொறுமை காக்க வேண்டுதல். பரத்தைமையால் பிழை

செய்து வந்திருந்த கணவனைக் கடிந்துகூறி, தலைமகளை இசைய வைத்து ஒற்றுமைப்படுத்துதல். பணிவுள்ள சொற்களால் வணங்குதல், பரத்தையருடன் புறத்தே போய் ஆறும் குளமும் காவும் சுற்றி, ஆடிய புன்மைமிக்க குற்றத்தின் போது, சிறந்த புதல்வனால் ஊடல் தீர்க்க முயன்றும் அதற்கு அவள் உடம்படாததால் தலைவன் புலம்புதல். தோழி சீற்றத்தில் 'நீ நுகர்ந்த எங்கள் மாட்சிமைப்பட்ட நலத்தை (அழகை) தா' என வேறுபடும் நிலைமை. தலைவனது பேணாத ஒழுக்கத்திற்கு நாணுதல். முன்பு சூள் (உறுதிமொழி) கூறியவன், அதை மறந்தது கண்டு வருந்துதல். பெரியோர் ஒழுக்கம் சிறந்ததெனச் சொல்லி, தலைவியைப் பெறக்கூடிய தகைமை இல்லாத தலைவனது பிழையைச் சுட்டிக் காட்டுதல். அவ்விடத்தில் பொருந்துதற்கரிய ஊடலில் மூழ்கிய தலைவி பக்கம் நின்று அவள் சார்பாகப் பேசுவதுபோல் பேசி, ஊடலை நீக்கச்செய்தல். தலைவன் உணர்த்தவும் உணராத பெரிய ஊடலில் இருந்தவளை, ஊடலைத் தீர்க்குமாறு வேண்டிய தலைவன் பக்கம் நின்று, அவனையும் வெகுண்டு பேசி ஒற்றுமைப் படுத்திய தகுதியுடைமை. களவு அரிய காலமாதலால் அப்போது பெருமை பேசியவள், கற்புக் காலமாம் இந்த எளிய காலத்து தலைவனிடம் இரக்கத்துடன் பேசுதல். பாணரும் கூத்தரும் விறலியரும் என இவர்கள் மிகவும் போற்றிக் கூறிய குற்றங்குறைகளுக்கு மறுமொழி கூறுதல். பிரிந்த தலைவனை, மீண்டும் இல்லற நெறியில் பொருந்துமாறு காக்கும் தன்மையினால் கண்ணோட்டமின்றிக் கடிந்து நீக்குதல், நெடுஞ் சேய்மைக்குப் பிரியும்போது, தலைவன் எதிரே நின்று, பணிவாக மறுத்துக் கூறுதல் - இவை போல் பல வகைபட வந்த கூற்றுக்கள் அனைத்தும் தோழிக்குரியன.

**பொருள் - வரைவுக்கு வேண்டிய பொருள். வந்த - வந்த தலைவன். தலைவன் சிறப்பைத் தோழி கூறுதல். அற்றம் - களவுக் காலத்தில் பட்ட துன்பம். அழிவு - நீங்கியமை. திருமணமானதால் அக்கவலை நீங்கியது. அற்றம் இல்லா - ஏதும் குற்றம் நிகழாதவாறு (காத்த தெய்வத்துக்கு). தலைவனுக்காக நேர்த்திக் கடன் செய்யச் சொல்வது. சீருடைப் பெரும் பொருள் - இல்லற வாழ்வு. தலைவன் அதை மறந்து ஒழுகுதல். அடங்கா ஒழுக்கம் - தலைவனின் பரத்தமை ஒழுக்கக் கேடு. அடங்கக் காட்டுதல் - பொறுக்க வேண்டுதல். பிழைத்து - தவறு செய்துவிட்டு. நெருங்கி - கடிந்து கூறி. இழைத்து ஆங்குக் கொடுத்தல் - தலைமகளை இசையவைத்துத் தலைவனுடன் கூடுதற்கு வழியுண்டாக்கல். வணங்கியல் மொழி - தோழி தலைவனிடம் பணிந்து பேசுதல். புறம்படு விளையாட்டு - தலைவன் புறத்தே போய் யாறும் குளமும் காவும் ஆடி மகிழ்தல் (பரத்தையருடன்). புகற்சி - குற்றம். நேராது - புதல்வனாலும் ஊடல் தீராது தலைமகன் புலம்புதல்.**

மாண்நலம் - நீ நுகர்ந்த எம் அழகினை. தோழி தலைவனைக் கடிந்து கூறுதல் இது. பேணா ஒழுக்கம் - தலைவனின் பரத்தமை. தலைவி அதற்கு நாணுவாள். சூள் - தலைவன் முன்பு கூறிய உறுதிமொழி. சோர்பு - தலைவன்தான் சொன்னதை மறந்தமை. கிளந்து - சொல்லி. பெறுதகை - தலைவியைப் பெறக்கூடிய பெருந்தகைமை. பிழைப்பு - பிழை, குற்றம். உறுதகை இல்லா - பொருந்தும் தன்மை இல்லாத. தலைவிபால் நின்று கெடுத்தல் - அவளுக்குச் சார்பாகப் பேசுவது போல் நடித்து, அவளது ஊடலை நீக்குதல். உணர்ப்புவயின் வாரா ஊடல் - தலைவன் தீர்க்கவும் தீராத ஊடல். உணர்த்தல் வேண்டிய தலைவன் பக்கம் நின்று அவளை வெகுண்டு பேசி, ஒற்றுமைப் படுத்தும் தகுதியுடைமை. அருமைக் காலம் - தாம் அரியராகிய களவுக் காலம். எண்மைக் காலம் - எளியராகிவிட்ட கற்புக் காலம். முன்பு பெருமை பேசிய தோழி, இன்று பணிந்து நடத்தல். குறைவினை - அவர்கள் சுட்டிக் காட்டிய குறைகளுக்கு மறுமொழிதல். நீத்த - பிரிந்த. நிகழுமாறு - இல்லறத்தில் ஒழுகும்படி. படீஇயர் - அவனை நல்ல வழியில் பொருத்துவதற்காக. காத்த - இது காறும் காத்துவந்த தன்மைப்படி. கண் இன்று பெயர்ப்பினும் - கண்ணோட்டமின்றிக் கடிந்து நீக்குமிடத்தும். பிரியும் பொழுது சாற்றுதல் - நெடுந்தொலைவு பிரிகிறபோது சொல்லுதல். மரபுடை எதிரும் - மரபு முறை மாறாது பணிவாக மறுமொழி கூறுதல். வகைபட வந்த - இவ்வாறு வந்த.

### காமக்கிழத்தியர் கூற்று

**புல்லுதல் மயக்கும் புலவிக் கண்ணும்,**
**இல்லோர் செய்வினை இகழ்ச்சிக் கண்ணும்,**
**பல்வேறு புதல்வர்க் கண்டு நனி உவப்பினும்,**
**மறையின் வந்த மனையோள் செய்வினை**
**பொறையின்று பெருகிய பருவரற் கண்ணும்,**
**காதல் சோர்வில் கடப்பாட்டு ஆண்மையின்**
**தாய்போல் கழறித் தழீஇய மனைவியைக்**
**காய்வின்று அவன்வயின் பொருத்தற் கண்ணும்**
**இன்நகைப் புதல்வனைத் தழீஇ இழை அணிந்து,**
**பின்னர் வந்த வாயிற் கண்ணும்,**
**மனையோள் ஒத்தலின் தன்னோர் அன்னோர்**
**மிகைபடக் குறித்த கொள்கைக் கண்ணும்,**
**எண்ணிய பண்ணை என்று இவற்றொடுபிறவும்**
**கண்ணிய காமக் கிழத்தியர் மேன.** **(1097)**

தலைவன் தழுவுதலைத் தடுக்கும் புலவிக்கண் பேசுதல், தலைவன் தலைவியரை – அவர்தம் செயல்களை எள்ளி நகையாடுதல். காமக் கிழத்தி இரண்டாம் மனைவி போல்வாள். இவளைப் பின்முறை வதுவைப் பெருங்குலக்கிழத்தி என்பர். அதனால் மனைவிபோல் சிறிது கூடுதலாகப் பேசுவாள். ஆயினும் மனைவியின் உரிமை இவளுக்கில்லை. அதனால் மனைவி மீது பொறாமைப்படுவாள். பல்வேறு புதல்வர்கள் தம் காதலனுக்குரியவர் என்பதால் அவர்களைக் கண்டு மகிழ்வாள். களவினால் காதலித்து மணக்கப்பட்ட மனைவியின் செயல்கண்டு பொறுமையின்றிப் பொறாமையால் பெருகிய துன்பத்தில் பேசுவாள். காதலில் தவறிய தலைவனது பெயரைக் காக்கும் கடமை தவறாத ஆளுமையால் தாய்போலக் கடிந்து கூறித் தழுவிக்கொண்ட மனைவியை, காமக்கிழத்தி தானும் கோபப்படாமல் அவனுடன் சேர்த்து வைப்பாள். வழியில் கண்ட இனிய புன்னகை கொண்ட (மனைவி பெற்ற) புதல்வனைத் தழுவி, அவனுக்கு அணிகள் பூட்டி பின்பு வந்த வாயில்களுடன் பேசுதற்கண்ணும் கூற்று நிகழும். தான் மனைவியைப் போல்பவளாதலின், மேலும் தன்னைப் போன்ற பரத்தையரைத் தலைவன் நாடுதல் மிகையாகும் என்பது படக் குறித்த கொள்கைக் கண்ணும் பேசுவாள். தன்னுடன் ஆறும் குளமும் காவும் சென்று விளையாடுதற்கண்ணும் பேச்சு நிகழும். இவை காமக் கிழத்தியர் கூற்று.

எல்லோருக்கும் காமக் கிழத்தியர் உண்டெனக் கருதுதல் தவறு. மேட்டுக்குடி மக்களிடம் காணப்பட்ட சமுதாய நிலை இது.

**புல்லுதல் – தழுவுதல். மயக்கும் – இடையீடு செய்தலால் மயங்க வைக்கும் இல்லோர் – தலைவன் தலைவியர். செய்வினை – அவர்கள் ஊடிக்கூடி மகிழ்தல். பின்முறை வதுவைக் காமக் கிழத்தியும் இரண்டாம் மனைவி போல்வாளாதலின் இங்ஙனம் கேலி பேசுவாள். புதல்வர் – தலைமகனுக்கு மனைவி பெற்ற மக்கள். மறை – களவு. பொறை – பொறுமை. பருவரல் – துன்பம். மனைவியின் செயல்களுக்குப் பொறாமைப்படுவாள் காமக் கிழத்தி. சோர்வு – பரத்தமை நாடியது. கடப்பாட்டு ஆண்மை – தலைவிக்குத் தவைனது நற்பெயரைக் காக்கும் கடமையாகிய ஆளுமை. கழறிய – தழுவியபடி இடித்துக் கூறுதல். காய்வின்று – கோபப்படாமல். பொருத்தல் – காமக் கிழத்தி, தலைவியைத் தலைவனுடன் சேர்த்து வைத்தல். பின்னர் வந்த வாயில் – பிற வாயில்கள். மனையோள் ஒத்தலின் – தானும் மனைவி போறலின். தன்னோர் அன்னோர் – தன்னைப் போன்ற பிறமகளிர். மிகை – தலைவன் அவர்களையும் சேர்தல் மிகையாகும். கொள்கை – குறிக்கோள். எண்ணிய பண்ணை – காமக் கிழத்தியொடு ஆறும் குளமும் சோலையும் சென்றாடுதல். கண்ணிய – மனைவி போல் கருதப்பட்ட.**

### தலைவியின் பண்புகளைத் தலைவனுக்கு வாயில்கள் எடுத்துரைப்பர்

**கற்பும் காமமும் நற்பால் ஒழுக்கமும்,**
**மெல்லியற் பொறையும், நிறையும், வல்லிதின்**
**விருந்து புறந்தருதலும், சுற்றம் ஓம்பலும்,**
**பிறவும் அன்ன கிழவோள் மாண்புகள்,**
**முகம் புகல் முறைமையின் கிழவோற்கு உரைத்தல்**
**அகம் புகல் மரபின் வாயில்கட்கு உரிய. (1098)**

வீட்டினுள் புகுந்து பழகுமளவு தொடர்புரிமையுடைய வாயில்கள், முகத்திற்கு நேரே நின்று சொல்லக் கூடிய அளவிற்கு, தலைவனிடம் தலைவியின் மாண்பமைந்த குணங்களை விவரிப்பர். தலைவியின் கற்புடைமை, இன்பவுணர்வு நல்வழி ஒழுகுதல், மென்மைச் சாயலுள்ள பொறுமை, மனத்தைக் கட்டுப்படுத்தும் நிறை, மிகமுயன்று வருந்தி விருந்து புறந்தருதல், சுற்றத்தாரைக் காத்தல் - இன்ன பிறவும் தலைவியின் நற்குணங்களென விளக்கிக் கூறுவர்.

அகம் புகல் மரபின் வாயில்கள் - வீட்டினுள் புகுந்து பழகும் தூதாகக் கூடிய வாயிலாவார். முகம் புகல் முறைமையின் - தலைவன் முகத்திற்கு நேரே பேசக் கூடியவர்கள். தலைவனிடம் தலைவியின் மாண்புகளை எடுத்துக் கூறுவர், காமம் - இன்பவுணர்வு. நிறை - மனத்தை ஒருவழி நிறுத்தல். தீமையில் செல்லவிடாது நிறுத்தல். வல்லிதின் - மிகமுயன்று விருந்து படைத்தல். சுற்றம் - உறவினர்.

### செவிலி முக்காலத்துக்கும் நல்வழி காட்டுதல்

**கழிவினும் வரவினும் நிகழ்வினும் வழிகொள**
**நல்லவை உரைத்தலும் அல்லவை கடிதலும்**
**செவிலிக் குரிய ஆகும் என்ப. (1099)**

*செவிலியின் அறிவுரை*

செவிலித்தாய் காதலர்களுக்கு அறிவுரை பகரும் கூற்றுக்களை நிகழ்த்துவாள். கடந்த காலம், எதிர்காலம், நிகழ்காலம் என மூன்று காலமும் பற்றி மரபுக்கு ஏற்ப, நல்லவற்றைக் கடைப்பிடிக்குமாறு உரைப்பாள்; அல்லாத தீயவற்றைக் கடிந்து, நீக்குமாறு அறிவுரைப்பாள்.

கழிவு - சென்ற காலம். வரவினும் - எதிர் காலம். நிகழ்வினும் - நிகழ் காலம். வழிக்கொள - மரபுக்குப் பொருந்த. செவிலி முக்காலமும் உணர்ந்து அறிவுரை கூறுவாள்.

**அறிவரும் அவ்வாறு அறிவுரை கூறற்கு உரியர்**

**சொல்லிய கிளவி அறிவர்க்கும் உரிய. (1100)**

மேற் சொல்லிய கூற்றுக்கள், முக்காலமும் உணர்ந்தவர் எனப்படும் அறிவர்களுக்கும் உரியன.

அறிவர் - முக்காலமும் உணர்ந்தவர்.

**அறிவர் கடிந்து இடித்துக் கூறியும் திருத்துவர்**

**இடித்துவரை நிறுத்தலும் அவரதாகும்**
**கிழவனும் கிழத்தியும் அவர்வரை நிற்றலின். (1101)**

தலைமக்களை இடித்துக்கூறி, எல்லை கடவாது தடுத்து நன்னெறியில் நிறுத்துதற்கும் அறிவர்க்கு உரிமையுண்டு. தலைவனும் தலைவியும் அவர்களது அறிவுரைக்குக் கட்டுப்பட்டு நிற்பது, தமிழர் பண்பாடு. ஆதலினால் அறிவர் கடிந்து கூறியும் திருத்துவர்.

அவர் வரை - அவரது கட்டுப்பாட்டிற்குட்பட்டு. இடித்துக் கூறி தமது அறிவுரை எல்லைக்கண் நிறுத்துவர். அறிவர் இடித்துரை கூறுவதைக் காதலர் ஏற்று அதன்படி நடப்பர்.

**தலைமகளுக்கே ஊடல் உரியது; சிலபோது**
**தலைமகனும் ஊட நேரும்**

**உணர்ப்புவரை இறப்பினும், செய்குறி பிழைப்பினும்,**
**புலத்தலும் ஊடலும் கிழவோற் குரிய. (1102)**

தலைவிதான் ஊடுவாள் என்பது அவளது இயல்பைப் பொறுத்தது. தலைவனும் ஊடும் இடங்களும் உண்டு. தலைவி ஊடியபோது, அதை உணர்த்தத் (நீக்க) தலைவன் முயன்றும், அவள் ஊடல் தீராமல் எல்லை கடந்துவிடின், தலைவன் ஊடத் தொடங்குவான். தலைவன் குறியிடம் வந்து, செய்த குறியைத் (அடையாளத்தை) தலைவி தப்பவிட்டால், அது தலைவனுக்குப் பெரும் ஏமாற்றமாகும். அப்போதும் தலைவன் புலக்கவும் ஊடவும் செய்வான். தலைவிக்கு இசையாதவன்போல் முகத்தை மாறவைத்து, ஒதுங்கி மறுத்துப் பேசாதிருப்பான்.

உணர்ப்பு - தலைவி ஊடும்போது தலைவன் அதைத் தீர்க்க முயலுதலே 'உணர்த்தல்' எனப்படும். அவ்வுணர்ப்பை ஏற்காது தலைவி எல்லை கடந்து ஊடினால், தலைவன் ஊடத் தொடங்க நேரும். செய்குறி

பிழைப்பினும் - தலைவன் செய்த குறியைத் தலைவி தப்பவிட்ட இடத்தும். புலத்தல் - முகத்தை மாற வைத்தல். ஊடல் - சினந்து ஒதுங்கிப் போதலும் மறுத்தலும்.

### அந்நிலையில் தலைவியுடன் சேர்ந்து தோழியும் பேசுவாள்

**புலத்தலும் ஊடலும் ஆகிய இடத்தும்**
**சொலத் தகு கிளவி தோழிக்குரிய. (1103)**

தலைவன் புலந்தும் ஊடியும் சிறு மனவேறுபாடுகளைக் காட்டுமிடத்தும் தோழி கூற்று நிகழும். அப்போது தலைவனிடம் சொல்லத்தக்கவற்றை மட்டுமே அவள் சொல்லுதற்கு உரியள்.

சொலத்தகு கிளவி - சொல்லக் கூடிய கூற்று மட்டும்.

### தோழி தலைவனை இடித்துரைக்கவும் கூடும்

**பரத்தை மறுத்தல் வேண்டியும், கிழத்தி**
**மடத்தகு கிழமை உடைமையானும்**
**அன்பிலை கொடியை என்றலும் உரியள். (1104)**

தோழி தலைவனை அன்பிலை, கொடியை எனக் கடிந்தும் கூறும் உரிமையுடையவள். அவனது பரத்தையர் தொடர்பை மறுக்கும் போதும் தலைவியின் அறியாப் பருவத்தைச் சுட்டிக்காட்டி அவளை ஏமாற்றக் கூடாதென்று கூறும்போதும் இங்ஙனம் கடிந்து பேசுவாள்.

மறுத்தல் - பரத்தைமை கூடாதெனல். தலைவி மடத்தகு கிழமை உடைமை - இளமையால் அறியாதார் போலிருக்கும் தன்மை, (அறியாத இளையவளை ஏமாற்றலாமா என்ற கோபம்.) தோழி தலைவனை அன்பிலை எனல்.

### தலைமகள் ஊடும் முறைகளில் ஒன்று

**அவன் குறிப்பு அறிதல் வேண்டியும், கிழவி**
**அகன்மலி ஊடல் அகற்சிக் கண்ணும்**
**வேற்றுமைக் கிளவி தோற்றவும் பெறுமே. (1105)**

தலைவி ஊடும்போதும் அதைத் தவிர்க்கும் போதும் தன்னை ஒரு மூன்றாம் பேர்வழி போல வைத்துப் பேசுவாள். தலைவனின் உள்ளக் குறிப்பை அறியவேண்டிய இடத்தும் தன் உள்ளத்தில் நிறைந்திருந்த ஊடல் நீங்கும் போதும் தான் வேறு ஒருத்தி போல வைத்துப் பேசும் முறை அவளிடம் உளதாகும்.

தலைவன் உள்ளக் குறிப்பை அறியவும் தன் உள்ளத்தெழுந்த ஊடல் நீக்குமிடத்தும் தன்னை உறவுடையாள் அல்லாத வேறு ஒருத்தி போல வைத்து, தலைவி பேசுதலும் உண்டு.

### தலைவி வழிபடும் இயல்புடையளாயினும் ஊடலின்போது, காமமிகுதியால் தலைவன் பணிந்து பேசுவான்

**காமக் கடப்பினுள் பணிந்த கிளவி**
**காணுங் காலை கிழவோற்கு உரித்தே**
**வழிபடு கிழமை அவட்கிய லான. (1106)**

தலைவிதான் பணிவுடன் தலைவன் சொல்கிற வழியில் நிற்பாள். தலைவன் பணிவாக, வழிபடுவான் போலப் பேசுவது தலைமைக்கு இயல்பில்லை. ஆனால் தலைமகளின் ஊடலால், காம உணர்வு எல்லை கடந்தவிடத்து, அவள் ஊடலை நீக்க தலைவன் பணிவுடன் கூடிய சொற்களை அவளிடம் பேசுவான். தலைவியின் தலைமையும் தலைதூக்குமிடங்கள் உண்டு என அறிகிறோம்.

காமக்கடப்பினுள் - ஊடற்காலத்துக் காமவுணர்வு மிகும்போது. வழிபடு கிழமை - பணிந்து போகும் இயல்பு. பணிவது அவளுக்கு இயல்பு. ஊடலில் இவன் பணிந்து பேசி ஊடலைத் தவிர்ப்பான்.

### தலைவியால் ஊடலின்போதும் அன்பை மறக்கமுடியாது

**அருள் முந்துறுத்த அன்பு பொதி கிளவி**
**பொருள்பட மொழிதல் கிழவோட்கும் உரித்தே. (1107)**

அருளைத் தோற்றுவிக்கும் அன்பு நிறைந்த சொற்களை, உண்மையாகச் (தலைவன்போல் அந்நேரத்திற்கு ஏற்ப அல்லாமல்) சொல்லுதல் தலைவிக்கும் உரியதாகும்.

தலைவன் அன்பு தவழப் பேசப் பல காரணங்கள் கண்டு. ஆனால் தலைவி அருளுக்கு முன்னே தோற்றுவிக்கும் அன்பு பொதி கிளவியைப் பேசுவாள். பொருள்பட - பயன்படுமாறு, உண்மையாக. தலைவி அன்பொழுகப் பேசுவது ஊடல் தீர்வில் நிகழும்.

### ஊரார் கூறும் அலர்

**களவும் கற்பும் அலர் வரைவு இன்றே. (1108)**

அலர் என்பது ஊரார் பேசும் பழிச்சொல்; வதந்திப் பேச்சு. களவுக் காதலரைப் பற்றி இது நிகழும். கற்புக் காலத்தும் பரத்தைமை, பிரிவு போன்ற

சூழல்களில் ஊரார் பழித்துப்பேசும் அலர் நிகழும். ஆக அலர் என்பது களவில் மட்டுமன்று; கற்பிலும் உண்டு.

அலர் - காதலரைப் பற்றி உண்மையாகவும் வதந்தியாகவும் ஊரார். கைகால் வைத்துப் பேசும் கிண்டற் பேச்சு. பழிப்பேச்சு. இது களவிலும் உண்டு. பரத்தை ஒழுக்கமும் பிரிவும் உண்டாதலால் கற்பிலும் ஊரார் அலர் கூறுவதுண்டு.

### அலரும் காதல்வாழ்வைச் சிறப்பிக்கும்

**அலரின் தோன்றும் காமத்தின் சிறப்பே. (1109)**

அலர் பழி ஆகாது. அது காமத்தின் சிறப்பை வெளிப்படுத்தும். அலரால்தான் காதலர் இணைத்துப் பேசப்பட்டு ஒன்றாகின்றனர். அதுவே திருமணத்தை விரைவு படுத்தும் தூண்டுகோலாகிறது. அலர் இன்றேல் இக் 'காமம்' என்பது உப்புச்சப்பற்றிருக்கும். இது களவில் தோன்றும் அலர் பற்றியது.

அலர் தவறானது அன்று. காமத்தின் சிறப்பே அலர் மூலம்தான் வெளிப்படுகிறது. அது காதலரைச் சேர்த்துவைத்துவிடும்; திருமணத்திற்கு வழி வகுத்துவிடும்.

### தலைவன் காமவிளையாட்டு

**கிழவோன் விளையாட்டு ஆங்கும் அற்றே. (1110)**

தலைவன் மேற்கொள்ளும் காம விளையாட்டுக்களும், ஆறும் குளமும் காவும் சென்று ஆடிப்பாடி மகிழ்தலும் காமத்தைச் சிறப்பிக்கும். காமக் கிழத்தியருடனும் விளையாடுதலால், இது கற்பில் தோன்றும் அலர் பற்றியது.

விளையாட்டு - முன்பு காமத்தில் ஆடிப்பாடி மகிழ்தலையே, இச்சொல் குறித்தது. தலைவனது காம விளையாட்டுக்களும் அதாவது ஆறும் குளமும் காவும் சென்று விளையாடுதலும் காமவுணர்வைச் சிறப்பிக்கும்.

### தலைவன் கொடுமையை வாயிலோர் அவனெதிரே கூறார்

**மனைவி தலைத்தாள் கிழவோன் கொடுமை**
**தம் உளவாதல் வாயில்கட்கு இல்லை. (1111)**

மனைவியிடத்துத் தலைவன் தனது பரத்தைமை ஒழுக்கத்தால் செய்யும் கொடுமைகளை, தமக்கு நேர்ந்தன போல் வருந்தித் தலைவனிடம் வாயில்கள் கூறுவதில்லை.

மனைவி தலைத்தாள் - மனைவியிடத்து. கொடுமை - பரத்தையர்ப் பிரிவால் வருத்தும் கொடுமை. தம் உளவாதல் - தமக்கு நேர்ந்தன போல் வருந்திக் கூறுதல். வாயிலாவார் தலைவனிடம் நேரே கூறார்.

**மனைவியிடம் கூறி, அவளுக்கு நம்பிக்கை ஊட்டுவர்**

**மனைவி முன்னர் கையறு கிளவி**
**மனைவிக்கு உறுதி உள்வழி உண்டே. (1112)**

ஆனால், அக் கொடுமைகளுக்கு ஆளான மனைவி முன்பாக, கையற்று வருந்திச் சொல்வர். அதுவும் மனைவிக்கு நல்வாழ்வு அமையுமாறு செய்யும் வழியிலேயே பேசப்படும். (இல்லற வாழ்வில் ஊறு நேரப் பேசிவிட மாட்டார்கள்.)

ஆனால் மனைவி முன்னர், அவளது துன்பத்திற்காகச் செயலற்றுப் பேசுதல். உறுதி உள்வழி - அவளுக்கு நம்பிக்கையூட்டி உறுதுணையாகுமிடத்து.

**வாயில்கள் முன்னிலைப் புறமொழியாக இடித்துரைப்பர்**

**முன்னிலைப் புறமொழி எல்லா வாயிற்கும்**
**பின்னிலைத் தோன்றும் என்மனார் புலவர். (1113)**

தலைவன் தலைவி ஆகிய இருவரும் தங்கள் ஊடலைத் தவிர்க்க உதவுமாறு, தங்களிடம் வேண்டி நிற்கும்பொழுது, நேரே கூறாது, முன்னிலைப்புற மொழியாகப் (பிறரைக் கூறுவதுபோல) பேசுதல் வாயில்கள் அனைவருக்கும் உரியதாகும்.

முன்னிலைப் புறமொழி - முன்னின்றாரிடம் நேரே கூறாது, பிறரைக் கூறுவது போல் பேசுதல். பின்னிலைக்கண் - தங்களைப் பின்னின்று குறையிரக்கும்போது.

**கூத்தர் தலைவிக்கு ஊடல் தணிவித்தல்**

**தொல்லவை உரைத்தலும், நுகர்ச்சி ஏத்தலும்,**
**பல்லாற்றானும் ஊடலின் தணித்தலும்**
**உறுதி காட்டலும், அறிவு மெய்ந் நிறுத்தலும்,**
**ஏதுவின் உணர்த்தலும், துணிவு காட்டலும்,**
**அணிநிலை உரைத்தலும் கூத்தர் மேன. (1114)**

*கூத்தர்கள் நிகழ்த்தும் கூற்றுக்கள்*

முன்பு நிகழ்ந்தவற்றை எடுத்துரைத்தல் (களவுக் கால நிகழ்வுகள்). இன்ப

நுகர்வைப் புகழ்தல். பல வழிகளாலும் தலைவியின் ஊடலைத் தவிர்க்க முயலுதல். நல்வாழ்விற்கான உறுதிகாட்டுதல். அறிவை மனத்தில் பதிய வைத்தல், காரணம் காட்டி பிறர் இவ்வாறு வாழ்வதுபோல் வாழவேண்டுமென வழிகாட்டுதல், கொள்கை உறுதி கடைப்பிடிக்கும் வழியைக் காட்டுதல். தலைவியின் அழகையும் அது கெடுமாறு வருந்துதல் கூடாதெனவும் கூறுதல். இவை கூத்தர்கள் நிகழ்த்துவன.

தொல்லவை - முன்னர் நிகழ்ந்தவை. நுகர்ச்சி - காம நுகர்ச்சியை. ஏத்தல் - இனிதெனப் புகழ்தல். உறுதி - இவ்வாறு நடத்தலே உறுதி பயக்கும் - நன்மை தரும் எனல். மெய்ந் நிறுத்தல் - மனத்தில் பதிவித்தல். ஏது - காரணம் காட்டி ஊடல் தணித்தல். துணிவு - உறுதியுண்டாகச் சொல்லுதல். அணிநிலை - இப்போதுள்ள அழகுகெடுமெனல்.

**கூத்தரும் பாணரும் நிலங்கடந்து போய்ப் பேசுதல்**

**நிலம்பெயர்ந்து உரைத்தல், வரைநிலை உரைத்தல்**
**கூத்தர்க்கும் பாணர்க்கும் யாத்தவை உரிய. (1115)**

கூத்தரும் பாணரும் தலைவனிருக்கும் நாட்டுக்கு நிலம் பெயர்ந்து சென்று தலைவி நிலையை உரைப்பதுண்டு. தலைவன் வருவதாகச் சொன்ன பருவ எல்லையைத் தலைவியிடம் வந்து கூறலும் உண்டு. இவற்றுள் அவரவர்க்குப் பொருந்தியவை, பொருந்திய காலங்களில் நிகழும்.

நிலம் விட்டு நிலம் போய்த் தலைவனிடம், தலைவி நிலையை உரைத்தலும் அவன் திரும்பி வரும் கால எல்லையைத் தலைவியிடம் உரைத்தலும் கூத்தர்க்கும் பாணர்க்கும் உரியவாகும். யாத்தவை - அவ்வச் சூழலுக்குப் பொருந்தியவை.

**ஏவல் செய்யும் இளையோர் கூற்று**

**ஆற்றது பண்பும், கருமத்து விளைவும்,**
**ஏவல் முடிவும், வினாவும், செப்பும்,**
**ஆற்றிடைக் கண்ட பொருளும், இறைச்சியும்,**
**தோற்றம் சான்ற அன்னவை பிறவும்**
**இளையோர்க் குரிய கிளவி என்ப. (1116)**

*ஏவல் செய்யும் இளையோர் கூற்று*

ஏவியதைச் செய்பவர் 'இளையோர்' என்பது பண்டைய வழக்கு. அவர்களும் கூற்று நிகழ்த்துதற்கு உரியர். அவர்கள் தலைவனது தேருடன் அல்லது பொதுவாகத் தலைவனுடன் வெளி நிலங்களுக்கும் நாடுகளுக்கும்

போய்வந்த பழக்கமுடையவர். அவர்கள் கூறுவன : செல்லும் வழி எப்படிப்பட்டது எனக் கூறுவர். ஒரு காரியத்தை இது இவ்வாறு முடியும் எனச் சொல்லுவர். அதாவது அதனாலாம் பயனை விளக்குதல். ஏவியதைச் செய்து முடித்ததைக் கூறுவர். சிலவற்றைப் பற்றித் தலைமக்களிடம் வினவுதலும், அவர்கள் வினவியதற்கு விடை கூறலும் உண்டு. வழியிடையே காணப்படும் நிமித்தமானவையும் 'இறைச்சி' எனும் கருப்பொருளாம் உயிரினங்களின் காமவுணர்வுத் தொடர்பான நிகழ்வுகளையும் பேசுதற்கேற்ற விளக்கமமைந்த பிறவற்றையும் கூறுவர்.

**குற்றேவல் செய்யும் இளையோர் வழியது தன்மை, சென்ற காரியத்தின் முடிவு, ஏவியதைச் செய்து முடித்தமை, வினவுதல், விடை கூறுதல், வழியிடைக் கண்ட மான் பறவை யானை முதலிய கருப்பொருள் உயிரினங்களைப் பற்றியும் அவற்றின் இணைவிழைச்சுச் செயல்கள் பற்றியும், விளங்குதலமைந்த அவை போல்வன பிறவும் இளையோர்க்குரிய கூற்றுக்களாகும். தலைவனை உடன்சென்ற வேலையாட்களாம் - இளையர் விரைவுபடுத்துதற்கு இவ்வாறு கூறுவர். இறைச்சி - உயிரினங்களின் அன்பு வாழ்க்கைச் செயல்கள்.**

### உழைக்கும் இளைய ஏவலர் பணிகள்

**உழைக்குறும் தொழிலும் காப்பும் உயர்ந்தோர்க்கு**
**நடக்கை எல்லாம் அவர்கட் படுமே. (1117)**

உடலுழைப்பாலாம் தொழில்களைச் செய்தலும், தலை மக்களுக்கு மெய்க்காப்பாளராய்க் காத்தலும் அவற்றுடன் உயர்குடி மக்களுக்குச் செய்யத் தக்க நடவடிக்கை அனைத்தும் இவ் இளையோர்க்கு உரியனவாகும்.

**உடலுழைப்புத் தொழில்களைச் செய்தலும் மெய்க்காப்பாளராகிக் காத்தலும் இவை போல உயர்ந்த மக்களுக்குரிய அன்றாடப் பணியனைத்தையும் இவ் இளையோர் செய்வர்.**

### தலைவன் கலங்குமிடங்கள்

**பின்முறை ஆக்கிய பெரும் பொருள் வதுவைத்**
**தொன்முறை மனைவி எதிர்ப் பாடாயினும்**
**மின்னிழைப் புதல்வனை வாயில் கொண்டு புகினும்**
**கிழவோன் இறந்தது நினைஇ ஆங்கண்**
**கலங்கலும் உரியன் என்மனார் புலவர். (1118)**

பின்பு நடத்திய பெருஞ்சிறப்புடன் கூடிய இரண்டாம் திருமணத்தில் முன்னைய, முறைப்படி மணந்த முதல் மனைவி எதிர்ப்பட்டவிடத்தும் விளங்கும் அணிகலன் பூண்ட புதல்வனை வாயிலாகக் கொண்டு மனைவி எதிர்வரினும், கடந்த காலத்தை நினைத்துத் தலைவன் அவ்விடத்தே, அந்நேரத்தில் மனங்கலங்குதற்கும் உரியனாவான்.

பின்பு ஒருத்தியைத் தன் மனைவியாக்கிக் கொண்டு பெரும் சிறப்புடன் நடக்கும் வதுவையில் (திருமணத்தில்), முதல் மனைவி எதிர்ப்பட்ட பொழுதும். பின்முறை வதுவைப் பெருங்குலக் கிழத்தி என்பவள் இரண்டாம் மனைவி. மின் இழை - அணிகலன். புதல்வனை வாயிலாகக் கொண்டு மனைவி வருதல். இறந்தது நினைஇ - கடந்த காலத்தில் நடந்ததை நினைத்து.

### தலைவி தலைவன் வருத்தமுணர்ந்து தழுவிக் கொள்ளுதல்

**தாய்போல் கழறித் தழீஇக் கோடல்**
**ஆய்மனைக் கிழத்திக்கும் உரித்தென மொழிப**
**கவவொடு மயங்கிய காலை யான. (1119)**

தலைவன் முன்பு சுட்டியபடி மனங்கலங்கி நிற்பான்; மனைவி தழுவுதலின்மையால் மயங்குவான். அப்போது, மென்மைப் பண்புடைய தலைவி, தலைவனைத் தாய்போல் இடித்துரைத்துத் தழுவிக்கொள்ளுதற்கும் உரியவள் ஆவாள்.

தலைவன் (கவவொடு) தழுவுதலை இழந்ததால் மயங்குதல். கவவு - தழுவுதல். தாய் போல் இடித்துரைத்துத் தழுவிக் கொள்ளுதல். ஆய்வினை - மென்மையான செயல்கள் மனைவிக்கும் உரியதாகும். தலைவன் முன்சென்று தழுவுதலே முறை. ஊடலால் அவன் மயங்கி நின்ற பொழுது, தலைவி தாய் போல அன்பு காட்டுவாள்; தானே சென்று தழுவிக் கொள்வாள்.

### தலைவன் ஒழுக்கத்தவற்றைத் தலைவி பொறுத்து, அவனினும் உயர்தல்

**அவன் சோர்பு காத்தல் கடன்எனப் படுதலின்**
**மகன் தாய் உயர்பும் தன் உயர்பாகும்**
**செல்வன் பணிமொழி இயல்பாக லான. (1119)**

அவன் குறையை வெளிப்படாமல் காப்பது இல்லற மகளிர்க்குக் கடமை எனப்படும். அதனால் கணவனது பணிவான சொற்கள் ஊடற்காலத்தே இயல்பாகும். இந்நிலையில் மகனைப் பெற்ற, உரிமையுள்ள தாயாகிய மனைவி, கணவனைவிட உயர்வாக, மதிப்பாக, கவுரவமாகப் பேசுவாள். அவ்வாறு நிகழும் மனைவியது உயர்வும்தலைவனால் தனது உயர்வாகவே கருதப்படும்.

மனைவி தலைவனுடைய ஒழுக்கத்தில் சோர்வு ஏற்படும் பொழுது அதனைப் பிறரறியாது காத்தல் அவள் கடமையாகும். இதுவே பண்பாடு. எனவே மகனைப் பெற்ற தாயாகிய மனைவியின் உயர்வு, தலைவனுக்கும் உயர்வேயாகும். அந்நிலையில் கணவன் பணிந்து நடத்தலும் இயல்பேயாகும்.

**பாசறையில் மகளிரை அழைத்துப் போவதில்லை**

**எண்ணரும் பாசறை பெண்ணொடு புணரார். (1121)**

*பிரிவில் சில நிகழ்வுகள்*

நினைத்தற்கரிய அச்சமுடைய பாசறையில் பெண்களை அழைத்துச் செல்வதில்லை.

நினைத்தற்கரிய வீரச் சிறப்புடைய பாசறைக்கண் பெண்களை அழைத்துச் செல்லார், தலைவர்கள்.

**போர்ப் பயிற்சி பெற்ற மகளிர் பாசறையில் தங்குவர்**

**புறத்தோர் ஆங்கண் புரைவ தென்ப. (1122)**

புறத்தொழிலாம் போர்ப் பயிற்சியுடைய பெண்கள் அப் பாசறையில் வந்து தங்குதற்குரியர்.

புறவாழ்வுக்கேற்ற புறத்தோர்; போர்ப் பயிற்சி பெற்ற மகளிர். புரைவது - தங்குவது பொருந்தும்.

**பிரிவுச் சமயங்களில் பார்ப்பார் கூற்று**

**காமநிலை உரைத்தலும், தேர்நிலை உரைத்தலும்**
**கிழவோன் குறிப்பினை எடுத்தனர் மொழிதலும்,**
**ஆவொடு பட்ட நிமித்தங் கூறலும்,**
**செலவுறு கிளவியும், செலவழுங்கு கிளவியும்**
**அன்னவை பிறவும் பார்ப்பார்க்கு உரிய. (1123)**

*பிரிவில் பார்ப்பார் கூற்று*

பார்ப்பார் தமிழராகவே படுகின்றனர். பாங்கனாக, தூதுவனாகப் பயன்பட்டனர். அறிவர், கணியர் எனும் தமிழ்ப் பெரியோருடனும் சமமாகப் பேசப்படுகின்றனர். அவர்கள் வேதம் ஓதுதலையும் கற்றுள்ளனர். ஆயினும் இக்காலப் பார்ப்பார் தமிழுக்கு உள்ளும் புறமும் வேற்றுமைக் கருத்தாயிருப்பது, இடைக்காலத்தில் காணப்பட்டதாகும்.

பிரியும்போது தலைவியின் காமநிலையைத் தலைவனுக்கு உரைப்பர். தேரினது நிலையை உரைப்பர். தலைவனுடன் இருந்து பழகி, அவனது மனக்குறிப்பை அவ்வப்போது யூகித்தறிந்து எடுத்துரைப்பர். 'ஆ' வொடு பட்ட நிமித்தம் (சகுனம்) கூறுவர். தமிழர்கள் நிமித்தம் பார்ப்பதில் மிகுந்த நம்பிக்கை கொண்டிருந்தனர். ஓணான் முதல் பல்லிவரை அவர்கள் நிமித்தம் பார்த்ததைச் சங்கப் பாடல்களால் அறியலாம். தலைவன் நெடுந்தூரம் பிரிந்து போவதற்கான கூற்றுக்களும் அங்ஙனம் செல்லாமல் தடுப்பதற்கான கூற்றுக்களும் அன்னவை பிறவும் அவர்பால் தோன்றும்.

**தலைவியின் காமநிலை உரைத்தல், தலைவனது தேர் பற்றி ஆராயும் நிலையை விளக்குதல், தலைவன் மனக்குறிப்பை அவ்வவ்போது அறிந்து எடுத்து மொழிதல், 'ஆ' பற்றி அறியலாகும் நிமித்தம் கூறுதல், தலைவன் பிரிவு பற்றிக் கூறுதல், அவனைச் செல்லாது தடுத்து நிறுத்தக் கூறுதல் - அவை போல்வன பிறவும் பார்ப்பார் பேசுவன.**

### வாயிலோர் யாவரும் மன மகிழப் பேசுதல்

**எல்லா வாயினும் இருவர் தேஎத்தும்**
**புல்லிய மகிழ்ச்சிப் பொருள என்ப. (1124)**

*வாயிலோர்க்குச் சில கூற்றுமுறைகள்*

வாயில்கள் எல்லோரும் தலைமக்கள் இருவரிடத்தும் மகிழ்ச்சி பொருந்திய பொருள்கள் பற்றியே பேசுவர்.

**தலைவன் தலைவி இருவரிடத்தும் வாயில்கள் ( தூது செல்பவர்) அனைவரும் மகிழ்ச்சி பொருந்திய கருத்துக்களையே பேசுவர். புல்லிய - பொருந்திய.**

### கடிந்து பேசினால் சிறைப்புறமாகும்

**அன்பு தலைப்பிரிந்த கிளவி தோன்றின்**
**சிறைப்புறம் குறித்தன்று என்மனார் புலவர். (1125)**

அன்பு இல்லாத கடுஞ்சொற்களைப் பேச நேர்ந்தால், நேரே பேசாமல், சிறைப்புறமாக - முன்னிலைப் புறமொழியாகப் பேசுவர். இவை போல்வன பல பழகும் நாகரிகம் கருதியன. சங்க இலக்கிய மாந்தர்கள் பழகும் பண்பாடு பற்றித் தொல்காப்பியத்துள் வருவன மிகப்பல. சங்கப் பாடல்களிலும் இவை அறிந்து இன்புறத்தக்கன.

அன்பு இல்லாத பேச்சுக்கள் தோன்றினால், சிறைப்புறமாக மட்டுமே பேசுவர். முன்னிலைப் புறமொழியாகக் கூறுவர். சிறை - வீட்டுப் பின்புற வேலி. வீட்டினுள்ளிருந்தபடி, வெளியில் நிற்கும் தலைவன் செவியில் விழுமாறு பேசுவர்.

### தலைவி தன்னைப் புகழ்ந்து பேசுமிடங்கள்

**தற்புகழ் கிளவி கிழவன்முன் கிளத்தல்**
**எத்திறத் தானும் கிழத்திக்கு இல்லை**
**முற்பட வகுத்த இரண்டலங் கடையே. (1126)**

*தற்புகழ் கிளவிகள்*

முன்பு தலைவன் பரத்தையிடமிருந்து வந்து, தலைவி ஊடலைத் தீர்க்க, அவளிடம் குறை இரந்து நிற்பான்; இனி இத் தவறு செய்யேன் என உறுதி கூறுவான் என்று கூறப்பட்டது. (இரத்தலும் தெளித்தலும் கிழவோன் மேன. 927) அவ்விருநிலைகளிலும் தலைவி தன் உயர்வு தோன்றத் தன்னைப் புகழ்ந்து கூறுவாளாம். மற்றபடி தலைவன் எதிரே, தன்னைத் தானே புகழ்வதென்பது, தலைவிக்கு எவ்வகையிலும் இல்லை. (சிலம்பில் கண்ணகி 'மாற்றாவுள்ள வாழ்க்கையேன்' எனத் தன்னைப்புகழ்ந்தமை காண்க.)

கிழத்தி தலைவன் முன் எந்நிலையிலும் தன்னைத் தானே புகழ்ந்து கூறுவதில்லை. முன்பு காட்டியவாறு தலைவன் பரத்தையிற் பிரிந்துவந்து, ஊடிய தலைவியிடம் இரந்துநிற்றலும் தெளித்தலும் (உறுதி கூறலும்) ஆகிய இரண்டு இடங்களில் மட்டும், தலைவி தன்னை உயர்த்திப் பேசுவாள்.

### தலைவன் தன்னைப் புகழ்ந்து பேசுமிடங்கள்

**கிழவி முன்னர்த் தற்புகழ் கிளவி**
**கிழவோன் வினைவயின் உரிய என்ப. (1127)**

தலைவனும் தலைவி முன்னர் தன்னைத்தானே புகழ்ந்து பேசுவதுண்டு. அது தலைவன் அரசன் பொருட்டு வினைவயிற் பிரியும் போதும் பொருள் தேடப் பிரியும் போதும் உளதாகும்.

தலைவன் வினைவயின் (போர் முதலியன கருதி) பிரியுமிடத்தில் மட்டும், தலைவி முன்னர்த் தன்னைத் தானே புகழ்ந்து பேசுவான்.

### பாங்கன் தலைவனுக்கு எதிர் மொழிதல் - கழறுதல்

**மொழி எதிர் மொழிதல் பாங்கற்கு உரித்தே. (1128)**

தலைவன் கூறியதற்கு எதிர்த்துப் பேசுதல் (கழறுதல்) பாங்கனுக்கு உண்டு.

தலைவன் கூற்றை எதிர்த்து, கழறுதல் (கடிந்து கூறுதல்) பாங்கனுக்கு உரியது.

### மறுத்தல் மிகக் குறிப்பாக அருகியே தோன்றும்

**குறித்து எதிர்மொழிதல் அஃகித் தோன்றும். (1129)**

தலைவன் குற்றத்தை நேரே சுட்டிக்காட்டி எதிர்மொழி பேசுதல் மிகவும் அருகியே காணப்படும்.

மிகக் குறிப்பாகச் சுட்டிச் சொல்லிப் பாங்கன் மறுத்து மொழிதல் மிக அருகியே தோன்றும்.

### தலைவன் தலைவியிடம் வற்புறுத்திக் கூறியே பிரிவான்

**துன்புறு பொழுதினும் எல்லாம் கிழவன்**
**வற்புறுத் தல்லது சேறல் இல்லை. (1130)**

*பிரிவுக் காலச் சூழல்கள்*

தலைவி தலைவன் பிரிவுக்கு வருந்துவாள். அவ்வாறு வருந்தும் பொழுதிலும் பிற நேரங்களிலும் தலைவன் தலைவியை வற்புறுத்தி ஆற்றுவித்தல்லது பிரிந்து போக மாட்டான். இதற்காகவே அவன் சிலநாள் செலவழுங்குவான்.

தலைவி அஞ்சித் துன்புறும் பொழுதினும் பிற வேளைகளிலும் எல்லாம், தலைவன் தலைவியை மிக வற்புறுத்தி ஆறுதல் கூறியே பிரிவான். வற்புறுத்தாது பிரிந்து செல்லுதல் இல்லை.

### தலைவியை வற்புறுத்துதற்கே செலவழுங்கல்

**செலவிடை அழுங்கல் செல்லாமை அன்றே**
**வன்புறை குறித்த தவிர்ச்சி ஆகும். (1131)**

அங்ஙனம் பிரிந்து செல்லுதற்கிடையே சிலநாள் அதைத் தவிர்த்து இருத்தல், செல்லாமல் இல்லிலேயே இருப்பதற்கன்று. வற்புறுத்திப் பிரிதல் என்ற 'வன்புறை' குறித்த, தவிர்ச்சி ஆகும் அது.

தலைவன் பிரிந்து செல்வதற்கு இடையே, அச்செயலைத் தவிர்த்தல், பிரிந்து செல்லாமை அன்று; தலைவியை வற்புறுத்தி ஆற்றுவிக்கக் கருதிய தவிர்ச்சியே அது.

### பாசறையில் தலைவனுக்குத் தலைவி நினைவு வெற்றி பெற்ற பிறகே தோன்றும்

**கிழவி நிலையே வினையிடத்து உரையார்;**
**வென்றிக் காலத்து விளங்கித் தோன்றும். (1132)**

தலைவியின் நிலையை அவன் போர்க்களத்துப் பாசறையில் இருக்கும்போது யாரும் நினைவூட்ட மாட்டார்கள்; அவனும் நினைக்கமாட்டான். வெற்றிபெற்ற காலத்திலேதான், அந்நினைவு உடனே விளக்கமுறத் தோன்றும்.

தலைவி நிலையை, பாசறையில் போர்வினை கருதி இருக்குமிடத்தில் தலைவனுக்கு யாரும் உரையார். வெற்றி பெற்ற காலத்துத் தலைவனுக்குத் தலைவியின் நினைவு தானாகவே வெளிப்படும்.

### பரத்தையிற் பிரிவுக்குரிய காலம்

**பூப்பின் புறப்பாடு ஈராறு நாளும்**
**நீத்து அகன்று உறையார் என்மனார் புலவர்;**
**பரத்தையிற் பிரிந்த காலை யான. (1133)**

தலைவி மாதப் பூப்பு முடிந்த காலத்திற்குப் பின்வரும் பன்னிரண்டு நாளும், தலைவன் அவளைப் பிரிந்து செல்லமாட்டான். அது கருவுருவாகும் காலம் என்பர் உரையாசிரியர். பரத்தையிற் பிரியும் காலத்தில் தலைவன் இவ்வாறு நடந்து கொள்ளுதல் மரபு. இது சிறு பிரிவுகள் பற்றியது. (இவை சில வாழ்க்கைக்கு

அறிவுரை போலவும் உள்ளன. அக்கால நாட்டுப்புற இலக்கிய வடிவப் பாடல்களில் இது காணப்பட்டிருக்கும்.)

தலைவி பூப்பெய்தி முடிந்த பின் பன்னிரண்டு நாளும், கரு தோன்றும் காலமாதலால், நீத்து அகன்று பிரிதல் அறமாகாது. பரத்தையைத் தேடிப்போகும் தலைவனுக்குச் சொன்ன அறிவுரை இது.

### கல்விப் பிரிவுக்குரிய ஆண்டு வரையறை

**வேண்டிய கல்வி யாண்டு மூன்று இறவாது. (1134)**

விரும்பிப் பயில வேண்டிய கல்வி மூன்றாண்டுகளுக்கு மேல் பிரிந்து நிகழாது.

விரும்பிப் பயிலும் கல்வி மூன்றாண்டு எல்லை கடவாது.

### வேந்தனுக்குற்றுழிப் பிரியும் காவல் பிரிவு ஓராண்டு மட்டுமே

**வேந்துறு தொழிலே யாண்டினது அகமே. (1135)**

வேந்தனுக்கு உற்றுழி - போர், தூது, நாடுகாவல் பிரிவுகள் ஓர் ஆண்டுக்குட்பட்டனவாகவே அமையும்.

வேந்தற்குற்றுழியும் அவற்குத் தூதாயும் நாடு காவலுக்கும் என வேந்துறு தொழில்கள் பற்றிய பிரிவு ஓராண்டு எல்லைக்குள்ளே அமையும்.

### பொருள்வயிற் பிரிவும் அவைபோல் அமையும்

**ஏனைப் பிரிவும் அவ்வயின் நிலையும். (1136)**

ஏனைய பொருள்வயிற் பிரிவும் முன்னே சுட்டிய மூன்றாண்டு அல்லது ஓராண்டிற்குள் அமையும். அவ்வயின் எனப் பொதுப்படச் சொன்னதால் முன்னே சொன்ன இரண்டும் பொருந்தும். கடல்வழிப் பிரிவும் தரைவழிப் பிரிவும் உள்ளனவாதலால் இவை இரண்டையும் கொள்ளலே பொருந்தும்.

ஏனைய பொருள் வயிற்பிரிவும், மூன்றாண்டு அல்லது ஓராண்டு அளவினதாக அமையும். கடல்வழி மூன்றாண்டும் தரைவழி ஓராண்டுமாக அமையுமெனயூகிக்கலாம்.

### தலைவன் தலைவியுடன் ஊரைவிட்டுத் தக்க இடம் சென்றும் விளையாடி மகிழ்வான்

**யாறும் குளனும் காவும் ஆடிப்**
**பதியிகந்து நுகர்தலும் உரிய என்ப. (1137)**

தலைவன் தலைவியர் ஊரைவிட்டுப் பிரிந்துபோய் ஆறுகளிலும் குளங்களிலும் (அருவிகளிலும்) நீராடியும் பூங்காக்களில் விளையாடியும் இன்பம் நுகர்தற்கும் உரியவர்கள் ஆவர்.

தலைவன் தலைவியுடன் யாறுள்ள இடம் குளமுள்ள இடம் பூங்காவுள்ள இடம் என ஊரை விட்டுச் சென்று அங்கங்கே விளையாடி இன்பம் நுகர்தற்கும் உரியன்.

**இல்லற வாழ்வின் முடிவில் ஆற்றக்கூடிய பயன் சிறந்தன செய்தல்**

**காமம் சான்ற கடைக் கோட் காலை**
**ஏமம் சான்ற மக்களொடு துவன்றி**
**அறம்புரி சுற்றமொடு கிழவனும் கிழத்தியும்**
**சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே. (1138)**

*அறநெறித்தவம்*

தொல்காப்பியரும் திருவள்ளுவரும் சொல்வது காட்டுக்கு ஓடும் தவமன்று; மூச்சைப் பிடித்து அடக்கித் தனக்கு மோட்சம் தேடும் தவமும் அன்று. சமுதாய மக்களுக்கு மன்பதைக்கு நல்லனவற்றையும் சிறந்தனவற்றையும் செய்யும் தவம் அது.

காம உணர்வு, விருப்பங்கள், ஆசைகளை எல்லாம் நன்கு அனுபவித்து நிறைவெய்திய, இவை இனி முடிவுற்றன என உண்மையிலேயே மனம் நிறைவடைந்த கடைசிக் காலத்தில், தங்கட்குப் பாதுகாவலாய் அமைந்த மக்களும் அவர்களின் மக்களொடும் நெருங்கிச் சூழ்ந்திருந்து. நாளும் அறச்செயல்களையே செய்யும் நண்பர்கள், அறிஞர்கள், சான்றோர்களாகிய சுற்றத்துடன் தலைவனும் தலைவியும் உலகிற் சிறந்தது எனப்படும் மக்கட்பணி, கல்விப்பணி, அறப்பணி முதலான அனைத்தையும் செய்து அதுவே பொது வாழ்வாய் வாழ்தல், இவ்வளவு காலமாக நடந்து கடந்து போன இல்லற வாழ்வின் பயனாகும்.

காம இன்ப நுகர்வு நிறைவுற்று முடிந்த, ஆசைகள் அகன்றன என முடிவெடுத்த கால எல்லையில், தமக்குப் பாதுகாவலாக அமைந்த மக்கள், பேரன் பேர்த்தியரோடு நெருங்கிக் கூடியிருந்து, அறம்புரிந்து வாழும் நண்பர் உறவினர் சான்றோராம் சுற்றத்துடன் சேர்ந்து, தலைவியும், உலகிற் சிறந்த அறச் செயல்களை, குறிக்கோள்களை நிறைவேற்றிப்

பணி செய்து கொண்டிருத்தல், கடந்து போன இல்லற வாழ்க்கையின் பயனாகும். இறந்ததன் பயன் – கடந்து போன வாழ்வின் பயன்.

**வாயில்கள் ஆவார் பன்னிரண்டு பேர்**

**தோழி, தாயே, பார்ப்பான், பாங்கன்,**
**பாணன், பாடினி, இளையர், விருந்தினர்,**
**கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர்,**
**யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப. (1139)**

தலைவன் தலைவியருடன் இணைபிரியாது பிணைக்கப்பட்ட வாயில்களாவார் பன்னிருவர்; தோழி, தாய், பார்ப்பான், பாங்கன், பாணன், பாடினி, இளையர் (ஏவலர்), விருந்தினர், கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர்.

தலைமக்களுக்கு மனத்துக்குகந்த வாயில்கள் இப்பன்னிருவர் ஆவர்.

**வினை முடித்துத் திரும்பும் தலைவன் வழியிடையே தங்குதல் இல்லை**

**வினைவயின் பிரிந்தோன் மீண்டுவரு காலை**
**இடைச்சுர மருங்கில் தவிர்தல் இல்லை;**
**உள்ளம் போல உற்றுழி உதவும்**
**புள்இயல் கலிமா உடைமை யான. (1140)**

*வினைமுடித்த தலைவன்*
*விரைந்து திரும்பிவருதல்*

போர் முதலிய அரசக் காரியங்களுக்காகத் தேரில் பிரிந்து போனவன், வினை முடித்துத் திரும்பிவரும் பொழுது, சுர வழியிடையே தங்குதல் என்பது இல்லை. அவனுக்கு உள்ளமெல்லாமல் அப்போது தலைவியிடம் சென்றிருக்கும். அவனது உள்ளம் போலவே, உற்றுழி உதவக் கூடியதும் புள் (பறவை) போலப் பறக்கக் கூடியதுமான ஒலிக்கும் எழுச்சிமிக்க குதிரைகளை உடையவனாதலால், அவன் விரைந்து மீள்வான்.

அரசன் பொருட்டு, போர் முதலிய வினைகள் கருதிப் பிரிந்தவள், காரியம் முடிவடைந்து, வெற்றியுடன் திரும்பிவரும்போது, பாலைநில இடைவழியில் தங்குதலென்பது இல்லை. அவனது மனம் எவ்வாறு தலைவியைத் தேடி ஓடுமோ அதுபோல, உற்றுழி உதவவல்ல, புள் (பறவை) போலப் பறந்து ஓடுகின்ற எழுச்சிமிக்க குதிரைகளை உடைமையால், தலைவன் தலைவியுள்ள ஊரை அடைந்தே நிற்பான்.

# 3. பொருளியல்

அகம் சார்ந்த மூன்று இயல்களுக்கும் பிறகு வரும் பொருளியல் அகத்திணையில் இடம் பெறும் உரிப்பொருள்களை எவ்வாறு படைக்க வேண்டுமெனக் கூறுகிறது. அவற்றில் கூறாதவற்றையும் அவற்றுக்குப் பொதுவானவற்றையும் சொல்வதால். இதனை 'ஒழிபியல்' போலக் கருதுவதும் உண்டு.

இதில் யாரிடமும் கூறாது தன் நெஞ்சிற்கோ, பேசாத பிற பொருள்களிடமோ பேசும் ஒருபாற்கூற்றுக் கூறப்படுகிறது.

தலைவியின் கூற்றிலுள்ள பண்பு நலனும், தோழி கூற்றின் வகைகளும் அவளதியல்பும் அறிவும் திறமும் விளக்கப்படுகின்றன.

களவிலும் கற்பிலும் அடங்காது இடைப்பட்ட அறத்தொடு நிலை, வரைவு கடாதல் இங்கு வரையறை பெறுகின்றன.

கூற்றுக்களில் உள்ள பொது நுட்பங்கள், கூற்றுக்கள் சில அமைவதன் காரண காரியங்கள், களவிலும் கற்பிலும் இடம்பெறும் மாந்தர் படைப்பு நெறிகள், பரத்தையர் நிலை, பருப்பொருளல்லாது இடம் பெறும் நுண் பொருள்கள் என்று இனைய பல உத்தித் திறன்கள் இதில் விளக்கப்படுகின்றன.

இலக்கியம் உலகியலிலிருந்து, எடுக்கப்பட்டுப் புனையப்படுகிறது. உலகில் நல்லதும் தீயதும் உள. இவற்றைப் படைக்கும் நெறிகள் விளக்கப்படுகின்றன. 'இறைச்சி' என்னும் நுண்ணிய கோட்பாடும் இவ்வியலில்தான் அறிமுகமாகிறது. 'உள்ளுறை' வகைகளும் விளக்கப்படுகின்றன.

இவை பல அகத்திணையியல், களவியல், கற்பியலோடு பொருத்திப் பார்க்கத் தக்கன. முதல் கரு உரி மூன்றையும் உள்ளடக்கிய, பாட்டுப்பொருள் முழுவதும் பற்றியது இது. இதிலுள்ளவற்றை. அகத்திணைப்பாடலைப் படைக்கும் நெறிமுறைகள் பற்றியவை எனலாம்.

## இயல் கருத்து நிரல்

### பாட்டுப் பொருள் கட்டமைப்பு

பாடலில் இசை ஒலிக்கு ஏற்பச் சொல், தொடர் முதலியன மாறிக் கிடந்து இசைக்கும். அவ்வாறாயினும் பொருள் இயைபுபட்டு விளங்கும்.

### ஒருபாற் கூற்று

செய்யுளில் வரும் காதலர் தம் நெஞ்சொடும் ஏனைய பொருள்களோடும் பேசுதல். இவை தமக்குத்தாமே பேசி ஆறுதலடைபவை. கேட்பவை விடைகூறா.

அறிவையும் அது உணரும் பொருளையும் பேறுபட நிறுத்தி உவமப் பெயரும் உவமிக்கப் படும் பெயரும் போலச் செயலாலும் பண்பாலும் பயனாலும் ஒன்றற்கு ஒன்று உரியனவாக உவமை வடிவப் படுத்தி இவற்றைக் கூறுவர். இவை உவமிக்க ஏற்ற இடங்களில் மட்டும் தலைவன் தலைவி இருவருக்கும் அமையும். பாற்கிளவி – ஒருவரே தமக்குத் தாம் பேசுவது. பிற பொருள்களும் தம்மைப் போல் துன்புறுவதாக எண்ணி அவற்றுடன் பேசுவதைக் 'காமம் மிக்க கழிபடர் கிளவி' என்பர்.

தலைவன் தலைவியர்க்கு, காமம் தடைப்பட்ட போது, கனவு தோன்றி, அதனுடன் பேசுவதும் உண்டு.

தன் மகள் 'உடன்போக்கில்' தன் காதலனுடன் போய் விட்டாள் எனச் சொல்லப்பட்டால், தாய்க்கும் தன் நெஞ்சொடு புலம்புதலும், பிற பொருளொடு பேசுதலும், கனவு கண்டு வருந்துதலும் உண்டு. ஒருபாற்கிளவி உண்டு என்பதாம்.

தலைவி நற்றாய் செவிலி தோழி இந் நால்வரே பெரிதும் இடம்பெறும் பெண்பாலர். இவர்கள் நட்புடன் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாத விடத்து, ஒரு பாற்கிளவி என மேற்சொல்லியபடி, தமக்குத்தாமே பேசிக்கொள்வதுமுண்டு.

குற்றமற்ற சிறப்பினையுடைய மகளிராம் இந்நால்வர்க்கு உயிருக்குயிராய்ப் பழகுதலும் நாணமும் மடப்பமும் உரியன. அதாவது இலக்கியத்தில் இத்தகைய பண்புகளுடன் இவர்கள் படைக்கப் பெறுவர் என்பதாம்.

தலைவியின் பண்புநலன்

தலைவி இலக்கியத்தில் நற்பண்பு மிக்கவளாகவே படைக்கப் பெறுவாள். பிரிவின்போது, நிறம் கருத்துப் புலம்பும்போது, தன் கண், நெற்றி, தோள் முதலான உறுப்புக்களை, அவை தாமே உணர்ந்து வருந்துவன போல, முன்னே நெஞ்சு முதலியவற்றுக்குச் சுட்டியதுபோல, கற்பனை சேர்த்துக் கூறுவாள்.

பிரிவால் உடம்பும் உயிரும் வாடியபோதும், 'இவை ஏன் இப்படி ஆயின என வருந்துவதல்லது', தலைவன் இருக்குமிடம் தேடிச் சேர்வது தலைவிக்கு இல்லை.

ஒரு பக்கத்தே இருந்து, தன் நெஞ்சத்துடன் உசாவும் போது, 'தலைவனிருக்குமிடம் போவோமா' எனக் கூறுவதுண்டு. (ஆனால் போவதில்லை.) சிலபோது தோழியுடனும் இவ்வாறு வினவுவாள் என்பர் இளம்பூரணர்.

மடன் (மடம்) என்பது இளமைத் தன்மை; அதிகம் பேசாமை; தெரிந்தும் தெரியாதாள் போலிருத்தல். தலைவி, தன்னிடம் தலைவன் தன் குறைபாட்டை மறைக்க முயலும்போதும் அவன்பால் ஆசை மிகும்போதும் தவிரப் பிற இடங்களில் எல்லாம் மடப்பத்துடன் நடந்து கொள்வாள். அந்த இரண்டு இடங்களில் மடப்பத்தைக் கைவிட்டு, எதிர்மொழி கூறிப் பேசுவாள் என்பதாம்.

களவு வெளிப்படுத்தல்

தோழி அறத்தொடு நிற்றல்

அறத்தொடு நிற்கும் சூழல் வந்து, தக்க காலமென அறிந்தவழியல்லது தோழி அறத்தொடு நிற்கும் முறைமை உடையவள் அல்லள்.

தோழி ஏழுவகையாகத் தாயர்க்குத் தலைவியின் களவு ஒழுக்கத்தை வெளிப்படுத்துவாள். மிக உயர்ந்தவனாயினும் எளிமையாய் நடப்பவன் என்பாள். அவனைப் புகழ்வாள். அவன் தலைவி மீது கொண்ட வேட்கையைச் சொல்வாள், தாயரிடம் அவர்களே முடிவு கூறுமாறு வினவுவது போல் பேசுவாள், ஒரு காரணத்தால் இது நிகழ்ந்ததெனக் கூறுவாள்; இருவரும் எதிர்பாராது எதிர்ப்பட்டனர் என்பாள்; முன்பு கூறியவற்றில் பொய்யாகப் புனைந்தும் பேசுவாளாதலால் இறுதியில் நடந்த உண்மையை அப்படியே சொல்வதுடன் கூட இவை ஏழுவகையாகும்.

தக்கசமயம் நேர்ந்தாலன்றித் தோழி கூறாள். அதனால் அக் களவுபற்றி, வேட்கை மிக்க தலைவியின் உடல் வேறுபாடு முதலியன கண்டும் தாயர் தாமே அறிதலுண்டு.

தோழியும், பெண் பாலரும் மிகுந்த நாகரிகச் சிறப்புடன் படைக்கப் பெறுவர். அடக்கமுடைமை, மனத்தை ஒருவழி நிறுத்தும் ஆற்றலுடைமை, செவ்விய பண்புடைமை, சொல்வன்மை, அறிவுக் கூர்மை, அரிய தன்மை என இவை பெண்பாலரிடம் காணப்படும்.

**தலைவனிடம் தோழி வரைவு கடாதல்**

தலைவன் வரும் நேரம், வழி, பெற்றோர் காத்தல் ஆகிய இவற்றில் வழுவினால் நேரும் குற்றத்தைச் சொல்லித் தோழி, விரைந்து திருமணம் செய்து கொள்ளத் தலைவனிடம் வேண்டுவாள். தலைவனை இரவில் வா, பகலில் வா, வராதே என இதுபோல் அலக்கழிப்பாள். குற்றமுண்டாகும்படியான இவை போல்வன பலவற்றையும் அவள் கூறுதல், விரைவில் திருமணத்தை முடிக்க வேண்டுமெனும் வேட்கையாலே ஆகும்.

திருமணம் பற்றி வேட்கையைச் சுற்றி வளைத்துச் சொல்லாமல், நேரடியாகவே (திருமணம் செய்து கொள்க) என வெளிப்படச் சொல்லுவாள், தோழி. இதுவும் மரபுப்படியாக அவளுக்குரியதே.

**வரைவை நோக்கிய சில படைப்புநெறிகள்**

தலைவர்கள் தேரிலும் யானையிலும் குதிரை மீதும் பிறவற்றின் மீதும் ஏறி, ஊர்ந்து இயங்குதற்கும் உரியவர்களே.

கண்கள் என்னைத் தின்றன; நெற்றியைப் பசலைநிறம் உண்டது என இவ்வாறு உண்ணுதற்குரியதல்லாத பொருள்களை, உண்டன போலக் கூறுதலும் ஒரு மரபே.

தலைவியைப் பெற்றோர் காக்கின்ற பாதுகாப்பு மிகக் கூடுதலாவதால், இனி வரைதலே உறுதிப் பொருளாகும் என்று சொல்லுதலும் நீக்கப்படாது.

அங்ஙனம் 'காப்பு' (இற்செறிப்பு) மிகும்போது, தோழி, அன்பு, அறம், இன்பம், நாணம் எனும் இவற்றைக் கைவிட்டும் கற்பு ஒழுக்கம் பேணுதல் – திருமணம் முடிக்க முயலுதல் பொருந்தும்; தவறாகாது.

பொருள் தேடி வந்து மணப்பதாகச் சொல்லும் தலைவனிடம் பாலைவழி

கொடிது எனக் கூறுதலும் நீக்கப்படாது. திருமணம் முடிக்காது சுரவழி போகவேண்டாம் என்பது இது.

### அக இலக்கியம் படைக்கும் பொது நெறிமுறைகள்

உயர்ந்த பெரியவர்கள் பாடிய பாடல்களும் உலகவழக்கையே அடிப்படையாகக் கொண்டன. ஆதலின் இலக்கியம் என்பது உலக வழக்கு வழிப்படுதலே அதன் கடமையாகும்.

உலக வழக்கில் அறத்தின் நீங்கியனவும் நடக்கின்றன. அவை பொருளுக்குச் சுவைதரவும் விறுவிறுப்புத் தரவும் பயன்பட வருமாயின், அவற்றை உலக வழக்கே எனக் கொண்டு, இலக்கியத்தில் ஆளுதலும் பழியுடையது அன்று.

ஆனால் அங்ஙனம் அறங்கடந்த பொருளினுள், ஏற்புடைய பொருள் வகைகளை மட்டும், மானுடர் நாணத்தின் நீங்காதபடி, நல்வழிப்படுத்திப் படைக்க வேண்டும்.

### அன்புடன் அழைத்தல்

முறைப் பெயர்களில் ஏட, எல்லா, போல்வனவற்றை, உறவு கருதாது, நட்புரிமையும் அன்புரிமையும் கருதி அழைப்பதுண்டு. இஃது இரு பாலாரிடத்தும், நிலைத்து வழங்கி வருவதாகும். தோழி தலைவியை 'அன்னாய்' என அழைப்பது போல்வது இது.

### தோழி, தலைவியிடத்திலிருந்து, தானே அவளாகக் கொண்டு பேசும் உரிமை

தோழி, தலைவியின் அழகு முதலியவற்றைத் தன்னுடையது போலச் சொல்லும் கூற்றுக்கள் பலவுள. தலைவிக்காகப் பேசும் அவள், 'என் அழகைத் திரும்பத்தா', 'என் தோள்களை மெலிய வைத்தனை' என இவ்வாறு உரிமையோடு பேசுவாள். அழகு முதலியன தாய உரிமைப்படி ஒருவர் மற்றவரிடமிருந்து அடையக் கூடியன அல்ல; ஒருவர் தந்து மற்றவர் பெறக் கூடியன அல்ல; முயற்சி செய்து அடையக் கூடியனவுமல்ல; பகைமையால் பிரித்து எடுத்துக் கொள்ளப்படவும் இயலாது. ஆயினும் 'எம் அழகு', 'எம் பொலிவு' என வரும், உரிமையுடன் கூடிய பேச்சு, பொருத்தமற்றனவேயாயினும், பொருந்தி வருமிடங்கள் அகப் பாடல்களில் உள.

### உலக வழக்கிற்கு ஒரு விளக்கம்

'உலக வழக்கு' இலக்கிய அடிக்கருத்தாகுமென்றால் எங்கோ, யாரோ ஒருவர் மாட்டு நிகழ்வது, எப்படி உலகப் பொதுவழக்காகும்? ஆகும். ஒருவரிடம் நிகழும் கூற்று, உலகிலுள்ள அவர் போன்ற அனைத்து மக்களிடத்தும் வருவதாகக் கொள்வதே 'உலக வழக்கு' எனப்படும்.

### காம இன்ப உணர்வு

உலகிலுள்ள ஓரறிவுயிர் முதல் எல்லாவுயிர்க்கும் 'இன்பவுணர்வு' என்பது உண்டு. சிற்றெறும்பு முதல் யானைவரை உண்டு. மலர்களில் மொய்க்கும் வண்டுகளுக்கு மட்டுமன்று, மலர்களுக்கும் உண்டு. ஓரறிவுயிர் முதல் வரும் இவ்வின்ப உணர்வு, அவ்வுயிர்களின் பிறப்பிலேயே தானாக விரும்பி பொருந்தி வருவதாகும். காம இன்பவுணர்வு மக்களுக்கே அன்றி, மற்றைய உயிர்களுக்கும் உண்டு.

### நான்கு நிலத்தவர்களுக்கும் பரத்தமை ஒழுக்கம் உண்டு

பரத்தமை ஒழுக்கம் மருத நிலத்திற்கு மட்டுமன்று; நான்கு நிலத்தவர்க்கும் உண்டு. பாலை என்பது இவ்வாறு நான்கு நிலத்தவர்க்கும் பொதுவாயினும், முல்லை குறிஞ்சி திரிந்த பாலை என நிலத்திரிபு உண்டு. ஆனால் பரத்தமைப் பாடல்கள் மருதத்திற்கே உரியன. இதில் நிலத்திரிபு இல்லை.

தலைவி உரிமை பெற விரும்பியும் பிரிதலச்சத்தாலும் அலர் வெளிப்படுதலாலும் உடன் போக்கை வற்புறுத்தவும் திருமணத்தை வற்புறுத்தவும் நேரே கூறி முயலுமிடங்கள் சிலவுள என்பதாம்.

தலைவி தன் வருத்த மிகுதியைச் சுட்டிக் கூறும் அகப் பாடல்களில், இவ்வுலக வாழ்க்கையில் இரக்கமாகிய அவல உணர்வு மிக்குத் தோன்றும். மனைவி உயர்வும் தலைவன் அவளுக்குப் பணிவதும் ஆகிய இரண்டும் எண்ணிப் பார்க்குமிடத்து, தலைவியின் புலவிக்காலத்தில் உரியனவாகும்.

குடும்ப வாழ்வு நிகழும் சிறப்புடைய காலத்தில், காம இன்ப வேட்கை மிகுதியால், தலைவன் தலைவி இருவரும் ஒருவரை ஒருவர் புகழும் பெருந்தன்மையை யாரும் குறை கூறார். களவியல் தலைவன் நலம் பாராட்டுவான். கற்பில் இருவரும் நலம் பாராட்டிக் கொள்வர்.

### இறைச்சிப் பொருள் இலக்கணம்

இறைச்சி என்பது கருப்பொருள்; உயிரினம், மேலும் உயிரினத்தின்

பாலுணர்வும் பாலுறவும். இவ்வுயிரினப் பாலுணர்வுக் காதற்காட்சிகள், உரிக்குப் புறத்தே வரும். அதாவது திணைக்கு உரிப்பொருள் என்ற, மக்களின் உரிப் பொருட் செய்திகளுக்குப் புறத்தே, அவற்றுக்குத் துணையாக வரும். (யானை பிடிக்கு உணவூட்டிப் பின்னுண்ணும் என்னும் இறைச்சி பிரிந்த கணவன் விரைவில் திரும்பி மனைவியைப் பேணவேண்டுமெனும் உரிப்பொருட் செய்திக்குப் புறத்ததாய், அதை வலியுறுத்தத் துணை செய்யும்.)

இறைச்சியினால் கிடைக்கும் பிறிதொரு 'தொனிப்' பொருளும் உண்டு. அது அகப்பாட்டின் திறமறிந்து அதன் இயல்புடன் சேர்த்து அறியவல்லவர்க்குப் புலனாகும்.

உயிரினக் காதல் காட்சிகளாகிய 'அன்புறுத'ற்குத் தகுந்த கருத்துக்களை, இறைச்சியில் சுட்டலுமுண்டு. அது தலைவி வருந்திய பொழுது, தலைவன் இக் காட்சிகளைக் கண்டு விரைவில் திரும்பி விடுவான் என வற்புறுத்துதற்குப் பயன்படும்.

தலைவன் தலைவியை வெகுவாகப் பாராட்டினால் அவன் பிரியப் போகிறான் என்பது பொருள். தலைவியைப் பிரிந்து பொருள் தேடப் போகிறானோ எனும் அச்சம்; அல்லது போர் முதலிய வினை கருதிப் போகப் போகிறானோ எனும் அச்சம். தலைவன் பாராட்டு இவ்அச்சங்களை உறுதிப்பட உணர்த்தும்.

கற்பு வழிப்பட்ட மனைவி, பரத்தையைச் சிலசமயம் உயர்த்திப் புகழ்ந்து பேசுவாள். அதற்குக் காரணம் அவளுடைய உள்ளத்தினுள் இருக்கும் ஊடலேயாகும்.

தலைவி, தலைவனால் விரும்பப்பட்டாள் என ஐயுறும் மற்றொருத்தியின் குணங்கள் இவை எனக் கூறுவாள். அதன்வழி தலைவனுக்கும் அவளுக்கும் உள்ள தொடர்பினை, அவன்பால் ஏற்படும் குறிப்பின் வழி அறிவாள்.

தலைவி தலைவனை மகிழ்ச்சியும் ஊடலும் உள்ள சமயத்திலேயே கடிந்து பேசுவாள். மற்றபடி தலைவியால் தாம் துன்பம் அடைவதாகப் பரத்தையர் கூறினாலும் அவர்களிடம் நடந்தவற்றை உண்மையாகத் தலைவி அறிந்தாலும் தலைவனை எதிர்ப்பட்ட பொழுது அவனிடம் நேர்நின்று கடிந்து பேசும் முறை இல்லை.

மகிழ்ச்சியும் புலவியுமுள்ள சமயங்களைத் தவிர்த்துக் கடிந்து பேசாள் என்பதனால், அந்நேரங்களில் கடிந்து பேசுவாள் என்பது பெறப்படும்.

தலைவன் வருவதாகச் சொல்லிய கார்காலம் முதலிய பருவங்கள் தொடங்கியதும், தலைவி கையற்று வருந்துவாள். அப்போது, அப்பருவங்கள் வந்து முடிந்துவிட்டது போலப் பேசுவாள். அவளது இளமையால் அறியாத் தன்மையும் வருத்த மிகுதியும் பருவம் முடிந்துவிட்டதோ எனும் மனமயக்கமும் பருவ அறிகுறிகள் மிகுதியாகுதலும் என அந் நான்கு நிலைமையில் அக் கூற்றுக்கள் தலைவிபால் நிகழும்.

தோழி தலைவனைத் திருமணம் செய்து கொள்ளுமாறு தூண்டுவதையே கருத்தாகக் கொண்டிருப்பாள். களவை நீட்டிக்க விட மாட்டாள். களவுப் புணர்ச்சிக்காக, இரந்து தன்னிடம் குறை தீர்க்க வேண்டுகிற தலைவனைத் தோழி, மிகவும் விலக்கி இசையாது தடுப்பாள். உண்மையான தடைகளையும் பொய் கலந்த தடைகளையும் கூறுவாள். நல்ல சொற்களுடன் நயமாய்ப் பேசியும் பலவகையாகக் கற்பித்துப் பேசியும் தடுப்பாள்.

மிக உயர்வாக எதிர்மறுத்துப் பேசுதலும் தெய்வ மகளோ என ஐயப்பட்டுப் பேசுதலும் ஆண்களுக்கு உளவாகும். மகளிர் அவ்வாறு பேசார்.

ஆயினும் தோழி, தலைமக்களுக்கு ஏற்படும் துன்பங்களை வராமல் காத்தல் அவளது இயல்பாதலின், அவளிடம் அறிவுத் திண்மை தோன்றப் பேசும் பான்மை உளதாகும்.

தோழி, தன்பால் உயர்வு தோன்றப் பேசுதற்கும் உரியவள்.

தோழி முதலிய வாயில்கள் வெளிப்படையாகவே, தங்கள் கருத்துக்களைக் கூறுவர். அவ்வாறு கூறுதலில் தவறில்லை.

## உள்ளுறை

உள்ளுறை உவமை பற்றி அகத்திணையியலில் கூறினார் (993, 994, 995). அஃது உள்ளுறை வகைகளில் ஒன்றே. குற்றமற்ற சிறப்பினையுடைய உள்ளுறை ஐந்து வகைப்படும்; உடனுறை உள்ளுறை, உவம உள்ளுறை அல்லது உள்ளுறை உவமம், சுட்டு உள்ளுறை, நகைஉள்ளுறை, சிறப்பு உள்ளுறை என்பன அவை.

உள்ளுறை, மேலே தெரியும் பொருளைத் தவிர்த்து, அதன் உள்ளே அதற்கு இணையாகப் பொருந்தியுள்ள பிறிதொரு பொருளையும் உய்த்துணருமாறு தரும். அதனால் முடிவற்ற சிறப்பினை உருவாக்கும் இன்பத்தை, தன்பால் கொண்டு மகிழ்ச்சியை விளைவிக்க வருதலும் அவ்வுள்ளுறையைப் படைத்தலின் கருத்தாகும்.

மகங்கலச் சொற்கள், வசைச் சொற்கள், மாறுபாடில்லாத ஆண்மையை உணர்த்தும் சொற்கள் ஆகியவையும், முன்பு கூறிய இயல்பின்படி 'உள்ளுறை' யாகச் சொல்லப்படும். உருவகம் போலச்சொல்லும் மரபு இது. நேரே வெளிப்படையாக அமையா.

சிறப்பு உள்ளுறை சினமிகுதி, அறியாமை, பொறாமை, வறுமை ஆகிய நான்கு வகைக் கருத்தையும் மிகுத்துக் கூறவரும்.

தலைவி தோழியையும் தோழி தலைவியையும் 'அன்னை' என அழைத்துக் கொள்வதுண்டு. அவர்கள் இருவரும் தலைவனை 'என் ஐ' (என் தலைவன்) என்பதுண்டு. இவை தொன்மையான மரபுப்படி சொல், எழுத்து இலக்கணங்களில் இடம் பெறாதவை, எனினும் உலக வழக்குக் கருதி ஏற்கப்படும். (ஒப்பு நோக்குக. நூற்பா. 1166, 1167)

உலகில் நுண்பொருள்களும் உள. அவை அருவப் பொருள்கள். கண்ணுக்குத் தெரியாதவை. கருத்தால் மட்டுமே உணர முடியும். அவை யாவன : குணஒப்புமையும் அறிவொப்புமையும் போல்வன. அச்சவுணர்வு (உரு), வெறுப்புணர்வு. கற்பு – மனவுறுதி, சொல்தவறாமை பற்றிய மனநிகழ்ச்சி. ஏர் – புதிய பொலிவு. எழில் – ஒட்டுமொத்த அழகு. சாயல் – மயில்போன்ற அழகு என்பது சாயலழகு. நாணவுணர்வு. மடம் – மடப்பம் இளமையைக் காட்டும். நோய் – துன்பவுணர்வு. காம வேட்கை அல்லது விருப்ப உணர்வு. நுகர்வு – அனுபவித்தலால் தோன்றும் இன்பவுணர்வு. அவ்வாறு வரும் சொற்கள் எல்லாம் தொன்று தொட்டு நிலைநாட்டிய மரபால் அல்லது நாட்டியத்தில் மெய்ப்பாடாக மட்டுமே காட்டும் மரபால், மனத்தால் உணரினல்லது, கண்களுக்குப் புலனாகக் காட்ட இயலாதவை ஆகும்.

அவை கட்புலனாகாததால் 'இல்லாதவை' எனல் கூடாது. ஏனெனில் தேவ உலகத்தும் அலைமோதும் கடல் சூழ்ந்த இவ்வுலகத்தும், அந் நுண்பொருள்கள் இல்லாத காலமே இல்லை. எங்கும் நிறைந்து உள்ளவை அவை.

# பொருளியல்

## செய்யுளில் சொற்கள் வேறுபட அமையினும் பொருள் வேறுபடாமை

**இசைதிரிந்து இசைப்பினும் இயையுமன் பொருளே**
**அசைதிரிந்து இயலா என்மனார் புலவர்.** **(1141)**

பாட்டுப் பொருள் கட்டமைப்பு

பாடலில் இசை ஒலிக்கு எற்பச் சொல், தொடர் முதலியன மாறிக் கிடந்து இசைக்கும். அவ்வாறாயினும் பொருள் இயைபுபட்டு விளங்கும். பாடலில் வரும் அசையும் சீரும் முதலானவை திரிந்து அமையா. பாட்டுப் பொருள் உள்பொருளாயோ, இடம் மாறியோ சொற்றொடர் அமைப்பில் வேறுபடினும் கருத்து இணைத்து உணரப்படும். பாட்டின் கட்டமைப்பு திரிதல் கூடாது.

செய்யுளில் உரைநடை போல் வாக்கியமாகத் தொடர்புபடப்பொருள் அமையாது. இசை திரிந்து இசைக்கும் - பா ஓசைக்கு ஏற்பச் சொல், தொடர்கள் மாறிக் கிடந்து இசைக்கும். ஆயினும் சொல்ல வந்த பொருள் வேறுபடாது. அசை திரிந்து இயலா - பாடலின் சீரும், அசையும் திரியாது கட்டமைப்புடன் இருக்கும்.

### ஒருபாற் கூற்று

## தலைவனும் தலைவியும் காம மிகுதியால், பேசாப் பொருள்களை விளித்து, தமக்குத் தாமே பேசிக்கொள்வது

**நோயும் இன்பமும் இருவகை நிலையில்**
**காமம் கண்ணிய மரபிடை தெரிய**
**எட்டன் பகுதியும் விளங்க, ஒட்டிய**
**உறுப்புடை யதுபோல் உணர்வுடை யதுபோல்**
**மறுத்துரைப் பதுபோல் நெஞ்சொடு புணர்த்தும்**
**சொல்லா மரபி னவற்றொடு கெழீஇச்**
**செய்யா மரபின் தொழிற்படுத்து அடக்கியும்**
**அவரவர் உறுபிணி தமபோற் சேர்த்தியும்**
**அறிவும் புலனும் வேறுபட நிறீஇ**

**இருபெயர் மூன்றும் உரிய வாக**
**உவம வாயிற் படுத்தலும் உவமம்**
**ஒன்றிடத்து இருவர்க்கும் உரியபாற் கிளவி. (1142)**

*ஒருபாற் கூற்று*

செய்யுளில் வரும் காதலர் தம் நெஞ்சொடும் ஏனைய பொருள்களோடும் பேசுதல். இது தமக்குத் தாமே பேசி ஆறுதலடைபவை. கேட்பவை விடைகூறா.

தன் நெஞ்சுடன் பேசுவது ஒரு வகை. அது துன்பக் காலத்தும் இன்பக் காலத்தும் பேசப்படும். தன் காம உணர்வு கருதிய பொருள் தெரியுமாறு, நகை அழுகை முதலாய எட்டு மெய்ப்பாடுகளும் விளங்க, தம் நெஞ்சு பொருந்திய உறுப்புடையது போலவும் உணர்வுடையது போலவும் மறுத்துரைப்பது போலவும் எண்ணி அதனுடன் பேசுவர். அதவாது அந்நெஞ்சைக் கண்ணாற்கண்டு, காதால் கேட்டுத் தம்முடன் பேசுவது போல் கருதிப் பேசுவது இது.

விடை சொல்லாத - பேசாத பறவை, விலங்கு, கடல், மதி முதலியவற்றோடுங் கூடப் பொருந்தி, அவை செய்யாத செயல்களைச் செய்ததாகக் கற்பித்துப் பேசுவர். உலகில் அவரவர் அல்லது அவையவை கூறும் துன்பத்தைத் தம் துன்பம் போற் சேர்த்துப் பேசுவது இயல்பு. அவையும் துன்புறுவதாக நினைப்பது இது. (கடலே, என்னைப் போல் வருந்துகிறாயே, நீயும் யாரையும் பிரிந்துள்ளாயோ என வினவுதல் போல்வன.)

அறிவையும் அது உணரும் பொருளையும் வேறுபட நிறுத்தி, உவமப் பெயரும் உவமிக்கப்டும் பெயரும் போல செயலாலும் பண்பாலும் பயனாலும் ஒன்றற்கு ஒன்று உரியனவாக உவமை வடிவப் படுத்தி இவற்றைக் கூறுவர். இவை உவமிக்க ஏற்ற இடங்களில் மட்டும் தலைவன் தலைவி இருவருக்கும் அமையும். பாற் கிளவி - ஒருவரே தமக்குத் தாம் பேசுவது. பிறபொருள்களுடன் பேசுவதைக் 'காமம் மிக்க கழிபடர் கிளவி' என்பர். (படர் - துன்பம்).

காமம் - உடலுறவு இன்பம். காமம் கருதித் தோன்றும் நோய் - துன்பம். எட்டன் பகுதி - நகை, அழுகை, இளிவரல், மருட்கை (வியப்பு), அச்சம், பெருமிதம் (வீரம்), வெகுளி, உவகை என்ற எட்டு மெய்ப்பாடுகள். இவை தோன்றுமாறு தம் நெஞ்சுடன் பேசுவர். அதற்கு உறுப்பு இருப்பது போலவும் உணர்வு இருப்பது போலவும் தம் கருத்தை அது மறுத்துப் பேசுவது போலவும் நெஞ்சை விளித்துப் பேசுவர். ஆற்றாமை மிகுதியின் அறிகுறி அது. அதுமட்டுமன்றி, பேசாதனவாகிய பறவை, விலங்கு, மரம், கடல், கானல் (கடற்கரைச் சோலை) இவற்றுடனும் பேசுவர். அவை செய்யாதவற்றைச் செய்தது போலவும் பேசாதனவற்றைப் பேசியது

போலவும் கற்பனை செய்து பேசுவர். பிறர் உறும் துன்பங்கள் தாம் அடைந்தவை போல்வதாகக் கூறித் துன்புறுவர். தமது அறிவையும் அதனால் அறியப்படும் பொருளையும் வேறு வேறாக நிறுத்தி, அவற்றை உவமையாகவும் உவமிக்கப்படும் பொருளாகவும் கொண்டு, தொழில், பண்பு, பயன் மூன்றாலும் உவமித்துத் தம் வருத்தத்தை வெளிப் படுத்துவர். இவை தலைவன் தலைவி இருவர்க்கும் இவ்வாறு ஒப்பிட்டுப் பேசப் பொருத்தமானவற்றில் மட்டும் ஒருபாற் பேச்சாக அமையும். அவர் அவர் உறுபிணி மட்டுமன்றி அவை அவை படும் துன்பமும் தமது போல் இருப்பதாக நினைப்பர். பாற் கிளவி - ஒருவரே பேசுவது. கேட்பதற்கு யாருமில்லை; கேட்டதை உணர்ந்து பேசும் இயல்புமில்லை. இஃது ஓர் உளவியல். காமம் மிக்க கழிபடர் கிளவி என்பர்.

### தலைவன் தலைவியர் கனவு கண்டு வருந்துதல் உண்டு

**கனவும் உரித்தால் அவ்விடத் தான.** **(1143)**

தலைவன் தலைவியர்க்கு, காமம் தடைப்பட்ட போது, கனவு தோன்றி, அதனுடன் பேசுவதும் உண்டு.

அவ்விடத்தான - அங்ஙனம் காமம் தடைப்பட்டபோது.

### உடன்போக்கை அறிந்த நற்றாயும் கனவுகண்டு வருந்துதலுண்டு

**தாய்க்கும் உரித்தாற் போக்குடன் கிளப்பின்** **(1144)**

தன் மகள் 'உடன்போக்கில்' தன் காதலனுடன் போய் விட்டாள் எனச் சொல்லப்பட்டால், தாய்க்கும் தன் நெஞ்சோடு புலம்புவதும், கனவு கண்டு வருந்துதலும் உண்டு. ஒரு பாற் கிளவி உண்டு என்பதாம்.

போக்குடன் - உடன்போக்கு. கிளப்பின் - சொல்லப்பட்டு அவள் அறியலுற்றால்.

### ஒருவருக்கொருவர் நட்பொடு பழகாத பிற சூழல்களில் தனித்துப் பேசுதலுண்டு

**பால்கெழு கிளவி நால்வர்க்கும் உரித்தே**
**நட்பின் நடக்கை ஆங்கலங் கடையே.*** **(1145)**

---

* நச்சர். இதனை இரண்டு நூற்பாவாகக் கொண்டார். இங்கு பிற உரைகளின்படி ஒரே நூற்பாவாகக் கொள்ளப்பெற்றது.

தலைவி நற்றாய் செவிலி தோழி - இந் நால்வரே பெரிதும் இடம் பெறும் பெண் பாலர். இவர்கள் நட்புடன் ஒருவருக்கொருவர் பேசிக்கொள்ளாத விடத்து, ஒருபாற்கிளவி என மேற்சொல்லியபடி, தமக்குத் தாமே பேசிக் கொள்வர். (தலைவனும் தனக்குத்தானே பேசுமிடங்கள் சங்கப் பாடல்களில் காணப்படுகின்றன)

பால் கெழு கிளவி - ஒரு பாலரே தனித்துப் பேசுவது. நால்வர் - தலைவி, தோழி, நற்றாய், செவிலித்தாய், ஆங்கலங்கடை - நட்புடன் ஒருவருக்கொருவர் பேசாத விடத்து.

## தலைவி, தோழி, நற்றாய், செவிலித்தாய் நால்வர்க்கும் உரிய நற்பண்புகள்

## அகமாந்தர் படைப்பில் இவை பேணப்படும்

**உயிரும் நாணும் மடனும் என்றுஇவை**
**செயிர்தீர் சிறப்பின் நால்வர்க்கும் உரிய. (1146)**

குற்றமற்ற சிறப்பினையுடைய மகளிராம் இந்நால்வர்க்கும் உயிருக்குயிராய்ப் பழகுதலும் நாணமும் மடப்பமும் உரியன. அதாவது இலக்கியத்தில் இத்தகைய பண்புகளுடன் இவர்கள் படைக்கப் பெறுவர் என்பதாம்.

உயிருக்குயிராய்ப் பழகுதல், நாணமுடைமை, மடன் எனும் மூன்று. செயிர் - குற்றம். நால்வரும் அகவொழுக்கத்தில் இத்துணைப் பண்புடன் நடந்து கொள்வர். மடன் - தெரிந்தும் தெரியாதவர் போலிருக்கும் அடக்கமுடைமை.

## அந் நால்வருள் தலைவியின் பண்புநலன்

## இலக்கியப் படைப்பில் வரும் தலைவி

**வண்ணம் பசந்து புலம்புறு காலை**
**உணர்ந்த போல உறுப்பினைக் கிழவி**
**புணர்ந்த வகையிற் புணர்க்கவும் பெறுமே. (1147)**

தலைவி இலக்கியத்தில் நற்பண்புகள் மிக்கவளாகவே படைக்கப் பெறுவாள். பிரிவில் நிறம் கருத்துப் புலம்பும் போது தன் கண், நெற்றி, தோள் முதலான உறுப்புக்களை, அவை தாமே உணர்ந்து வருந்துவன போலச் சொல்வாள். முன்னே நெஞ்சு முதலியவற்றுக்குச் சுட்டியது போல, கற்பனை சேர்த்துக் கூறுவாள்.

வண்ணம் - மேனி நிறம். புலம்புறு காலை - பிரிவால் தனித்து வருந்தியிருக்கும்போது. உறுப்பினை உணர்ந்த போல - நெற்றி, கண்,

தோள், முலை போலும் உறுப்புக்கள் தன்னிலும் முன்னதாகப் பிரிவுத் துயரை உணர்ந்து வருந்தின என்பது போல. புணர்ந்த வகையில் - பொருந்திய வகையில்; (கூந்தலோ, செவியோ உணர்ந்ததாகப் பாடுவதில்லை.) புணர்க்கவும் பெறும் - புணர்த்திப் பேசப்படும்.

**தலைவனைத் தானாகச் சென்று சேர்தல்**
**தலைவிக்கு இயல்பன்று**

**உடம்பும் உயிரும் வாடியக் காலும்**
**என்உற் றனகொல் இவையெனின் அல்லது**
**கிழவோற் சேர்தல் கிழத்திக்கு இல்லை. (1148)**

பிரிவால் உடம்பும் உயிரும் வாடிய போதும், இவை ஏன் இப்படி ஆயின என வருந்துவதல்லது, தலைவன் இருக்குமிடம் தேடிச் சேர்வது தலைவிக்கு இல்லை.

*தலைவியின் பண்பு நலன்கள்*

என் உற்றன - இவற்றுக்கு என்ன வந்தது என்று உடம்பு உறுப்புக்களையும் உயிரையும் நோவாளே தவிரத் தலைவனை நோவதில்லை. சேர்தல் - தலைவன் இருக்குமிடம் தேடிப் போதல்.

**தன் நெஞ்சொடு பேசும்போது மட்டும்**
**அவன் இருக்குமிடம் போவோமா என்பாள்**

**ஒரு சிறை நெஞ்சமொடு உசாவுங் காலை**
**உரிய தாகலும் உண்டென மொழிப. (1149)**

ஒரு பக்கத்தே இருந்து, தன் நெஞ்சத்துடன் உசாவும் போது, 'தலைவனிருக்குமிடம் போவோமா' எனக் கூறுவதுண்டு. (ஆனால் போவதில்லை.) சிலபோது தோழியுடனும் இவ்வாறு வினவுவாள் என்பர் இளம்பூரணர்.)

ஒரு சிறை - ஒருபுறம் தனியிடத்தில், உசாவுதல் - போவோமா என வினவுதல். நெஞ்சுக்கு ஆறுதலே தவிர, உண்மையில் போவதில்லை. அது பெண்மைக்கு இழுக்கு. தோழியுடனும் இவ்வாறு வினவுவள் என்பர்.

**தலைவி அடக்கத்தைக் கைவிட்டுத் தலைவனிடம் பேசும்**
**இடங்கள்**

**தன்வயின் கரத்தலும் அவன்வயின் வேட்டலும்**
**அன்ன இடங்கள் அல்வழி எல்லாம்**
**மடனொடு நிற்றல் கடன்என மொழிப. (1150)**

மடன் (மடம்) என்பது இளமைத் தன்மை; அதிகம் பேசாமை; தெரிந்தும் தெரியாதாள் போலிருத்தல். தலைவி, தன்னிடம் தலைவன் தன் குறைபாட்டை மறைக்க முயலும் போதும் அவன்பால் ஆசை மிகும் போதும் தவிரப் பிற இடங்களில் எல்லாம் மடப்பத்துடன் நடந்து கொள்வாள். அந்த இரண்டு இடங்களில் மடப்பத்தைக் கைவிட்டு, எதிர்மொழி கூறிப் பேசுவாள் என்பதாம்.

மடன் - அறிந்தும் அறியாதாள் போல் இருத்தல். மடன் அழிதல் - அம்மடப்பத்தைக் கைவிட்டுப் பேசுதல். தன்வயின் கரத்தல் - தலைவன் பரத்தமை ஒழுக்கத்தைத் தன்னிடம் மறைக்கும் போது எதிர்த்துப் பேசுவாள். அவன் வயின் வேட்டல் - தலைவன்பால் ஆசை மிகும்போது கூற்றாலும் குறிப்பாலும் வெளிப்படுத்துவாள்.

**அறத்தொடு நிற்கவேண்டிய கட்டாயச்சூழல் வந்தாலல்லது,**
**தோழி அறத்தொடு நிற்க மாட்டாள்**

**அறத்தொடு நிற்கும் காலத்து அன்றி**
**அறத்தியல் மரபிவள் தோழி என்ப. (1151)**

*களவு வெளிப்படுத்தல்*
*தோழி அறத்தொடு நிற்றல்*

அறத்தொடு நிற்கும் சூழல் வந்து, தக்க காலமென அறிந்தவழியல்லது தோழி அறத்தொடு நிற்கும் முறைமை உடையவள் அல்லள்.

காதலித்தவனையே மணஞ் செய்து கொள்வதுதான் அறம், கற்பு. வேறொருவர் மணம் முடிக்கவரினும் உயிரிழப்பது போல் பிரிவுத் துன்பம் மிகினும் தலைவி உணர்த்துவதன் பேரில் தோழி செவிலிக்கோ, நற்றாய்க்கோ களவை வெளிப்படுத்துவது இது. காலத்து அன்றி - அதற்கேற்ற காலம் வந்தாலல்லது. அறத்தியல் மரபு - களவை வெளிப்படுத்தி, கற்பைக் காக்கும் மரபுகளின்படி.

**முற்கூறிய அறத்தியல் மரபு இதுவென்பது**
**தோழி அறத்தொடு நிற்கும் வழிவகைகள்**

**எளித்தல், ஏத்தல், வேட்கை உரைத்தல்,**
**கூறுத லுசாஅதல், ஏதீடு, தலைப்பாடு,**
**உண்மை செப்பும் கிளவியொடு தொகைஇ**
**அவ்வெழு வகைய என்மனார் புலவர். (1152)**

தோழி ஏழுவகையாகத் தாயர்க்குத் தலைவியின் களவு ஒழுக்கத்தை வெளிப்படுத்துவாள்; மிக உயர்ந்தவனாயினும் எளிமையாய் நடப்பவன் என்பாள்.

அவனைப் புகழ்வாள். அவன் தலைவிமீது கொண்ட வேட்கையைச் சொல்வாள். தாயரிடம் அவர்களே முடிவு கூறுமாறு வினவுவதுபோல் பேசுவாள், ஒரு காரணத்தால் இது நிகழ்ந்ததெனக் கூறுவாள்; இருவரும் எதிர்பாராது எதிர்ப்பட்டனர் என்பாள்; முன்பு கூறியவற்றில் பொய்யாகப் புனைந்தும் பேசுவாளாதலால் இறுதியில் நடந்த உண்மையை அப்படியே சொல்வதுடன் கூட இவை ஏழுவகையாகும்.

அருமைமிகு தலைவன் எளியனாய்ப் பழகியமை கூறுதல், அவன் பெருமையை மிகுத்துரைத்தல், தலைவனது மிகுவிருப்பைப் புலப்படுத்துதல், வினவுவது போல் பேசுதல் (என்ன செய்யலாம் எனப் பெற்றோரையே வினவுதல்), காப்பாற்றியதால் நேர்ந்த காதல் என்பதுபோலக் காரணம் கூறுதல், இருவரும் தாமே எதிர்பாராது சந்தித்துக் கொண்டனர் எனல் - இவ்வாறு நடந்த நிகழ்ச்சியை உண்மையாகச் சொல்லும் கூற்றுடன் தொகுத்து, ஏழுவகையாகத் தோழி தாயரிடம் அறத்தொடு நிற்பாள். படைத்து மொழியும் கற்பனைக் காரணங்களுடனும் அவள் பேசுவாள் என்பதாலேயே, உண்மை செப்பல் இறுதியில் வைக்கப்பட்டது.

### தலைவியின் நிலைகண்டும் அவளது காதலைச் செவிலி முதலியோர் உணர்ந்துகொள்வர்

**உற்றுழி அல்லது சொல்லல் இன்மையின்**
**அப்பொருள் வேட்கைக் கிழவியின் உணர்ப. (1153)**

தக்க சமயம் நேர்ந்தாலன்றித் தோழி கூறாள். அதனால் அக் களவு பற்றி, வேட்கைமிக்க தலைவியின் உடல் வேறுபாடு முதலியன கண்டும் தாயர் தாமே அறிதலுண்டு.

உற்றுழி - தக்க சமயம், சொல்லித் தீரவேண்டுமென்ற நிலை. சொல்லல் - தோழி அறத்தொடு நிற்றல். அப்பொருள் - அக்களவுக் காதல். வேட்கைக் கிழவி - காம விருப்பம் நிறையப் பெற்ற தலைவி; அவளது உடல் மெலிவு, நிறமாற்றம் முதலியன.

### கூற்று நிகழ்த்தும் மகளிர்க்குரிய பண்புகள் இவ்வாறு அகத்திணைப் பாடல்களில் மகளிர் படைக்கப்படுவர்

**செறிவும் நிறையும் செம்மையும் செப்பும்**
**அறிவும் அருமையும் பெண்பா லான. (1154)**

தோழியும், பெண்பாலரும் மிகுந்த நாகரிகச் சிறப்புடன் படைக்கப்பெறுவர். அடக்கமுடைமை, மனத்தை ஒருவழி நிறுத்தும் ஆற்றலுடைமை, செவ்விய பண்புடைமை, சொல்வன்மை, அறிவுக் கூர்மை, அரிய தன்மை என இவை பெண்பாலரிடம் காணப்படும்.

செறிவு - அடக்கம். நிறை - மனத்தை ஒருவழி நிறுத்தல், சலனமின்மை. செம்மை - நேர்மை. செப்பு - மெய்ம்மையை அழுத்தமாய்க் கூறும் சொல்வன்மை. அறிவு - எதிர்வரும் நன்மை தீமையை முன்னதாக அறிவது. அருமை - பிறரிடம் காணவியலாத அரியதன்மை.

**தலைவன் வரைந்துகொள்ள வேண்டிப் பலவகைகளில்**
**தோழி முயலுதல் - வரைவு கடாதல்**

**பொழுதும் ஆறும் காப்பும்என்று இவற்றின்**
**வழுவி னாகிய குற்றங் காட்டலும்,**
**தன்னை அழிதலும், அவன்ஊறு அஞ்சலும்,**
**இரவினும் பகலினும் நீவர என்றலும்**
**கிழவோன் தன்னை வாரல் என்றலும்**
**நன்மையும் தீமையும் பிறிதினைக் கூறலும்**
**புரைபட வந்த அன்னவை பிறவும்**
**வரைதல் வேட்கைப் பொருள என்ப. (1155)**

*தலைவனிடம் தோழி வரைவு கடாதல்*

தலைவன் வரும் நேரம், வழி, பெற்றோர் காத்தல் ஆகிய இவற்றில் வழுவினால் நேரும் குற்றத்தைச் சொல்லித் தோழி, விரைந்து திருமணம் செய்து கொள்ளத் தலைவனிடம் வேண்டுவாள். தன்னைத் தானே நொந்துகொண்டு பேசுவாள். அவனுக்கு வழியிடை ஊறு நேருமோ என அஞ்சுவாள். இரவு வருவானைப் பகலில் வா என்பாள். பகலில் வருவானை இரவு வா என்பாள். இரண்டையும் மறுத்து வராதே என்பாள். பிறிதொன்றால் நிகழக் கூடிய நன்மை, தீமைகளையும் விளக்குவாள். குற்றமுண்டாகும்படியான இது போன்றன பிறவும் அவள் கூறுதல், விரைவில் திருமணத்தை முடிக்க வேண்டுமெனும் வேட்கையாலேயே ஆகும்.

தலைவன் தலைவியைத் தேடி, களவொழுக்கத்தில் இரவு நேரத்திலும் வருவான். வரும் வழியோ பல ஆபத்துக்களையுடையது. தலைவியைப் பெற்றோர் காப்பதும், ஊர்க் காவலர் ஊரைக் காப்பதும்

உண்டு. இத்தகைய நேரம், வழி, காவல் ஆகியவற்றில் தவறேதும் விளைந்தால், அதனாலேற்படும் குற்றத்தைத் தோழி தலைவனுக்குச் சொல்லி வரைவு கடாவுவாள் - திருமணம் செய்யத் தூண்டுவாள். தன்னைத் தானே நொந்து கொள்வதும் தலைவனுக்கு வழியிடை விலங்கு முதலியவற்றால் இடையூறு நேருமோ என அஞ்சுவதும் தோழியிடம் நிகழும். மேலும் இரவு வா என்றும் அதை மறுத்துப் பகலில் வா என்றும் இரண்டையும் மறுத்துத் தலைவனை வராதே என்றும் அலைக்கழிப்பாள். பண்பு, குடிச்சிறப்புக்கு உண்டாகும் நன்மையையும் தீமையையும் விளக்குவாள். இவ்வாறு பிழைபட வருவன பிறவற்றையும் தோழி கூறுதற்குக் காரணம் தலைவியை விரைவில் வரைதல் (மணத்தல்) வேண்டுமெனும் வேட்கையே ஆகும். இவை விருப்பமின்றி, வெறுத்துக் கூறுவன அல்ல.

**வேட்கையை மறைமுகமாகக் கூறுவது முன்னது**
**வெளிப்படையாக வெறுத்துப் பேசுவது இது**
**வரையாது மிக நீட்டிப்பின் இவ்வாறு பேசநேரும்**

**வேட்கை மறுத்துக் கிளந்தாங்கு உரைத்தல்**
**மரீஇய மருங்கின் உரித்தென மொழிப. (1156)**

திருமணம் பற்றிய வேட்கையைச் சுற்றி வளைத்துச் சொல்லாமல், நேரடியாகவே 'திருமணம் செய்து கொள்க' என வெளிப்படச் சொல்லுவாள், தோழி. இதுவும் மரபுப் படியாக அவளுக்குரியதே.

வேட்கை மறுத்து - முன்னே சுட்டியவை திருமணத்திற்குத் தூண்டும் விருப்பத்தை உள்ளடக்கியவை; அதை மறுத்து கிளந்தாங்கு - வெளிப்படையாகவே தலைவனை மணம் செய்து கொள்ளுமாறு நேரே கூறுதல். மரீஇய மருங்கு - முன்பு தொட்டுப் பொருந்தி வரும் மரபு.

**உயர்குடிமக்களான தலைவர்கள்**
**ஊர்திகளில் இயங்கலும் உண்டு**

**தேரும் யானையும் குதிரையும் பிறவும்**
**ஊர்ந்தனர் இயங்கலும் உரியர் என்ப. (1157)**

தலைவர்கள் தேரிலும் யானையிலும் குதிரை மீதும் பிறவற்றின் மீதும் ஏறி. ஊர்ந்து இயங்குதற்கும் உரியவர்களே.

தலைவர்கள், களவொழுக்கமாதலால் தலைவியரைத் தேடி நடந்துசெல்வது பெருவழக்கு. அல்லாமல் தேர், யானை, குதிரை பிற ஊர்திகளில் போய் வருதலும் உண்டு.

## பிரிவாற்றாத காதலர் பற்றிய பேச்சில் இடம்பெறும் ஒரு கற்பனை மரபு

**உண்டற் குரிய அல்லாப் பொருளை**
**உண்டன போலக் கூறலும் மரபே. (1158)**

கண்கள் என்னைத் தின்றன; நெற்றியைப் பசலை நிறம் உண்டது என இவ்வாறு உண்ணுதற்குரியதல்லாத பொருள்களை, உண்டன போலக் கூறுதலும் ஒரு மரபே.

தலைவி பசலையால் உணப்பட்டாள்; கண்கள் அவரைக் காண வேண்டுமென்று என்னைத் தின்னுகின்றன என வருவன. இவை 'இலக்கணை' எனப்படும்.

## காப்பு கையிகத்தலால் 'வரைதலே' பொருளாகும் எனல்

**பொருள்என மொழிதலும் வரைநிலை இன்றே**
**காப்புக் கைம் மிகுதல் உண்மை யான. (1159)**

தலைவியைப் பெற்றோர் காக்கின்ற பாதுகாப்பு மிகக் கூடுதலாவதால், இனி வரைதலே உறுதிப்பொருளாகும் என்று சொல்லுதலும் நீக்கப்படாது.

காப்புக் கைம் மிகுதல் - தலைவியைப் பெற்றோர் காக்கும் முயற்சி எல்லை கடத்தல். பொருள் - வரைதலே பொருள்; வேறு பொருள் கருதிப் பிரியாதே எனல். வரைநிலை இன்று - நீக்கப்படாது.

## காப்பு மிகும்போது தோழி பெண்மைப் பண்புகளைக் கடந்தும் மணம் முடிக்க முயலவேண்டும்

**அன்பே அறனே இன்பம் நாணொடு**
**துறந்த ஒழுக்கம் பழித்துஅன்று, ஆகலின்**
**ஒன்றும், வேண்டா காப்பி னுள்ளே. (1160)**

அங்ஙனம் 'காப்பு' (இற்செறிப்பு) மிகும்போது, தோழி அன்பு, அறம், இன்பம், நாணம் எனும் இவற்றைக் கைவிட்டும் கற்பு ஒழுக்கம் பேணுதல் - திருமணம் முடிக்கமுயலுதல் பொருந்தும்; தவறாகாது.

அங்ஙனம் காக்கும்போது, தோழி தனக்கு இயல்பாக இருக்க வேண்டிய அன்பு அறம் இன்பவுணர்வு நாணம் இவற்றைக் கைவிட்டும் பெற்றோரிடம் வழக்காடி இசைவு பெற முயல்வாள். அவற்றை அச்சூழலில் துறந்து நடந்தது பழி ஆகாது. அது பொருந்தும் ஒழுக்கமே.

## பொருள் தேடச் செல்லும் சுரவழி கடிதெனக் கூறித் தோழி தலைவனைத் தடுத்தல்

**சுரம்என மொழிதலும் வரைநிலை இன்றே. (1161)**

பொருள் தேடி வந்து மணப்பதாகச் சொல்லும் தலைவனிடம் பாலைவழி கொடிது எனக் கூறுதலும் நீக்கப்படாது. திருமணம் முடிக்காது சுரவழி போக வேண்டாம் என்பது இது.

**பொருள் தேடச் செல்ல நினைக்கும் களவொழுக்கத் தலைவனை தோழி 'சுரவழி' (பாலைநிலம்) கடிதெனக் கூறியும் தடுப்பாள். இவை யாவும் களவை வரைவுக்குட்படுத்தும் முயற்சிகள்.**

## அகப்பாடல் அடிக்கருத்துக்கள் உலக வழக்கையே அடிப்படையாகக் கொள்ளவேண்டும்

**உயர்ந்தோர் கிளவியும் வழக்கொடு புணர்தலின்**
**வழக்குவழிப் படுதல் செய்யுட்குக் கடனே. (1162)**

*அக இலக்கியம் படைக்கும் பொது நெறிமுறைகள்*

எழுத்தாளர்கள், படைப்பாளிகளில் உயர்ந்த திறமையுடைய பெரியவர்கள் பாடிய பாடல்களும் இலக்கியமும் உலக வழக்கையே அடிப்படையாகக் கொண்டன. ஆதலின் இலக்கியம் என்பது உலக வழக்கு வழிப்படுதலே அதன் கடமையாகும். உலக வழக்கு என்பது உலகில் நடப்பது; உலக வாழ்வு. மேலும் 'உயர்ந்தோர் வழக்கொடு பொருந்தி வருவன எல்லாம் செய்யுட்கு (இலக்கியத்திற்குப்) பொருளாகப் புணர்க்க' என்பது இளம்பூரணம்.

**உயர்ந்தவர்கள் பாடிய பாடல்கள் (கிளவிகள்) யாவும் உலகில் நடைபெறும் வழக்கொடு பொருந்தி வருவனவே. ஆதலின் இலக்கியத்தின் கடமை உலக வழக்கை அடிக் கருத்தாகக் கொள்ளுதலேயாம்.**

## உலகவழக்கில் அறக்கழிவுடையனவும் உள அவற்றைப் பாடலாமா?

**அறக்கழி வுடையன பொருட்பயம் படவரின்**
**வழக்கென வழங்கலும் பழித்துஅன்று என்ப. (1163)**

உலக வழக்கில் அறத்தின் நீங்கியனவும் நடக்கின்றன. அவை பொருளுக்குச் சுவை தரவும் விறுவிறுப்புத் தரவும் பயன்பட வருமாயின், அவற்றை உலக வழக்கே எனக் கொண்டு, இலக்கியத்தில் ஆளுதலும் பழியுடையது அன்று

பொருட்பயன் பட வருதல் – இலக்கியப் படைப்புக்குப் பயனாதல். உலகில் நடக்கும் மறுபக்கத்தை மறைத்தலாகாது.

அறக் கழிவுடையன - உலக வழக்கில் அறத்தின் நீங்கியனவும் நடக்குமல்லவா? அவை. பொருள் பயம் பட வருதல் - பாடவந்த பொருளுக்கு விறுவிறுப்பும் சுவையும் தர வருதல். பழித்து அன்று - பழியுடையதன்று. அவையும் உலக வழக்கேயாதலின் படைக்கலாம்.

**அறக்கழிவுடையவற்றைப் பாடநேர்ந்தால்**
**அவற்றை நல்வழிப்படுத்துப் பாடுக**

**மிக்க பொருளினுள் பொருள்வகை புணர்க்க**
**நாணுத் தலைப்பிரியா நல்வழிப் படுத்தே. (1164)**

ஆனால், அங்ஙனம் அறம்கடந்த பொருளினுள், ஏற்புடைய பொருள் வகைகளை மட்டும், மானுடர் நாணத்தின் நீங்காதபடி, நல்வழிப்படுத்திப் படைக்க வேண்டும். அதாவது தீயவற்றைத் தீயவை என உணரும்படியும், படைக்கும்போது அதில் வரும் அப்பகுதி மனிதப் பண்பாட்டைச் சீர்குலைத்து விடாதபடியும் 'நல்வழிப் படுத்து'ப் புனைய வேண்டும். அதற்குத் திறமையும் மனிதநேயமும் வேண்டும்.

அங்ஙனம் அறங்கடந்த பொருளினுள், பொருந்திய பொருள் வகையை மட்டும் எடுத்துக் கொண்டு எழுதுக. ஆனால் அது மானுடத்தின் நாணத்தை - பண்பை விட்டு விலகாதபடி, நல்வழிப்படுத்துப் பாடப்பட வேண்டும். தீமையை வளர்க்க உதவுமேல் எழுத்தறமாகாது.

**உரையாடலில் அன்புரிமையால் ஒருவரை ஒருவர்**
**விளிப்பது; 'எல்லா' என்பது போல**

**முறைப்பெயர் மருங்கின் கெழுதகைப் பொதுச்சொல்**
**நிலைக்குரி மரபின் இருவீற்றும் உரித்தே. (1165)**

முறைப் பெயர்களில் ஏட, எல்லா, போல்வனவற்றை, உறவு கருதாது, நட்புரிமையும் அன்புரிமையும் கருதி அழைப்பதுண்டு. இஃது இரு பாலாரிடத்தும், நிலைத்து வழங்கி வருவதாகும். தோழி தலைவியை 'அன்னாய்' என அழைப்பது போல்வது இது.

மக்கள் ஒருவரை ஒருவர் முறைப்பெயரிட்டு அழைப்பது உலக வழக்கம். நட்புரிமை - அன்புரிமை காரணமாக இரு பாலரும் 'ஏட', 'எல்லா', 'அம்மா', 'அப்பா' எனச் செல்லமாகப் பொதுப் பொருள்பட அச்சொற்களைப் பயன்படுத்தி அழைப்பர். இருவீற்றும் -

இருபாலரிடத்தும். நிலைக்குரி மரபு - இது உலகில் நிலைபெற்று வரும் வழக்கம்.

**தோழி அன்புரிமை பற்றித்**
**தலைவியின் அழகு வனப்புள்ள உறுப்புக்களைத்**
**தன்னுடையன போலப் பேசுதல்**

**தாயத்தின் அடையா, ஈயச் செல்லா,**
**வினைவயின் தங்கா, வீற்றுக் கொளப்படா**
**'எம்'என வரூஉம் கிழமைத் தோற்றம்**
**அல்லா வாயினும் புல்லுவ உளவே. (1166)**

தோழி, தலைவி அழகு முதலியவற்றைத் தன்னுடையது போலச் சொல்லும் கூற்றுக்கள் பலவுள. தலைவிக்காகப் பேசும் அவள், 'என் அழகைத் திரும்பத் தா', 'என் தோள்களை மெலிய வைத்தனை' என இவ்வாறு உரிமையோடு பேசுவாள். அழகு முதலியன தாய உரிமைப்படி ஒருவர் மற்றவரிடமிருந்து அடையக்கககூடியன அல்ல; ஒருவர் தந்து மற்றவர் பெறக்கூடியன அல்ல. முயற்சி செய்து அடையக்கூடியனவுமல்ல. பகைமையால் பிரித்து எடுத்துக் கொள்ளப்படவும் இயலாது. ஆயினும் 'எம் அழகு', 'எம் பொலிவு' என வரும். உரிமையுடன் கூடிய பேச்சு, பொருத்தமற்றனவேயாயினும், பொருந்தி வருமிடங்கள் அகப் பாடல்களில் உள.

தோழி தலைவனிடம் 'எங்கள் அழகைத் திரும்பத் தருக'; 'என் மேனி பசலையுறச் செய்தனை' எனத் தலைவியின் அழகனைத்தும் தன்னுடையன போலப் பேசுவாள். இது தகுமா? பெற்றோர் வழி மக்களை அடையும் தாய உரிமை இல்லை; முயற்சி செய்து ஒப்பனை மூலமும் தங்காது; பகைமையால் பிரித்து எடுத்துக் கொள்ள முடியாது. ஆயினும் தோழி 'எம்' அழகு என்று தலைவியழகை உளப்படுத்தித் தன்னுடையது போல் கூறும், உரிமை வழி வெளிப்பாடு, பொருத்தமின்றேனும் அகப்பாடல் மரபில் பொருந்தும். அத்தகைய கூற்றுக்களும் உள.

**அகத்திணை மாந்தர் ஒருவரைப் பற்றிவரினும்**
**அஃது அவர்போலும் அனைவருக்கும் பொருந்தும்**

**ஒருபாற் கிளவி எனைப்பாற் கண்ணும்**
**வருவகை தானே வழக்குஎன மொழிப. (1167)**

'உலக வழக்கு' இலக்கிய அடிக்கருத்தாகுமென்றால், எங்கோ, யாரோ ஒருவர் மாட்டு நிகழ்வது, எப்படி உலகப் பொதுவழக்காகும்? ஒருவரிடம் நிகழும்

கூற்று, உலகிலுள்ள அவர் போன்ற அனைத்து மக்களிடத்தும் வருவதாகக் கொள்வதே 'உலக வழக்கு' எனப்படும்.

ஒரு பாற் கிளவி - எங்கேனும் ஒருவர் பால் நிகழும் கூற்று. எனைப்பாற் கண்ணும் - எல்லா மாந்தருக்கும். ஒருவர் வாழ்வில் நிகழ்ந்ததாகப் பாடினும், அது எல்லோருக்கும், பொருந்துவதைத் தான் உலக வழக்கு என்று கூறுகிறோம்.

### இயல்பூக்கமாய் இன்பத்தையே நோக்குவது
### உயிர்கள் அனைத்தின் இயல்பு

**எல்லா உயிர்க்கும் இன்பம் என்பது**
**தான்அமர்ந்து வரூஉம் மேவற் றாகும். (1168)**

உலகிலுள்ள ஓரறிவுயிர் முதல் எல்லாவுயிர்க்கும் 'இன்பவுணர்வு' என்பது உண்டு. சிற்றெறும்பு முதல் யானைவரை உண்டு. மலர்களில் மொய்க்கும் வண்டுகளுக்கு மட்டுமன்று, மலர்களுக்கே உண்டு. ஓரறிவுயிர் முதல் வரும் இவ்வின்ப உணர்வு, அவ்வுயிர்களின் பிறப்பிலேயே தானாக விரும்பிப் பொருந்தி வருவதாகும். காம இன்பவுணர்வு மக்களுக்கே அன்றி, மற்றைய உயிர்களுக்கும் உண்டு.

உலகிலுள்ள ஓரறிவுயிர் முதல் எல்லா உயிர்கட்கும் தன்னைப் பற்றிய இன்பவுணர்வு உண்டு. அது தானாக இயல்பாக விருப்பத்துடன் பொருந்தி வருவதாகும். அகவாழ்வில் காம இன்ப உணர்வென்பது மானுடர்க்கு மட்டுமன்று, உயிர்களுக்கும் உண்டு.

### பரத்தைமை ஒழுக்கம் நான்கு நிலத்தாரிடமும் உண்டு
### பாலைபோல் நிலம் திரிவதில்லை

பரத்தை வாயில் நால்வர்க்கும் உரித்தே
நிலத்திரிபு இன்றுஅஃது என்மனார் புலவர். (1169)

பரத்தைமை ஒழுக்கம் மருத நிலத்திற்கு மட்டுமன்று; நான்கு நிலத்தவருக்கும் உண்டு. பாலை என்பது இவ்வாறு நான்கு நிலத்தவர்க்கும் பொதுவாயினும், முல்லை குறிஞ்சி திரிந்த பாலை என நிலத்திரிபு உண்டு. ஆனால் பரத்தைமை பாடல்கள் மருதத்திற்கே உரியன. இதில் நிலத்திரிபு இல்லை.

பரத்தை வாயில் - பரத்தமை ஒழுக்கம். நால்வர் - நான்கு நில மக்கள். பாலை போல் நிலத் திரிபு (குறிஞ்சி முல்லை திரிந்தது பாலை) இதற்கு இல்லை. இது நானிலத்தும் காணப்படுவதேயாம். ஆயினும் திணை வகுப்பில் மருதத்திற்கே உரியதாகும்.

## உடன்போக்கும் வரைதல் முயற்சியும் தலைவியிடம் தோன்றுதற்கான சூழல்கள்

**ஒருதலை உரிமை வேண்டியும், மகடூஉப்**
**பிரிதல் அச்சம் உண்மை யானும்**
**அம்பலும் அலரும் களவுவெளிப் படுக்குமென்று**
**அஞ்ச வந்த ஆங்குஇரு வகையினும்**
**நோக்கொடு வந்த இடையூறு பொருளினும்**
**போக்கும் வரைவும் மனைவிகண் தோன்றும். (1170)**

மனைவி உடன் போக்கை வற்புறுத்தவும் திருமணத்தை வற்புறுத்தவும் நேரே கூறி முயலுமிடங்கள் சிலவுள; மனைவியாக உறுதிப்படும்உரிமையை வேண்டுமிடத்தும், பெண்ணாதலின் தலைவன் பிரிவனோ எனும் அச்சமுண்டாதலாலும் அம்பலும் அலரும் களவை வெளிப்படுத்தலால் ஊரார் பழிப்பர் என அஞ்சுதலாகிய அவ்விரு நிலையிலும் தன்னைப் பெற்றோர் ஐயப்பட்டு நோக்குதலால் வந்த இடையூறு காரணமாகவும் தலைவி உடன்போதலை அல்லது வரைதலை வற்புறுத்துவாள்.

தலைவி பெற்றோருக்குத் தெரியாமல் தலைவனுடன் போக விரும்புவது 'போக்கு' - உடன்போக்கு. வரைவு - திருமணம். 'மனைவி' என்றது தலைவியை. ஒருதலை உரிமை - தலைவனைத் தனக்கே உரியனாகப் பெற விரும்புதல். மகடூஉப் பிரிதல் அச்சம் - பெண்ணுக்கே இயல்பான தலைவன் பிரிவானோ என்ற அச்சம். அம்பல் - குறிப்பாய்ப் பரவும் வதந்தி. அலர் - ஊரார் வாய்விட்டுத் தூற்றிப் பேசுவது. இவை களவை வெளிப்படுத்தும். அவற்றால் தலைவி அஞ்சுவாள். நோக்கொடு வந்த இடையூறு - தலைவியைத் தாயும் பிறரும் ஐயுற்றுப் பார்த்தலால் ஏற்படும் துன்பவுணர்வு. இதனால் உடன் போக்கை விரும்புவாள்; அல்லது திருமணத்தை விரைவுபடுத்த முயல்வாள்.

## தலைவியின் வருத்தம் மிகும்போது மனித வாழ்க்கையின் இரக்கம் வெளிப்படும்

**வருத்த மிகுதி சுட்டுங் காலை**
**உரித்தென மொழிப வாழ்க்கையுள் இரக்கம். (1171)**

தலைவி தன் வருத்த மிகுதியைச் சுட்டிக் கூறும் அகப்பாடல்களில், இவ்வுலக வாழ்க்கையின் இரக்கமாகிய அவல உணர்வு மிக்குத் தோன்றும்.

தலைவி தன் வருத்த மிகுதியைச் சுட்டிக் கூறும் பொழுது, உலக வாழ்க்கையின் இரக்கவுணர்வு தோன்றி அவலத்தை மிகுவிக்கும்.

### புலவிக் காலத்தில் தலைவன் தலைவியிடம் பணிதல் குறையன்று

**மனைவி உயர்வும் கிழவோன் பணிவும்**
**நினையுங் காலைப் புலவியுள் உரிய. (1172)**

மனைவி உயர்வும் தலைவன் அவளுக்குப் பணிவதும் ஆகிய இரண்டும் எண்ணிப் பார்க்குமிடத்து, தலைவியின் புலவிக் காலத்தில் உரியனவாகும்.

புலவிக்காலத்தே தலைவன் தலைவியை உயர்வுபடுத்தி, தான் பணிந்து நடந்து கொண்டு, அவளது ஊடலைத் தீர்க்க முயல்வான். அகப் பாடல்களில் இவ்வாறு புனைதலைக் காணலாம்.

### காம வேட்கை மிகுதியில் ஒருவரை ஒருவர் புகழ்தல் கற்புக்காலத்தும் உண்டு

**நிகழ்தகை மருங்கின் வேட்கை மிகுதியில்**
**புகழ்தகை வரையார் கற்பி னுள்ளே. (1173)**

குடும்ப வாழ்வு நிகழும் சிறப்புடைய காலத்தில், காம இன்ப வேட்கை மிகுதியால், தலைவன் தலைவி இருவரும் ஒருவரை ஒருவர் புகழும் பெருந்தன்மையை யாரும் குறை கூறார். களவில் தலைவன் பாராட்டுவான். கற்பில் இருவரும் நலம் பாராட்டிக் கொள்வர்.

குடும்ப வாழ்வு சிறப்பாக நிகழும் தன்மையில், கணவனும் மனைவியும் வேட்கை மிகுதியால் ஒருவரை ஒருவர் புகழ்தலும் தவிர்க்கப் பெறாது. களவில் மட்டுமன்றிக் கற்பிலும் நலம் பாராட்டுவர்.

### இறைச்சி என்பது காதலர் உரிப்பொருளின் புறத்ததாய் உயிரினக் காதல்பற்றி வரும்

**இறைச்சி தானே 'உரிப்'புறத் ததுவே. (1174)**

*இறைச்சிப் பொருள் இலக்கணம்*

இறைச்சி என்பது கருப்பொருள்: உயிரினம். மேலும் உயிரினத்தின் பாலுணர்வும் பாலுறவும். இவ்வுயிரினப் பாலுணர்வுக் காதற் காட்சிகள், உரிக்குப் புறத்தே வரும். அதாவது திணைக்கு உரிப்பொருள் என்ற, மக்களின் உரிப் பொருட்

செய்திகளுக்குப் புறத்தே, அவற்றுக்குத் துணையாக வரும். (யானை பிடிக்கு உணவூட்டிப் பின்னுண்ணும் என்னும் இறைச்சி, பிரிந்த கணவன் விரைவில் திரும்பி மனைவியைப் பேண வேண்டுமென்னும் உரிப்பொருட் செய்திக்குப் புறத்த தாய், அதை வலியுறுத்தத் துணை செய்யும்.)

இறைச்சி - கருப்பொருள். கருப் பொருளில் உயிரினம் - ஓரறிவுயிர் மரம் செடி கொடி முதலாக, குடும்பம் போல் வாழும் புறா, மான், யானை அனைத்தும். உரி - மக்கள் உரிப்பொருள். புணர்தல் முதலியன. உரிப்புறத்தது - அதற்குப் புறத்ததாய் மான், யானை புறா போன்றவற்றின் காமஉணர்வுச் செயல்கள். அவை 'உரியல்ல; உரிபோல்வன; உரிப்புறத்தன.'

**இலக்கிய மரபுணர்ந்தோர்க்கு**
**உயிரினக் காதலாகிய இறைச்சியில் பிறக்கும்**
**பிறிதொரு பொருளும் புலப்படும்**

**இறைச்சியில் பிறக்கும் பொருளுமார் உளவே**
**திறத்தியல் மருங்கில் தெரியு மோர்க்கே. (1175)**

இறைச்சியினால் கிடைக்கும் பிறிதொரு 'தொனிப்' பொருளும் உண்டு. அது அகப்பாட்டின் திறமறிந்து, அதன் இயல்புடன் சேர்த்து அறியவல்லவர்க்குப் புலனாகும்.

திறத்தியல் மருங்கு - அகப்பாடலின் திறத்தை ஆராய்ந்து உணருமிடத்து. இறைச்சி மூலம் பிறிதொரு பொருளும் உண்டாகும். அதை அறியவல்லவர் அறிவர்.

**உயிரினங்களின் அன்பு வாழ்வை விளக்கும் இறைச்சி,**
**தலைவியை வற்புறுத்தி ஆற்றுவிக்கப் பயன்படும்**

**அன்புறு தகுந இறைச்சியுள் சுட்டலும்**
**வன்புறை ஆகும் வருந்திய பொழுதே. (1176)**

உயிரினக் காதல் காட்சிகளாகிய 'அன்புறுதற்குத் தகுந்த கருத்துக்களை, இறைச்சியில் சுட்டலுமுண்டு. அது தலைவி வருந்திய பொழுது, தலைவன் இக்காட்சிகளைக் கண்டு விரைவில் திரும்பிவிடுவான் என வற்புறுத்துவதற்குப் பயன்படும்.

தலைவி பிரிவால் வருந்தும் பொழுது, அவளைத் தோழி வற்புறுத்தி ஆற்றுவிப்பாள். வன்புறை - வற்புறுத்தல். வழியில் காணும் இறைச்சியுள்

- புறா மான் யானை முதலிய உயிரினங்களுள். அன்புறுதகுந - அவற்றின் அன்பு வாழ்வுகள். ஆண் யானை பிடியூட்டிப் பின் உண்பதைப் பார்த்த தலைவர் திரும்புவர் என வற்புறுத்தல்.

## தலைவன் மனைவியை மிகுதியாகப் பாராட்டினால் பிரிய நினைக்கின்றான் என்று பொருள்

**செய்பொருள் அச்சமும் வினைவயின் பிரிவும்**
**மெய்பெற உணர்த்தும் கிழவிபா ராட்டே (1177)**

தலைவன் தலைவியை வெகுவாகப் பாராட்டினால், அவன் பிரியப் போகிறான் என்பது பொருள். தலைவியை பிரிந்து பொருள் தேடப் போகிறானோ எனும் அச்சம்; அல்லது போர் முதலிய வினைகருதிப் போகப் போகிறானோ எனும் அச்சம். தலைவன் பாராட்டு இவ்அச்சங்களை உறுதிப்பட உணர்த்தும்.

கிழவியைத் தலைவன் பாராட்டினால், பொருள்தேடப் பிரியப் போகிறான் என்றோ, போர் கருதிப் போகப் போகிறான் என்றோ பொருள். மெய்பெற - உண்மையாக, உறுதிப்பட. வினை - போர், தூது முதலியன.

## தலைவி பரத்தமையைப் பாராட்டுவதற்கும் உள்ளத்துள் இருக்கும் ஊடலே காரணம்

**கற்புவழிப் பட்டவள் பரத்தை ஏத்தினும்**
**உள்ளத்து ஊடல் உண்டென் மொழிப (1178)**

கற்பு வழிப்பட்ட மனைவி, பரத்தையைச் சில சமயம் உயர்த்திப் புகழ்ந்து பேசுவாள். அதற்குக் காரணம் அவளுடைய உள்ளத்தினுள் இருக்கும் ஊடலேயாகும்.

தலைவி பரத்தையை உயர்த்திப் பேசுதல் உண்டு. தலைவனிடம் உள்ள ஊடலை மறைமுகமாக உணர்த்துவது அது.

## இன்னொருத்தியின் குணங்களைக் கூறித் தலைவனின் தடுமாற்றத்தைக் குறிப்பாலறிய முயல்வாள், தலைவி

**கிழவோள், பிறள்குணம் இவைஎனக் கூறிக்**
**கிழவோன் குறிப்பினை உணர்தற்கும் உரியள் (1179)**

தலைவி, தலைவனால் விருப்பப்பட்டாள் என ஐயுறும் மற்றொருத்தியின் குணங்கள் இவை எனக் கூறுவாள். அதன்வழி தலைவனுக்கும் அவளுக்கும் உள்ள தொடர்பினை, அவன்பால் ஏற்படும் குறிப்பின்வழி அறிவாள்.

கிழவோள் - மனைவி. பிறள் குணம் - தலைவனால் விரும்பப் பட்டவளென ஐயுறும் வேறுஒருத்தி, கிழவோன் குறிப்பு - அவனுக்கு அவள்பால் உள்ள தொடர்பு.

### தலைவனைக் கடிந்து பேச வாய்ப்பு மகிழ்ச்சியும் ஊடலுமுள்ள சமையமே

**தம்முறு விழுமம் பரத்தையர் கூறினும்**
**மெய்ம்மையாக அவர்வயின் உணர்ந்தும்**
**தலைத்தாள் கழறுஅறம் எதிர்ப்பொழுது இன்றே**
**மலிதலும் ஊடலும் அவையலங் கடையே. (1180)**

தலைவி தலைவனை மகிழ்ச்சியும் ஊடலும் உள்ள சமயத்திலேயே கடிந்து பேசுவாள். தலைவியால் தாம் துன்பம் அடைவதாகப் பரத்தையர் கூறினாலும் அவர்களிடம் நடந்தவற்றை உண்மையாகத் தலைவி அறிந்தாலும் தலைவனை எதிர்ப்பட்ட பொழுது அவனிடம் நேர் நின்று கடிந்து பேசும் முறை இல்லை. மகிழ்ச்சியும் புலவியுமுள்ள சமையங்களைத் தவிர்த்துக் கடிந்து பேசாள் என்பதனால், அந்நேரங்களில் கடிந்து பேசுவாள் என்பது பெறப்படும்.

பரத்தையர் தலைவியால் துன்பமடைவதாகச் சொன்னாலும் அல்லது அவர்பால் நிகழ்வதை மெய்ம்மையாக அறிய நேர்ந்தாலும் தலைவிக்குச் சினம் தோன்றும். தலைத்தாள் - பெருமுயற்சி. கழறு அறம் - தலைவனைக் கண்டித்துப் பேசும் அறநெறி. எதிர்ப் பொழுது இன்று - நேரே பார்த்ததும் உடனே கடிதல் இல்லை. மலிதலும் - மகிழ்ந்திருக்கும் போதும். ஊடலும் - பிற்பாடு ஊடுகிற காலத்தும். சமையம் பார்த்துக் கடிந்து பேசுவாள்.

### தலைவன் குறித்த பருவமும் பொழுதும் வருமுன்னே அவை வந்ததாகத் தலைவி வருந்துதல்

**பொழுதுதலை வைத்த கையறு காலை**
**இறந்த போலக் கிளக்கும் கிளவி**
**மடனே வருத்தம் மருட்கை மிகுதியொடு**
**அவை நாற் பொருட்கண் நிகழும் என்ப. (1181)**

தலைவன் வருவதாகச் சொன்ன கார்காலம் முதலிய பருவங்கள் தொடங்கியதும், தலைவி கையற்று வருந்துவாள். அப்போது, அப்பருவங்கள் வந்து முடிந்துவிட்டது போலப் பேசுவாள். அவளது இளமையால் அறியாத

தன்மையும் வருத்த மிகுதியும் பருவம் முடிந்துவிட்டதோ எனும் மனமயக்கமும் பருவ அறிகுறிகள் மிகுதியாகுதலும் என அந் நான்கு நிலைமையில் அக் கூற்றுக்கள் தலைவிபால் நிகழும்.

பொழுது தலைவைத்த - தலைவன் திரும்புவதாகச் சொன்ன காலம் தொடங்கிய. இறந்த போல - அப் பருவம் வருமுன்பே வந்து விட்டது போல. கிளவி - தலைவி பேசுவது. மடன் - அறியாததால்; வருத்தம் - மிகுந்த வருத்தத்தால்; மருட்கை - பருவம் வந்துவிட்டதோ என எண்ணும் மன மயக்கத்தால்; மிகுதி - பருவ வரவைக் காட்டும் அறிகுறிகள் மிகுதலால். பருவம் வருமுன் வந்து முடிந்ததாக வருந்துவாள்.

**களவை நீட்டிக்க விரும்பும் தலைவனைத் தோழி பொய்யும் மெய்யும் கலந்துபேசித் தடுப்பாள்**

**இரந்து குறையுற்ற கிழவனைத் தோழி**
**நிரம்ப நீக்கி நிறுத்த லன்றியும்**
**வாய்மை கூறலும் பொய்தலைப் பெய்தலும்**
**நல்வகை யுடைய நயத்திற் கூறியும்**
**பல்வகையானும் படைக்கவும் பெறுமே (1182)**

தோழி தலைவனைத் திருமணம் செய்து கொள்ளுமாறு தூண்டுவதையே கருத்தாகக் கொண்டிருப்பாள். களவை நீட்டிக்க விடமாட்டாள். களவுப் புணர்ச்சிக்காக, இரந்து தன்னிடம் குறை தீர்க்க வேண்டுகிற தலைவனைத் தோழி மிகவும் விலக்கி இசையாது தடுப்பாள். உண்மையான தடைகளையும் பொய் கலந்த தடைகளையும் கூறுவாள். நல்ல சொற்களுடன் நலமாகப் பேசியும் பலவகையாகக் கற்பித்துப் பேசியும் தடுப்பாள்.

இரந்து குறையுறுதல் - தலைவியைக் களவில் கூடுதற்குச் சந்திக்க உதவுமாறு கெஞ்சிக் கேட்டல். நிரம்ப நீக்கி நிறுத்தல் - மிகவும் விலகித் தடுத்தல்; சேட்படுத்தல் என்பர். வாய்மை - உண்மையான காரணத்தைச் சொல்லுதல். பொய் தலைப் பெய்தல் - சிலபோது மெய்யுடன் பொய்யையும் கலந்து கூறித் தடுத்தல். நல்வகையுடைய நயம் - நல்ல நெறிப்படி வழிகாட்டும் நயமான இனிய சொற்கள். பல்வகை - இதுபோன்ற பல வகைகளால். படைக்கவும் பெறும் - கற்பனையாகக் கட்டிக் கூறும் காரணங்கள். எல்லாம் திருமணத்தை விரைவு படுத்தும் நன்மைக்கே.

**உயர்த்தியும் மாற்றியும் ஐயப்பட்டும்**
**பேசுவன எல்லாம் ஆடவர்க்கே உரியன**

**உயர்மொழிக் கிளவி உறழுங் கிளவி**
**ஐயக் கிளவி ஆடூஉவிற்கு உரித்தே. (1183)**

மிக உயர்வாகச் செருக்குத் தோன்றப் பேசுதலும் எதிர் மறுத்துப் பேசுதலும் ஐயப்பட்டுப் பேசுதலும் ஆண்களுக்கு உளவாகும். மகளிர் அவ்வாறு பேசார்.

மிக உயர்வாகப் பெருமிதம் தோன்றப் பேசுதல். உறழுங்கிளவி - ஒன்றை மறுத்துப் பேசுதல். ஐயக்கிளவி - சந்தேகத்தை வெளிப்படுத்தும் பேச்சு. இவை ஆடவர்க்குரியன. பெண்பாலர் செருக்கும் மறுப்பும் ஐயமும் தோன்றப் பேசுதல் அரிது.

**துன்பம் துடைக்கும் தோழிக்கு**
**அறிவுத்திண்மை வேண்டும்**
**அத்தகையவளாகப் படைக்கப் பெறுவாள் தோழி**

**உறுகண் ஓம்பல் தன்னியல் பாகலின்**
**உரிய தாகும் தோழிகண் உரனே. (1184)**

தலைமக்களுக்கு ஏற்படும் துன்பங்களை வராமல் காத்தல் தோழியது இயல்பாதலின், அவளிடம் அறிவுத் திண்மை தோன்றப் பேசும் பான்மை உளதாகும்.

உறுகண் - இடையூறு. ஓம்பல் - பாதுகாத்தல். உரன் - அறிவுத் திண்மை.

**உயர்மொழிக் கிளவி (பேச்சு) தோழியிடமும் உளதாகும்**

**உயர்மொழிக் கிளவியும் உரியவால் அவட்கே. (1185)**

தோழி, தன்பால் உயர்வு தோன்றப் பேசுதற்கும் உரியவள்.

உயர்மொழி எனப் பெருமிதமாகப் பிறரினும் மேம்பட்டுப் பேசுதல் ஆடவர்க்கே உரித்தென்றார் முன்பு. இங்கு தோழிக்கும் அஃது உரித்து என்று கூறுகிறார்.

**வாயில்கள் (தூதுவர்கள்) வெளிப்படையாகப் பேசுவர்**

**வாயிற் கிளவி வெளிப்படக் கிளத்தல்**
**தாவின்று உரிய தத்தம் கூற்றே. (1186)**

தோழி முதலிய வாயில்கள் வெளிப்படையாகவே தங்கள் கருத்துக்களைக் கூறுவர். அவ்வாறு கூறுதலில் தவறில்லை.

வாயில்கள் (தூதுவர்கள்) கூறும் கூற்றுக்கள் வெளிப்படையாகக் கிளக்கப்படும். அவற்றில் குற்றமில்லை.

**உள்ளுறை வகைகள் ஐந்து**

**உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்புஎனக்**
**கெடலரும் மரபின் உள்ளுறை ஐந்தே. (1187)**

**உள்ளுறை**

உள்ளுறை உவமை பற்றி அகத்திணையியலில் கூறினார். (993, 994, 995). அஃது உள்ளுறை வகைகளில் ஒன்றே. குற்றமற்ற சிறப்பினையுடைய உள்ளுறை ஐந்து வகைப்படும். உடனுறை உள்ளுறை, உவம உள்ளுறை அல்லது உள்ளுறை உவமம், சுட்டு உள்ளுறை, நகை உள்ளுறை, சிறப்பு உள்ளுறை என்பன அவை.

உள்ளுறை அகப் பாடலில் வரும் கருப்பொருள் வண்ணனைகளில், பிறிதோர் உட்பொருள் கிடக்குமாறு படைக்கப்படுவது. அஃது உடனுறை, உள்ளுறை, உவம உள்ளுறை, சுட்டு உள்ளுறை, நகை உள்ளுறை, சிறப்பு உள்ளுறை என ஐந்து வகைப்படும்.

1. உடனுறை உள்ளுறை - தன்னுடனுறையும் ஒன்றைச் சொல்லி, தொடர்புடைய ஒன்றை விளக்கும். "இப்புன்னை மரம் என் தங்கை போல்வது" என்றால் தலைவி கூடுதற்கு வெட்கப்பட்டு, வேறு இடம் செல்லத் தலைவனை அழைப்பது அது.

2. உவம உள்ளுறை - உவமை போலவே இருந்து, ஒன்றற்கு ஒன்று என, இணைத்து உணரப்படும்.

3. சுட்டு உள்ளுறை - மழையைப் பார்த்துச் சுட்டிப் பேசுவது, தலைவனுக்குப் பொருந்துமாறு இருக்கும். மங்கலமும் வசையும் இதிலடங்கும்.

4. நகை உள்ளுறை, தெருவில் பரத்தையைக் கண்ட நிகழ்ச்சியைத் தலைவி நகைச்சுவைபடச் சொல்வாள். அதில் அவளது ஊடற்குறிப்பு இருக்கும். தலைவனது ஆண்மைக்குக் குறைவு ஏற்படாது அமையும்.

5. சிறப்பு உள்ளுறை - சிறப்பு இங்கு மிகுதிப் பொருட்டு. சின மிகுதி முதலியன பற்றி இது வரும்.

### உள்ளுறையால் வருத்தத்தையே சொன்னாலும் அதனால் இன்பவுணர்வே தோன்றும்

### சொல்லும் நாகரிகத்தால் வரும் இன்பம் அது

**அந்தமில் சிறப்பின் ஆக்கிய இன்பம்**
**தன்வயின் வருதலும் வகுத்த பண்பே. (1188)**

உள்ளுறை, மேலே தெரியும் பொருளைத் தவிர்த்து, அதன் உள்ளே அதற்கு இணையாகப் பொருந்தியுள்ள பிறிதொரு பொருளையும் உய்த்துணருமாறு தரும். அதனால் முடிவற்ற சிறப்பினை உருவாக்கும். இன்பத்தைத் தன்பால் கொண்டு மகிழ்ச்சியை விளைவிக்க வருதலும் அவ்வுள்ளுறையைப் படைத்தலின் கருத்தாகும்.

அந்தமில் சிறப்பு - எல்லையற்ற சிறப்பு. தன்வயின் - உள்ளுறையாகக் கூறுதல் ஒரு நாகரிகம். அதனால் சொல்பவர்க்கும் கேட்பவர்க்கும் இன்பமே தோன்றும். இது உடனுறை உள்ளுறை. உள்ளுறை உவமம் அகத்திணையியலில் கூறப்பட்டது.

### உள்ளுறைப் பேச்சால் உணர்த்தப்படுவன

**மங்கல மொழியும் வைஇய மொழியும்**
**மாறில் ஆண்மையின் சொல்லிய மொழியும்**
**கூறியல் மருங்கில் கொள்ளும் என்ப. (1189)**

மங்கலச் சொற்கள், வசைச் சொற்கள், மாறுபாடில்லாத ஆண்மையை உணர்த்தும் சொற்கள் ஆகியவையும் முன்பு கூறிய இயல்பின்படி 'உள்ளுறை'யாகச் சொல்லப்படும். உருவகம் போலச் சொல்லும் மரபு இது. நேரே வெளிப்படையாக அமையா.

மங்கலச் சொற்கள்; வசைச்சொற்கள், மாறுபாடு இல்லாத ஆண்மையைக் கருதிச் சொல்லும் சொற்கள் யாவும் உள்ளுறையின்பால் அடக்கிக் கூறப்படும். மங்கல மொழி, வைஇய மொழி - இரண்டும் சுட்டு உள்ளுறை ஆதல் கூடும். தலைவனைச் சுட்டிச் சொல்வன. அடுத்தது நகை உள்ளுறை. ஆண்மைக்குக் குறை நேராதபடி நகையாடல் வேண்டும்.

### சிறப்பு உள்ளுறைவகை நான்கு

**சினனே பேதைமை நிம்பிரி நல்குரவு**
**அனைநால் வகையும் சிறப்பொடு வருமே. (1190)**

சிறப்பு உள்ளுறை சினமிகுதி, அறியாமை, பொறாமை, வறுமை ஆகிய நான்கு வகைக் கருத்தையும் மிகுத்துக் கூற வரும்.

'சிறப்பு உள்ளுறை' ஒன்றை மிகுத்துக் கூறுவது. சினம், அறியாமை, பொறாமை (நிம்பிரி), வறுமை இவை நான்கையும் மிகுத்துக் கூற உள்ளுறை உதவும்.

### 'அன்னை' எனத் தலைவியும் தோழியும் அழைத்துக்கொள்ளுதல்; 'என்னை' என இருவரும் தலைவனைக் கூறுதல்

**அன்னை என்னை என்றலும் உளவே**
**தொன்னெறி முறைமை சொல்லினும் எழுத்தினும்**
**தோன்றா மரபின என்மனார் புலவர். (1191)**

தலைவி தோழியையும் தோழி தலைவியையும் 'அன்னை' என அழைத்துக் கொள்ளுவதுண்டு. அவர்கள் இருவரும் தலைவனை (என் ஐ) என் தலைவன் என்பதுண்டு. இவை தொன்மையான மரபுப்படி சொல், எழுத்து இலக்கணங்களில் இடம் பெறாதவை. எனினும் உலக வழக்குக் கருதி ஏற்கப்படும். (ஒப்பு நோக்குக. நூற்பா. 1166, 1167)

தோழி தலைவியையும் தலைவி தோழியையும் அன்னையே, அன்னாய், அம்மா என அழைத்துக் கொள்வதுண்டு. இருவருமே தலைவனை என் ஐ (என் தலைவன்) என்பதுண்டு. இவை பழைய மரபுப்படி சொல்லிலக்கணம், எழுத்திலக்கணத்தில் இடம் பெறாதவை, எனினும் ஏற்கப்படும்.

### கட்புலனாகாத உள்ளத்து உணர்ச்சிகள் பாடலில் இடம்பெறும் அருவப் பொருள்கள்

**ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா**
**கற்பும் ஏரும் எழிலும் என்றா**
**சாயலும் நாணும் மடனும் என்றா**
**நோயும் வேட்கையும் நுகர்வும் என்றாங்கு**
**ஆவயின் வரூஉம் கிளவி எல்லாம்**
**நாட்டிய மரபின் நெஞ்சுகொளின் அல்லது**
**காட்ட லாகாப் பொருள என்ப. (1192)**

உலகில் நுண்பொருள்களும் உள. அவை அருவப் பொருள்கள்; கண்ணுக்குத் தெரியாதவை. கருத்தால் மட்டுமே உணர முடியும். அவையாவன:

குண ஒப்புமையும் அறிவொப்புமையும் போல்வன. அச்ச உணர்வு (உரு), வெறுப்புணர்வு. கற்பு - மனஉறுதி, சொல் தவறாமை பற்றிய மனநிகழ்ச்சி. ஏர் - புதிய பொலிவு. எழில் - ஒட்டுமொத்த அழகு. சாயல் - மயில் போல் அழகு என்பது சாயலழகு. நாணவுணர்வு. மடன் - மடப்பம். இளமையைக் காட்டும். நோய் -துன்பவுணர்வு. காம வேட்கை அல்லது விருப்ப உணர்வு. நுகர்வு - அனுபவித்தலால் தோன்றும் இன்பவுணர்வு. இவ்வாறு வரும் சொற்கள் எல்லாம் தொன்றுதொட்டு நிலைநாட்டிய மரபால் அல்லது நாட்டியத்தில் மெய்ப்பாடாக மட்டுமே காட்டும் மரபால் உணரினல்லது, கண்களுக்குப் புலனாகக் காட்ட இயலாதவை ஆகும்.

உலகில் சிலவற்றைக் கட்புலனாகப் பருப்பொருள்களாகக் காட்டுதல் முடியாது. அவை நுண்பொருள்கள்; அருவப் பொருள்கள். ஒப்பு - ஒப்புமை (குண ஒப்புமை, இயல்பு ஒப்புமை). உரு - அச்ச உணர்வு. வெறுப்பு - வெறுப்புணர்வு. கற்பு - மகளிர் மன ஒருமை. ஆடவர் சொல்லுறுதியுமாம். (மகளிர்க்கு மாந்தர்மாட்டு நிகழும் மனநிகழ்ச்சி என இளம்பூரணர் விளக்குவது அரியதொன்றாகும்.) ஏர் - புதிதாகத் தோன்றும் ஓர் அழகு. எழில் - உறுப்புக்கள் அளவான் அமைதலால் வரும் ஒட்டுமொத்த அழகு. சாயல் - மயில், மான் போலும் சாயலுள்ள அழகு. நாண் - வெட்கவுணர்வு. மடன் - மடப்பமுடைமை; இளமைத் தன்மையின் வெளிப்பாடு. நோய் - துன்பவுணர்வு. வேட்கை - காம விருப்பம். நுகர்வு - நுகர்வதனால் - அனுபவிப்பதால் ஏற்படும் உணர்வு. அவ்வாறு வரும் சொற்கள் எல்லாம் நாட்டிய மரபு - தொன்றுதொட்டு நிலை நிறுத்திய மரபு. நாட்டியத்தில் வரும் மெய்ப்பாடு போன்ற மரபுமாம். நெஞ்சு கொளல் - மனத்தால் மட்டுமே உணரப்படுதல்.

**இந் நுண்பொருள்கள் என்றென்றும் உள்ளனவே**
**கட்புலனாகாததால் இல்லை என்பது இல்லை**

**இமையோர் தேஎத்தும் எறிகடல் வரைப்பினும்**
**அவைஇல் காலம் இன்மை யான.** **(1193)**

அவை கட்புலனாகாததால் இல்லாதவை எனக் கூடா. ஏனெனில் தேவ உலகத்தும் அலை மோதும் கடல் சூழ்ந்த இவ்வுலகத்தும், அந் நுண்பொருள்கள் இல்லாத காலமே இல்லை. எங்கும் நிறைந்து உள்ளவை அவை.

இமையோர் தேஎம் - தேவருலகம். எறிகடல் வரைப்பு - அலைவீசும் கடலால் சூழப்பட்ட இவ்வுலகம் - இந் நுண்பொருள்கள் என்றும் இல்லாதன அல்ல; என்றென்றும் உள்ளனவே.

# களவியல், கற்பியல், பொருளியல்
# நூற்பா முதற்குறிப்பு அகரநிரல்

எண் - நூற்பா எண்


| | |
|---|---|
| அச்சமும் | 1045 |
| அந்தமில் | 1188 |
| அம்பலும் | 1085 |
| அருள் முந்துறுத்த | 1107 |
| அலரின் | 1109 |
| அல்லகுறி | 1079 |
| அவன் அறிவு | 1093 |
| அவன் குறிப்பு | 1105 |
| அவன் சோர்பு | 1120 |
| அவன் வரம்பு | 1066 |
| அறக்கழிவு | 1163 |
| அறத்தொடு | 1151 |
| அன்னை என்னை | 1191 |
| அன்பு தலை | 1125 |
| அன்புறு தகுந | 1176 |
| அன்பே அறனே | 1160 |
| அன்ன வகையான் | 1074 |
| ஆங்காங்கு | 1080 |
| ஆய்பெரும் | 1070 |
| ஆற்றது | 1116 |
| ஆற்றினது | 1082 |
| இசைதிரிந்து | 1141 |
| இடித்து வரை | 1101 |
| இமையோர் | 1193 |
| இரந்துகுறை | 1182 |
| இரவுக் குறியே | 1077 |
| இருவகைக் | 1053 |
| இறைச்சி | 1174 |
| இறைச்சியில் | 1175 |
| இன்பமும் | 1038 |
| உடம்பும் | 1148 |
| உடனுறை | 1187 |
| உணர்ப்பு | 1102 |
| உண்டற்கு | 1158 |
| உயர்ந்தோர் கிளவியும் | 1162 |
| உயர்மொழிக் கிளவியும் | 1185 |
| உயர்மொழி | 1183 |
| உயிரினும் | 1059 |
| உயிரும் | 1146 |
| உழைக்குறும் | 1117 |
| உறுகண் | 1184 |
| உற்றுழி | 1153 |
| எண்ணரும் | 1121 |
| எல்லா | 1124 |
| எல்லாவுயிர்க்கும் | 1168 |
| எளித்தல் | 1152 |
| ஏனைப்பிரிவும் | 1136 |
| ஒப்பும் | 1192 |
| ஒருசிறை | 1149 |
| ஒருதலை | 1170 |
| ஒருபாற்கிளவி | 1167 |
| ஒன்றே | 1039 |
| கரணத்தின் | 1092 |
| கழிவினும் | 1099 |
| களவு அலர் | 1061 |
| களவும் கற்பும் | 1108 |
| கற்பும் காமமும் | 1098 |
| கற்புவழி | 1178 |
| கற்பெனப்.. | 1088 |
| கனவும் | 1143 |
| காமக்கடப்பினுள் | 1106 |
| காமக்கூட்டம் | 1065 |
| காமத்திணை | 1054 |
| காமம் சான்ற | 1138 |
| காமம் செல்லா | 1055 |
| காமநிலை | 1123 |
| கிழவி முன்னர் | 1127 |
| கிழவி நிலையே | 1132 |
| கிழவோள் பிறள் | 1179 |
| கிழவோன் | 1063 |
| கிழவோன் விளை.. | 1110 |
| குறித்தெதிர் | 1129 |

| | |
|---|---|
| குறிப்பே | 1043 |
| குறியெனப் | 1076 |
| குறையுற | 1073 |
| கொடுப்போர் | 1089 |
| சிறந்துழி | 1040 |
| சினனே | 1190 |
| சுரமென | 1161 |
| சூழ்தலும் | 1072 |
| செய்பொருள் | 1177 |
| செலவிடை | 1131 |
| செறிவும் | 1154 |
| சொல்லிய | 1100 |
| சொல்லெதிர் | 1056 |
| தம்முறு | 1180 |
| தந்தையும் | 1083 |
| தற்புகழ் | 1126 |
| தன்வயின் | 1150 |
| தன்னுறு | 1064 |
| தாயத்தின் | 1166 |
| தாய் அறிவுறுதல் | 1084 |
| தாய்க்கும் கிளப்பின் | 1144 |
| தாய்க்கும் படினே | 1062 |
| தாய்போல் | 1119 |
| துன்புறு | 1130 |
| தேரும் | 1157 |
| தொல்லவை | 1114 |
| தோழிதானே | 1071 |
| தோழி தாயே | 1139 |
| தோழியின் | 1067 |
| தோழியுள்.. | 1095 |
| நட்பின் | 1146 |
| நாட்டம் | 1042 |
| நாற்றமும் | 1060 |
| நிகழ்தகை | 1173 |
| நிலம் | 1115 |
| நோயும் | 1142 |
| பகற்புணர் | 1078 |
| பண்பில் | 1049 |
| பரத்தை | 1104 |
| பரத்தைவாயில் | 1169 |
| பன்னூறு | 1069 |
| பாங்கன் | 1050 |
| பால்கெழு | 1145 |
| பின்முறை | 1118 |
| புணர்ந்துடன் | 1094 |
| பூப்பின் | 1133 |
| புலத்தலும் | 1097 |
| புறத்தோர் | 1122 |
| பெருமையும் | 1044 |
| பெறற்கரும் | 1096 |
| பொய்யும் | 1091 |
| பொருளென | 1159 |
| பொழுதுதலை.. | 1181 |
| பொழுதும் பொருள என்ப | 1155 |
| மங்கல | 1189 |
| மறைந்த | 1081 |
| மறைந்தவற்.. | 1057 |
| மனைவி | 1172 |
| மனைவி தலைத்.. | 1111 |
| மனைவி முன்னர் | 1112 |
| மிக்க | 1164 |
| முதலொடு | 1052 |
| முந்தாள் | 1068 |
| முயற்சி | 1075 |
| முறைப்பெயர் | 1165 |
| முன்னிலை | 1047 |
| முன்னிலைப்புற | 1113 |
| முன்னைய மூன்றும் | 1051 |
| மெய்தொட்டு | 1048 |
| மேலோர் உண்டே | 1090 |
| மொழி எதிர் | 1128 |
| யாறும் | 1137 |
| வண்டே | 1041 |
| வண்ணம் | 1147 |
| வருத்தம் | 1171 |
| வரைவிடை | 1058 |
| வாயிற்கிளவி | 1186 |
| வினைவயின் | 1140 |
| வெளிப்பட | 1086 |
| வெளிப்படை | 1087 |
| வேட்கை | 1046 |
| வேட்கை மறுத்து | 1156 |
| வேண்டிய | 1134 |
| வேந்துறு | 1135 |

மீனாட்சி
புத்தக நிலயம்